

# வேதாகமமும்

# சம்பவங்களும்

பகுதி-2

## முன்னுரையாக சில நிமிடங்கள்:

இம்மட்டும் எபிநேசராக வெளிப்பட்டு
"வேதாகமமும் சம்பவங்களும் – பகுதி 1,
விதைகள் பகுதி – 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11" யும் எழுத
தேவன் உதவி செய்தார்.

விதைகள் 1, 2, 3, 4, 5 பகுதிகள்
பழைய பிரமாணத்தின்
(மோசேயின் பிரமாணம், நியாயப்பிரமாணம், கிரியை பிரமாணம்)
அடிப்படையில் எழுதப்பட்டது.
நான் சிவப்புக் கண்ணாடி அணிந்திருந்த
காலகட்டம் அது.

வேதாகமமும் சம்பவங்களும் – பகுதி 1ம்
அதே சிவப்பு கண்ணோட்டத்துடன்
எழுதப்பட்டது தான்.
விதைகள் 6, 7, 8, 9, 10, 11 பகுதிகள்
புதிய பிரமாணத்தின் (கிறிஸ்துவின் பிரமாணம், விசுவாசப்பிரமாணம், கிருபை பிரமாணம், நீதி பிரமாணம்)
அடிப்படையில் எழுதப்பட்டது.

நான் சிவப்பு கண்ணாடியை கழட்டிவிட்டு, பச்சைக்கண்ணாடி அணிந்து எழுதிக் கொண்டிருக்கும் கால கட்டம் இது.

வேதாகமமும் சம்பவங்களும் – பகுதி 2

புதிய பிரமாணத்தின் பச்சைக் கண்ணோட்டத்தில் இருக்கும்...
வாசியுங்கள் புரியும்...
கர்த்தருடைய ஆவியானவர் உதவி செய்வாராக.
ஆமென், அல்லேலூயா!

உங்களது சந்தேகங்கள் – கேள்விகள் – ஆலோசனைகள்
ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள்.
தொடர்பு கொள்ளுங்கள்.

**எங்கள் முகவரி:**

சகோதரி. **லதா டேவிட்**

**நித்தியர் இயேசு ஊழியங்கள்**

5-A/233, கால்டுவெல் காலனி 2-ம் தெரு கிழக்கு,
தூத்துக்குடி-628 008
போன்: 91+461-3209737
அலைபேசி: +0-9003456506 & +0-9442466250

**Our Address:**

**Sis. LATHA DAVID**

**SOVEREIGN JESUS MINISTRIES**

**5-A/233, CALDWELL COLONY**
**SECOND STREET (EAST) :: TUTICORIN-628 008**
Email : sovereignjesus@gmail.com
sovereignjesus@hotmail.com

Web : www.tamilchristian.com/ebook/index.html

## புத்தகத்தின் சாராம்சம்:

பூமி உருவாகி சுமார் 6500 வருஷங்களில் (6500 – 8000 வரை கணிக்கிறார்கள்) பூமியின் மீது சாப வேகத்தால் எத்தனையோ மாற்றங்கள் நடந்து வருகின்றன. பூமி தன் மகிமையை இழந்ததால் அதன் தன்மை பாதிப்பிற்குள்ளானது. பூமி தன்னுடைய அழகை, ஆற்றலை, பரிசுத்தத்தை, சுகாதாரத்தை, வல்லமையை, சந்தோஷத்தை, சமாதானத்தை, சுகத்தை, ஐஸ்வரியத்தை, இன்னும் எதையெல்லாமோ இழந்து போனது.

ஆதாம், ஏவாளின் மீறுதலினால் பூமியின் ஆசீர்வாதம் எதிர்மறையாக திருப்பப்பட்டது. **(Counter-clock-wise)** அந்த எதிர்மறையான காரியத்தைத்தான் வேதம் சாபம் என்று குறிப்பிடுகிறது. மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று. தேவன் பூமியை சபிக்கவில்லை. யுகாயுகங்களாக தன்னுடைய மனதில் திட்டமிட்டு, முடிவில் அதை வார்த்தையாக வெளிப்படுத்தி (பேசி) உருவாக்கிய இவ்வளவு பிரமாண்டமான பூமியை அவர் சபிப்பாரா? நிச்சயமாக இல்லை. சாபமே இல்லாத பரலோகத்தில் இருந்து கொண்டு பூமியை தேவனால் சபிக்கமுடியாது. (பூமி 6,00,00,000,00,00,000,00,00,000 டன் எடையுடையது – ஆறு கோடி கோடி கோடி)! இப்படி பூமி சாபத்திற்குள்ளாகிப் போனதால்; பூமியின் மீது என்னென்ன நடக்கும் என்பதைத்தான் தேவன் ஒரு சிறு பட்டியலாக தருகிறார் ஆதியாகமம் 3–ஆம் அதிகாரத்தில். அதற்காக தேவன் இதையெல்லாம் செய்தார் என்று அர்த்தமாகுமா? தேவன் நல்லவர், அவருடைய பரலோக இராஜ்ஜியத்தில் நல்லதைத் தவிர எதுவுமில்லை. அங்கே இருந்த நல்ல காரியங்களைக் கொண்டுதான் (நல்ல வார்த்தைகளை) பூமியையும் அதன் நிறைவையும் உருவாக்கினார். அதனால் தான் எல்லாம் நன்றாக இருந்தன.

தேவனுடைய வார்த்தையின்படி ஆதாமும் ஏவாளும் நடந்து கொண்டிருந்தபோது; தேவனுடைய நல்ல வார்த்தையின் வல்லமையினால் பூமியில் நல்லவைகளே நடந்து கொண்டிருந்தது. ஆசீர்வாதம் என்ற பிரமாணத்தின்படி பூமி ஒழுங்கும் கிரமமுமாக இயங்கி வந்தது. சாத்தானுடைய வார்த்தைகள் உள்ளே வந்த போது தான் தலை மேலே இடி விழுந்த கதையாகி விட்டது! குருவித் தலை பனங்காயாக இந்த சோகம் மனுக்குலத்தை காயப்படுத்திவிட்டது; இல்லையில்லை நசுக்கிவிட்டது. சாத்தான் தேவனுக்கு எதிர்மறையானவன் என்பதால், அவனுடைய வார்த்தைகளும் அப்படியே இருந்தன. அதாவது கெட்டதாக இருந்தது... அதனால் சாப பிரமாணத்தின்படி இயங்கும்படி அது பூமியை திருப்பிவிட்டுவிட்டது அவ்வளவு தான். ஆ ... ஊ ... என்றால் உடனே தேவனுடைய தலையின் மேல் பழியைத் தூக்கிப் போட்டு தப்பித்துக் கொள்வது மனுஷனுக்கு பழக்கமாகிவிட்டது. அதை சுமப்பதொன்றும் தேவனுக்கு கடினமல்லவென்பதால்; போனால் போகிறது என்று சுமந்து வருகிறார்.

*“அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் ... சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்;*

*உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்...*

*அவர் ஸ்தீரியை நோக்கி; நீ கர்ப்பவதியாய் இருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார்.*

*... ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார். (ஆதி. 3: 14–19)”*

சாபமான பூமி மனிதனுக்கு சாதகமாக இல்லை, இயற்கையை எதிர்த்து போராட

ஆரம்பித்தான். வேறு வழியில்லை, இயற்கையை அழித்தால் தான் மனிதனால் உயிர்வாழ முடியும் என்ற சூழ்நிலை உருவானது. உலகத் தோற்ற முதற்கொண்டு (சுமார் 6500 ஆண்டுகளாக) மனிதன் பூமியை சிதைத்தான்; அந்த சிதைவிலிருந்து தன் வாழ்க்கைக்குத் தேவையானதை பெற்றுக் கொண்டான். மனிதனைக் குற்றம் சொல்வதற்கில்லை, வேறு வழியில்லாமல்தான் மனிதன் அவ்விதம் செய்கிறான். இதனால் பூமி மறுசுழற்சிக்குள்ளானது **(Recycling).** ஒரு சந்ததி வாழ்ந்து முடித்தது; அது கழித்த கழிவிலிருந்து அடுத்த சந்ததி தனக்குத் தேவையான வாழ்வாதாரங்களைப் பெற்றுக் கொண்டது. இதே நிகழ்வு சந்ததி, சந்ததியாக தொடர்ந்து 6500 வருஷங்கள் இந்த பூமியின் மேல் ஓடியிருக்கின்றன. இதனால் பூமியின் தரம், சுகாதாரம், செழுமை, சக்தி எல்லாமே வரவர குறைந்து ... இக்காலங்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. ஏசாயா தீர்க்கதரிசி இதைக்குறித்து: *"... கீழே இருக்கிற பூமியையும் நோக்கிப்பாருங்கள்; ... பூமி வஸ்திரத்தைப்போல் பழசாய்ப்போம்; அதன் குடிகளும் அப்படியே ஒழிந்து போவார்கள்; ஏசா. 51:6"*

இந்தக் காரியத்தை பார்த்துத்தான் சிவப்பு கண்ணாடியை மாட்டிக்கொண்டு சாலமோன் ஞானி அங்காலாய்க்கிறார்! *"சூரியனுக்கு கீழே (பூமியின் மேலே) செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; ... எல்லாம் மாயையும், **(vanity)** மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது."*

*"கோணலானதை **(informal)** நேராக்கக்கூடாது; குறைவானதை எண்ணிமுடியாது. (பிர. 1: 14, 15)"*

சாபம் கிரியை செய்துக் கொண்டிருக்கும் பூமியை மனிதன் தாக்கி, அழித்ததால் 6500 ஆண்டுகளாக ஏற்பட்ட குறைபாடுகளை கணக்கிட்டால் நிச்சயமாக அது ஒரு அசுர எண்ணாகத்தான் இருக்கும் (முன் பக்கத்தில் குறிப்பிட்ட பூமியின் எடையைப் போல). பூமியின் மீது ஏற்பட்ட மறுசுழற்சியில் கார்பன் – டை – ஆக்சைடின் **(Carbon di-oxide)** சுழற்சியும் ஒன்று. கார்பன்–டை–ஆக்சைடு பூமிக்கும், வளிமண்டலத்திற்கும், கடலுக்கும், தாவரங்களுக்கும், விலங்கினங்களுக்கும் இடையே சுழன்று சுழன்று காலநிலை மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இந்த சுழற்சி உலகத்தோற்றமுதல் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. பெட்ரோல், இயற்கை வாயு, நிலக்கரி போன்றவற்றிலிருந்து மனிதன் சக்தியை வெளிப்படுத்தும்போது கார்பன்–டை–ஆக்சைடும், மீத்தேனும் உருவாகிறது. இவை காற்றில் கலந்து சூரிய வெளிச்சத்தை தடுத்து, மந்தமான காலநிலையை உருவாக்குகிறது.

தாவரங்கள், ஆல்காக்கள் மற்றும் சில பாக்டீரியாக்கள் வளிமண்டலம் அல்லது கடலிலிருந்து கார்பன்–டை–ஆக்சைடை எடுத்துக் கொண்டு அதைச் சர்க்கரையாக மாற்றி தங்களுக்குத் தேவையான பச்சையான உணவை ஒளிச்சேர்க்கை **(Photosynthesis)** மூலம் தயாரிக்கின்றன. விலங்குகள் சர்க்கரையை சாப்பிட்டு சக்தியை பெற்று கார்பன்–டை–ஆக்சைடை சுவாசிக்கும்போது வெளிப்படுத்துகின்றன. விலங்குகள், தாவரங்கள் இறந்தபின் புதைக்கப்படுகின்றன. நுண்ணுயிரிகளால் அவை மண்ணோடு மண்ணாக மட்கிப் போகின்றன. அப்போது மீத்தேனும், கார்பன்–டை–ஆக்சைடும் வெளிப்படுகின்றன. தாவரங்களும், விலங்குகளும் பூமியில் புதையுண்டு மட்கி ஹைட்ரோகார்பன்களாக **(hydrocarbon)** மாறுகின்றன. இவை நீண்ட சங்கிலித் தொடராகி நிலக்கரி மற்றும் பெட்ரோல் போன்ற எரிபொருள்கள் கிடைக்கின்றன. மீண்டுமாக இவை மனிதனால் சக்தியாக மாற்றப்படுகின்றன, தாவரங்கள் அதை இழுத்துக் கொண்டு வளர்கின்றன, விலங்குகள் அதை மேய்கின்றன ... இதை கார்பன் சுழற்சி என்கின்றனர். காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டுப் போனதால் இந்த பிரச்சனை தலைதூக்கி பூமியின் வெப்பநிலையை அதிகப்படுத்திவிட்டது. இதனை குளோபல் வார்மிங் **(global warming)** புவி வெப்பமயமாதல் என்கிறோம்.

இதனால் துருவப் பிரதேசங்களின் பனிப்பாறைகள் உருகி, கடல் நீர் மட்டம் உயர்கிறது. சம நிலை பாதிக்கப்படுவதால் கடல்வாழ் உயிரினங்கள் அழியும் சூழ்நிலை உருவாகிறது. பருவநிலை பாதிப்படைவதால் மழை குறைகிறது ... இப்படியாக, பல ரீதிகளில் இந்த சங்கிலித் தொடர் நீண்டுகொண்டே போய், முடிச்சு விழுந்து, குரல் வளையை நெரிக்கிறது!

*"வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துக்களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம். லூக். 21:26"*

*"பூமியின் மனிதர்களை, முக்கியமாக விஞ்ஞானிகளை பயமுறுத்தும் விஷயங்கள் எதுவானாலும் அதற்கான பரிகாரம், திருத்தம், மருந்து எல்லாம் (remedy) சத்தியத்தை அறிந்த (புதிய பிரமாணத்தின், பச்சைக் கண்ணாடி கண்ணோட்டத்தில், வேதத்தின் இரகசியங்களை அறிந்த) தேவனுடைய சொந்தப் பிள்ளைகளாகிய நம்மிடம் உண்டு."* விஞ்ஞானிகளிடமோ, உலக ஞானிகளிடமோ, உலக மனிதர்களிடமோ, பெயர்க்கிறிஸ்தவர்களிடமோ, நியாயப்பிரமாண கிறிஸ்தவர்களிடமோ நிச்சயமாக இதற்கான பரிகாரம் இல்லை. வேத வசனங்களை விஞ்ஞான பூர்வமாக நிரூபிப்பது நல்லதுதான்; விசுவாசத்தைக் கட்டியெழுப்ப அது ஓரளவுக்கு உதவலாம். என்றாலும் பூமியின் சாபத்தால் ஏற்பட்ட புவி வெப்பமடைதல் பிரச்சனையை மட்டுமல்ல, சகல பிரச்சனைகளையும் சரிசெய்யக்கூடிய முக்கிய பொறுப்பில் நாம் வைக்கப்பட்டிருக்கிறோம். தேவன் அர்த்தமில்லாமல் நமக்கு வெளிப்பாடுகளைத் தரவில்லை, நேரப்போக்குக்காகவும், பெருமையடித்துக் கொள்வதற்காகவும் நாம் அதை பெற்றுக் கொள்ளவுமில்லை.

*"முன் நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது; இனி நடக்கப்போகிறதும் முன்னமே நடந்தது; ... பிர. 3: 15"* ஆனால் சாலமோன் ஞானியினுடைய கண்ணோட்டம், இக்காலத்திய நமக்குப் பொருந்தாது. நாம் புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; புதிய பிரமாண கண்ணோட்டம் தேவை. இயேசு சிலுவையில் நம் பாவம், சாபம், வியாதி, தரித்திரத்தில் இருந்து விடுதலையை ஏற்படுத்தினார். பூமியின் சாபம் மாறுவதன் மூலம் தான் இதெல்லாம் நமக்கு சாத்தியமாகும். அதாவது **indirect** ஆக பூமியின் சாபத்தைத்தான் மாற்றினார் என்று பார்க்கிறோம். பூமி மீண்டுமாக **anti-clock - wise** ஆகி ஆரம்ப நிலையை அடைவதற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்கினார். வார்த்தையால் கெட்ட பூமியை வார்த்தைகளால் தான் சரி செய்ய முடியும். (முள்ளை முள்ளால்தான் எடுக்க முடியும்) அதனால் வார்த்தைகளை அனுப்புவோம்; வேத வசனங்களை ஆராய்ந்து பார்த்து பூமியின் பிரச்சனைகளை சரி செய்யக்கூடிய வார்த்தைகளை எடுத்து, இருதயத்தில் உள்வாங்கி, விசுவாசித்து, அதையே பேசுவோம். நாம் பேசியது நடக்கும் என்று இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசிப்போம், நாம் பேசியபடியே நடக்கும், பூமி மாறும். பிரச்சனைகளையே பேசிக்கொண்டிருந்தால் பிரச்சனைகள் பூதாகரமாகி (பெரிதாகி) அழிவுகளை அதிகப்படுத்தும். பிரச்சனைகளைத் தீர்க்க கூடிய வேத வார்த்தைகளையே பேசிக்கொண்டிருப்போமானால் வார்த்தைகள் பூதாகரமாகி (பெரிதாகி) பிரச்சனைகளை மேற்கொண்டு அழிக்கும்.

## செயற்கை மேகங்கள்:

பூமி வெப்பமடைவதால் ஏற்படும் ஆபத்துக்களைத் தடுக்க புதிய திட்டம் ஒன்றில் இங்கிலாந்து அரசு இறங்கியுள்ளது. செயற்கை மேகங்களை உருவாக்கி பூமியை குளிர்விப்பது இதன் நோக்கமாகும். இதற்காக விசேஷ படகுகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. மிக உயரமான திருகு வடிவ குழாய்கள் இதில் பொருத்தப்படுள்ளது. படகில் உள்ள மோட்டார்கள் கடல் நீரை உறிஞ்சி இந்த குழாய்கள் மூலம் வானத்தில் பீய்ச்சி அடிக்கும். அது காற்றுடன் கலந்து கரும் மேகங்களை உருவாக்குகிறது; படிப்படியாக செயற்கை மேகங்களை உருவாக்கிவிட முடியும். இதே போல 2000 படகுகளை பசிபிக் பெருங்கடலில் நிறுத்தி செயற்கை மேகங்களை உருவாக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கான செலவு மதிப்பீடு 4000 கோடி ரூபாயாகும்! இந்த திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் செயற்கை மேகங்கள் சூரியனின் கதிர்வீச்சுக்களை தடுக்கும் ஒரு போர்வை போல செயல்படும். மழையை பொழிவிப்பதால் பூமி குளிர்ச்சியடையும், கார்பன்—டை—ஆக்சைடு உமிழ்வையும் கட்டுப்படுத்தும்.

எரிமலைகளின் தாக்குதலைத் தடுப்பதற்காக பனிப்பொழிவை ஏற்படுத்தும் திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது. அந்தத் திட்டத்தைவிட இந்தத் திட்டத்திற்கு செலவு குறைவு என்றும், ஆனால் பலன் பல மடங்கு அதிகம் என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள். மனித சமுதாயத்திற்காக எவ்வளவு விலையையும் கொடுக்கலாம் என்று கூறும் திட்ட வல்லுனர்கள்; இது மட்டும் நிரந்தரத் தீர்வைத் தராது; இன்னும் போதுமான பல நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியம் என்று அறிவுறுத்துகின்றனர்.

தேவன் நமக்கு இலவசமாக தந்த "இயற்கை"யை செயற்கையாக உருவாக்க முயற்சிக்கும் போது அதற்கான செலவு தொகை மகா பிரம்மாண்டமான ஒன்றாகி விடுகிறது. அப்படியே செலவு செய்தாலும் அது தேவன் பூமியின் மீது ஆரம்பத்தில் செய்திருந்த இயற்கையான

காரியங்களை மீண்டுமாக 1% ஆவது கொண்டு வருகிறதா என்றால்; அதுவும் இல்லை!

*"... தேவன்: ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னர். தேவன் ஆகாயவிரிவை உண்டுபண்ணி, ஆகாயவிரிவுக்கு கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார்; அது அப்படியே ஆயிற்று. ஆதி. 1: 6, 7"*

ஆரம்பத்தில் தேவன் பூமியை சுற்றிலும் ஒரு ஜலத்திரையை **(water canopy)** உருவாக்கியிருந்தார் என்பதை வசனத்தின் மூலமாக அறியலாம். அந்த அற்புதமான ஜலத்திரை பல்லாயிரம் மைல் தூரத்திற்கு பரவியிருந்தது. இது பூமிக்கு ஒரு பாதுகாப்பு கவசம் போல கொடுக்கப்பட்டிருந்தது. இதன் வழியாக சூரியனின் கதிர்கள் கசிந்தன. அதனால் பூமியை வெப்பம் தாக்கவில்லை, அதன் குளிர்தன்மை ஒரே சீராக இருந்தது. பனிக்கட்டி உருகும் வாய்ப்பும் இல்லை, கடல் மட்டமும் உயரவில்லை, சுனாமியும் இல்லை! ஏதேனில் மனிதன் இருந்த சமயத்தில் பூமியின் மீது சாபமில்லை, அதனால் அது தன் விளைச்சலை மிக எளிதாகக் கொடுத்தது. மனிதன் பூமியைத் தாக்க வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது. அதனால் பூமி கெடுக்கப்படாமல், அப்பழுக்கில்லாமல் கண்களால் காணக்கூடிய பரலோகமாகவே இருந்தது. மனிதன் விழுந்து; பூமியின் மீது சாபம் என்ற மண்ணை அள்ளி போட்ட பிறகும், நோவா கால வெள்ளம் வரைக்கும் இந்நிலை நீடித்தது. நோவா கால வெள்ளத்தில் இந்த ஜலத்திரை உடைக்கப்பட்டு தண்ணீராக பூமியின் மீது ஊற்றப்பட்டது. இப்போது அந்த தண்ணீரெல்லாம் கடலில் தான் இறுக்கமடைந்த நிலையில் இருக்கிறது.

இயேசுவை ஏற்றுக் கொண்டு, வெளிப்பாட்டைப் பெற்ற விசுவாசப் பிள்ளைகளான நமக்கு இந்த உண்மை தெரிகிறது. ஆனால் உலக மனிதனுக்கு – தேவனை அறியாத ஆராய்ச்சியாளர்களுக்கு இதைப் பற்றி எதுவும் தெரியாது. என்றாலும் கிட்டத்தட்ட அப்படிப்பட்ட ஜலத்திரையைத்தான் அவன் செயற்கை மேகம் என்ற பெயரில் அமைக்க முயற்சிக்கிறான். எந்தவொரு மனிதனும் – அவன் தேவனை அறியாதவனாக இருந்தாலும் சரி; தேவனைப் போல தான் இருக்கிறான். தேவன் தன்னுடைய சாயலாகத்தான் மனிதனை உருவாக்கியிருக்கிறார். அதனால் தான் அவனையும் அறியாமல் தனக்குள் பதிக்கப்பட்டிருக்கும் தெய்வத்துவத்தின் இயல்புகளை, சிந்தனைகளை, செயல்பாடுகளை வெளிப்படுத்துகிறான். ஒவ்வொரு புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் மூலமாகவும் மனிதன் ஏதேனை நோக்கித்தான் பயணிக்க முயற்சிக்கிறான். மெல்ல மெல்ல பூமியின் ஆரம்ப சூழ்நிலைக்கு உந்தித் தள்ளப்படுகிறான்... காய்களை நகர்த்துகிறான்... படிப்படியாக காலெடுத்து வைக்கிறான்.

பூமியில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் நன்றாக இருக்க வேண்டும், நல்வாழ்வு கிடைக்க வேண்டும் என்றே ஆசைப்படுகிறான். எந்தவொரு குறைவுமில்லாமல், சகல வசதிகளுடன் சந்தோஷமாக தன் வாழ்நாட்களை கழிக்க வேண்டும் என்றே ஏங்குகிறான். இதில் தவறு இருப்பதாக எப்படிச் சொல்ல முடியும். மனிதன் தன்னை உருவாக்கியவரைப் போலவே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதில் தவறென்ன? இந்த நியாயமான ஆசையுடனேயே மனிதன் இயற்கையுடன் போராடி புதிது புதிதாக எதையெதையோ கண்டுபிடிக்கிறான். தேவனை அறியாத ஆய்வாளர்களின் இந்த தேடல் முயற்சி சில மைல் கற்களுடன் நின்று போகிறது.

*"... என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. யோவா. 15:5"* என்றார் இயேசு! அறிவியல் ரீதியிலான கண்டுபிடிப்புகள் நல்லது தான்... வரவேற்கிறோம். நான் கூட மிக அற்புதமான ஒரு விஞ்ஞான கருவியின் முன் உட்கார்ந்து தான் இந்தப் புத்தகத்தை (வெளிப்பாடுகளை – இரகசியங்களை – சுவிசேஷத்தை) உங்களுக்குத் தந்து கொண்டிருக்கிறேன். ஆனால் இயேசுவுடன் சேர்ந்து செயல்படாததினால், அவரைக் குறித்ததான அறிவு இல்லாததினால் மனிதனின் ஆசைகள் முழுமையடையாமல் போகின்றன. இயேசுவை உள்ளே வர அனுமதித்தால் மனிதனால் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமிருக்காது. வாசலுக்கு வெளியே நின்று கதவைத் தட்டிக்கொண்டிருக்கும் இயேசுவின் படத்தை கிறிஸ்தவ வீடுகளில் பார்த்திருப்பீர்கள். அவர் யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. தன்னைப் போலவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் மனிதனை அவர் மதிக்கிறார். மனிதனின் அனுமதியை மீறி தேவன் உள்ளே நுழைவதும் இல்லை, ஏனென்றால் தேவன், பூமியின் மீது மனிதனுக்குத்தான் ஆளுகையை **(dominion)** கொடுத்திருக்கிறார். பூமியையும் நானே ஆளுகை செய்து கொள்கிறேன் என்று அவர் சொல்லவில்லை. தன்னையே

யார் என்று தெரிந்து கொள்ளாத மனிதனின் கண்டுபிடிப்புகள் இலக்கை அடையாமல் போவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

*"... தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை (முதல் மனிதர்களான ஆதாமையும், ஏவாளையும்) ஆசீர்வதித்தார். ஆதி 1:28"* பரலோகத்தின் விரிவாக்கமான பூமி நிச்சயம் பரலோகம் போலத்தான் இருந்திருக்க வேண்டும். பரலோகம் போலவே இருக்கும் பூலோகத்தை ஆளுகை செய்யும் மனிதர்கள் தன்னைப் போலவே இருக்க வேண்டும் என்பதற்காகக் கொஞ்சம் கூட தரத்தைக் குறைக்காமல், நம்மை அப்படியே தன்னைப் போலவே சிருஷ்டித்தார் தேவன்! வேதம் மனிதர்களை தேவ புத்திரர்கள் என்றும், தேவர்கள் என்றும், தேவனுடைய பிள்ளைகள் என்றும், ஒரு இடத்தில் இயேசு (வசனம்) என்றும் அழைக்கிறது!

ஆனால் மனிதர்கள் கோபத்தில் ஒருவரையொருவர் திட்டிக்கொள்வதைப் பார்த்தால் ... பேயே, பிசாசே, பிசாசின் மகனே, குட்டிச்சாத்தானே, கொள்ளிவாய் பிசாசே, இரத்தக்காட்டேரி என்று! தன்னைப் பற்றி இப்படி எதிர்மறையாகப் புரிந்து வைத்திருக்கும் மனிதனின் அறிவியல் கண்டுபிடிப்புகள் கேள்விக்குறியாகிப் போனதில் ஆச்சரியம் எதுவுமில்லை. ஏதேனை நோக்கி பயணிக்க முயற்சிக்கும் ஒவ்வொரு விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் திசை மாறி, பாதை மாறி, தடம் புரண்டு, சொரி மணலுக்குள் பாய்ந்தது. நீ உன்னையறிந்தால்... நீ உன்னையறிந்தால்... உலகத்தில் போராடலாம், தலை வணங்காமல் நீ வாழலாம் என்றான் உலக மனிதன். ஆனால் இயேசுவை ஏற்றுக் கொண்ட ஆவி மனிதனோ... நான் பாவி தான்... நான் தூசிதான்... நான் குப்பை தான்... நான் பூச்சி தான், புழு, மரவட்டை, தெள்ளுப்பூச்சி என்கிறான்! இதுவல்ல நம்முடைய பாடல், பாடலை மாற்றுவோம், புதிய பாடல்களை பாடுவோம்... நிச்சயமாக அறிவியல் உலகம் ஏதேனுக்குள் நுழையும். அல்லேலூயா.

வேதத்தில் பூமியில் நடந்த, நடக்கிற, நடக்கப்போகிற எல்லாவற்றையும் பற்றிய வசனங்கள் உண்டு. ஆனால் எல்லாவற்றையும் நாம் எடுக்க வேண்டிய அவசியமில்லை. நாம் நன்றாக இருப்பதற்கு தேவையான நல்ல, ஆசீர்வாதமான, வாக்குத்தத்த வசனங்களைத் தெரிவு செய்து எடுப்போம். அதையே விசுவாசித்து, அதையே பேசுவோம். பூமியில் நடக்கக்கூடிய காரியங்களைப் பற்றிய தீர்க்க தரிசனங்களிலும் அப்படியே நன்மையானதை தெரிந்தெடுப்போம்.

*"யாக்கோபு வேர் பற்றி, இஸ்ரவேல் பூத்துக் காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும். (வந்து விட்டது; அவை இந்நாட்களே) ஏசா. 27:6*

*இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? (நாம் உலகத்தை ஜெயிக்கிறோம்!) 1 யோ. 5:5"*

உலகத்தை நம் பொறுப்பில் விட்டிருக்கிறார்; அதைப் பாதுகாக்கும் சகல வல்லமையையும், ஞானத்தையும், வழிமுறைகளையும் தன்னுடைய ஆவியானவர் மூலமாக கற்றும் தந்திருக்கிறார். அப்படியிருக்க, உலகத்தாரைப் போல பூமிக்கு ஏதோ ஆபத்து நேரிடப்போவதாக நினைத்து நாம் பயந்து கலங்கத் தேவையில்லை. நாம் எதைப் பேசுகிறோமோ அதுதான் நடக்கும் என்பதை விதைகள் புத்தகங்களில் தியானித்து வருகிறோம். இதுநாள் வரையில் இந்த பூமியின் மீது அப்படித்தான் நடந்து வந்திருக்கிறது. பூமி வெப்பமடைதல் பிரச்சனை கூட அப்படித்தான். பூமி வெப்பமடைவது, பனிப்பாறைகள் உருகுவது, கடல் மட்டம் உயருவது, சுனாமி வருவது போன்ற காரியங்கள் கூட இப்படி பேசிப்பேசியே உருவாக்கிய காரியங்கள் தான் என்று அனுமானிக்கலாம். நன்மையானதை பேசினால் நன்மையானது நடக்கும்.

*"கர்த்தர் நன்மையானதைத் தருவார் ... சங். 85:12"* என்று தான் வசனம் இருக்கிறது. இல்லையே இந்த வசனத்திற்கு எதிர்பதமான அர்த்தம் வரும்படி வசனங்கள் இருக்கிறதே என்று எடக்குமடக்காக எதையாவது தூக்கிக் கொண்டு வராதீர்கள். முற்காலங்களில் நாம் சிந்தித்தது போலவே தேவனைப் பற்றி சரியாக புரிந்து கொள்ளாமல், சரியான வெளிப்பாடில்லாதவர்கள் பேசிய வார்த்தைகள் அவை. அவைகளும் வேதத்தில் தான் இருக்கின்றன. அவற்றை எல்லாம் எடுத்த இடத்திலேயே வைத்து விடுங்கள்; நன்மையானதைத் தருகிறோம் வாங்கிக்கொள்ளுங்கள்! பூமி வெப்பமயமாதல் என்ற வார்த்தையையும், அதைச் சார்ந்த சகல வார்த்தைகளையும் இயேசுவின்

நாமத்தினால் அழிப்போம்! (அழிக்கப்பட்டுப் போவதாக) மிகச் சுலபமான போராயுதங்களை (வார்த்தைகளை) தேவன் நமக்கு தந்திருக்கிறார். பேசக்கூடிய ஆவியாக நம்மை உருவாக்கியிருக்கிறார். வார்த்தைகளை வெளியே கொண்டு வர நம்முடைய கூடாரமாகிய சரீரத்தில் நாக்கு என்ற ஒரு உறுப்பையும் வைத்திருக்கிறார். (தீக்குச்சி இல்லாமலேயே பற்ற வைக்கும் பயங்கர நாக்கு இது!) பொறுப்பாகக் கையாண்டு பூமியை குளிர வைப்போம்.

விஞ்ஞானிகள் சொல்வதையெல்லாம் அப்படியே தூக்கி வாயில் போட்டு "லபக்"கென்று விழுங்க வேண்டும் என்ற அவசியமில்லை. நமக்கு தேவன் ஞானம் தந்திருக்கிறார், சித்த சுவாதீனத்தை தந்திருக்கிறார், பரிசுத்தாவியானவர் பிரகாசமுள்ள கண்களையும், வெளிப்பாடுகளையும், சுயாதீனத்தையும் தந்திருக்கிறார். என் வீட்டின் பின்புற வாசலில் உட்கார்ந்து ஒரு வேப்பமரத்தில் இருந்த காக்கை குஞ்சு ஒன்றைக் கவனித்துக் கொண்டிருந்தேன். பசியில் கத்திய அந்தக் குஞ்சுக்கு தாய்க்காகம் எதையோ கொண்டு வந்து வாய்க்குள் போட்டது. என்ன ஏது என்று பார்க்காமல் குஞ்சு அப்படியே விழுங்கி விடும் என்று தான், நான் நினைத்தேன். ஏனென்றால் இதுவரையில் நாம் பார்த்த காட்சிகள் அப்படித்தான் இருந்தன. ஆனால் விதிவிலக்காக இந்த காக்கை குஞ்சு அப்படிச் செய்யாமல், அதை கீழே துப்பி என்னவென்று கூர்ந்து பார்த்தது. பிறகு அதன் அம்மாவைப் பார்த்து "கா கா" என்றது! அது என்ன பேசினது என்பதை இங்கே மொழி பெயர்க்கிறேன்: "அம்மா அவ்வளவு ஈசியாக என்னை ஏமாற்ற முடியாது; நான் புதிய ஏற்பாட்டு கால காகமாக்கும் என்றது!" புதிய உடன்படிக்கையின் பிள்ளைகள் நாம்; விஞ்ஞானிகள் சொல்லுவதற்கெல்லாம் தலையாட்டி; நாம் தஞ்சாவூர் பொம்மைகளாக வேண்டிய அவசியமென்ன? உலகத்திலிருந்து எந்த செய்தி வெளிப்பட்டாலும்; அதை வேதத்தின் அடிப்படையில் ஆய்வு செய்து சரியானதை எடுக்க வேண்டும். இந்த விஷயத்தில் பரிசுத்தாவியானவர் உதவி செய்வார் என்பதில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது.

*"... நீ அவர்களுக்குப் பயப்பட வேண்டாம்; அவர்கள் வார்த்தைகளுக்கும் அஞ்சவேண்டாம்; ... எசே. 2:6."*

## காணாமல் போன மனிதன்:

மனிதன் உருவாகி மிகக் கொஞ்சக் காலத்துக்குள் காணாமல் போன சோகம் ஏதேனுக்குள் நடந்தது. தேவனுடைய நேரடி மேற்பார்வையில் இருக்குமட்டும் மனிதன் எந்தவொரு குறைவுமில்லாமல் தேவனைப் போலவே இருந்தான். காரணம் தேவனுடன் பேசி, நடந்து, அவருடைய வார்த்தையைக் கேட்டு அதன்படி வாழ்ந்து வந்தான் மனிதன். தேவன் ஆவியாயிருக்கிறார், அவருடைய வார்த்தை ஆவிக்குரியது (அதாவது ஆவி ரீதியிலானது, ஆவியின் தன்மையுடையது, பரலோகத் தன்மையுடையது, பார்க்க முடியாதது ஆனால் சக்தி வாய்ந்தது.) மனிதனும் ஆவிக்குரியவன்தான், கண்களால் காணக்கூடியவனல்ல! நாம் பார்ப்பது ஆவி மனிதன் தங்கும் கூடாரத்தைத்தான் (உடல்) என்பதை விதைகள் புத்தகத்தில் நிறையவே தியானித்திருக்கிறோம். என்றாலும் ஒவ்வொரு முறையும் சில விஷயங்களை உள்ளே புகுத்துவது **(insertion)** அவசியமாயிருக்கிறது. ஏனென்றால் உலகத்தின் ஆரம்பக்கட்டத்திலேயே சாபத்துக்குள்ளான பூமியில் அதற்கேற்றபடி வாழ, பழகிக்கொண்டான் மனிதன். கண்களால் காணக்கூடாத காரியங்களை அசட்டை பண்ணி; கண்களால் காணக்கூடிய பூமியின் மாயையான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து... இப்படியாக உருண்டு இக்காலகட்டம் வரைக்கும் வந்துவிட்டான்.

இப்போது நாம் பார்ப்பது ஆதியில் தேவன் உருவாக்கிய மனிதனை அல்ல! பாவத்தால் உருக்குலைந்து, தேவ சாயலை, மகிமையை இழந்து, தேவனுடைய ஞானத்தை, பலத்தை இழந்த வெறும் மனிதர்களைத்தான். சாபத்தால் தனக்கு எதிராக வந்த பூமியுடன் போராடி போராடி; பூமியைக் கெடுத்து, தானும் கெட்டு வாழ ஆரம்பித்தான். பூமியில் சாபத்தின் **ratio** (விகிதம்) அதிகரிக்க அதிகரிக்க மனிதன் அதற்கேற்றபடி தன்னையும், தன் வாழ்க்கை முறைகளையும், வாழ்வாதாரங்களையும் மாற்றியமைத்துக் கொண்டே இருக்கிறான், இன்றுவரை! இதை நாகரீக வளர்ச்சி என்றும், அறிவியல் முன்னேற்றம் என்றும் உலகம் சொல்லிக் கொள்கிறது. ஆனால் மனிதனின் இந்த அசுர வளர்ச்சி நன்மைக்கேதுவாக அல்ல, தீமைக்கேதுவாகவே பூமியை மாற்றியமைத்தது என்பதைப் பார்த்தாலே புரியும்! சாபத்தால் விபரீத மாற்றமடைந்த மனிதனின் வாழ்க்கையைத்தான் சாலமோன் ஞானி (பிரசங்கி) **skim** (மேலோட்டமாக) செய்திருக்கிறார்!

நாகரீக, மற்றும் விஞ்ஞான முன்னேற்றம் வளர வளர மனிதன் அவற்றிற்குள் தன்னைத் தொலைத்துக் கொண்டே இருந்தான்! ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்புகளுக்குள்ளும் மனிதனின் ஆற்றல், ஞானம், மகிமை, வல்லமை, தெய்வத்துவ குணாதிசயங்கள், ஆளுமை **(personality)** இப்படியாக மனிதனுக்குத் தேவன் ஆரம்பத்தில் கொடுத்திருந்த சகல மகத்துவங்களும் புதைக்கப்பட்டன. அவைகள் மனிதனைக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கி ஏப்பம் விட்டன! மனிதன் செய்ய வேண்டியதையெல்லாம் இயந்திரங்கள் செய்ய ஆரம்பித்தன. கடைசியாக இப்போது நாம் பார்ப்பது... மனிதனை அல்ல; மனித இயந்திரங்களை! இப்படியாகத் தன்னுடைய **originality**-ஐ இழந்தான். தன்னுடைய தெய்வத்துவத்தை இழந்த மனிதன்; ஆற்றல் இழந்த தன்னுடைய மூளையறிவினால் தான் புதிய கண்டுபிடிப்புகளுக்கு வித்திடுகிறான்! தேவன் மனிதனை எல்லா ரீதியிலும் தன்னைப் போலவேதான் உருவாக்கினார்; ஞானம் உட்பட! அதனால் தான் காலப்போக்கில் மூளை தன்னுடைய சக்தியை இழந்து கொண்டே வந்தாலும்; அற்புதமாக செயலாற்றுகிறது.

## வல்லமையின் இடிமுழக்கம்!:

மனிதனின் அறிவுத்திறன் மிகவும் ஆச்சரியப்படத்தக்க, ஆளை அசத்துகிற ஒன்றாக இருக்கிறது. விண்வெளியையும், வானமண்டலங்களையும், அவைகளிலுள்ள சூரிய, சந்திர, நட்சத்திரங்களையும், கிரகங்களையும், துணைக்கோள்களையும் குறித்த மனிதனின் ஆராய்ச்சிகள் நம்ப முடியாத அளவுக்கு பிரம்மிப்பூட்டுவதாக இருக்கிறது. சில வசனங்களைப் பார்ப்போம்:

*“நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; ... சங். 139:8”*

*“பாபிலோன் வானபரியந்தம் ஏறினாலும், ... அதைப் பாழாக்குகிறவர்கள் என்னிடத்திலிருந்து வருவார்கள் ... எரே. 51:53”*

*“அவர்கள் வானபரியந்தம் ஏறினாலும், அவ்விடத்திலிருந்து அவர்களை இறங்கப்பண்ணுவேன். ஆமோ. 9:2”*

*“நீ கழுகைப்போல உயரப்போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன் என்ற கர்த்தர் சொல்லுகிறார். ஒப. 1:4”*

*“கன்மலை வெடிப்புகளில் வாசம்பண்ணி, மேடுகளின் உச்சியைப் பிடித்திருக்கிறவனே உன்னால் உன் பயங்கரமும் உன் இருதயத்தின் அகந்தையும் உன்னை மோசம்போக்கிற்று; நீ கழுகைப்போல் உயரத்தில் உன் கூட்டைக் கட்டினாலும் அங்கேயிருந்து உன்னை விழப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரே. 49:16”*

*... இவைகள் அவருடைய கிரியையில் கடைகோடியானவைகள், அவரைக்குறித்து நாங்கள் கேட்டது எவ்வளவு கொஞ்சம்; அவருடைய வல்லமையின் இடிமுழக்கத்தை அறிந்தவன் யார் என்றான். யோபு. 26:14*

மனிதனின் விண்வெளி ஆராய்ச்சிகளைப் பற்றின தீர்க்கதரிசன வசனங்கள் இவை. தன்னைப் போலவே ஞானத்தைப் பெற்றிருக்கும் மனிதனின் வருங்கால செயல்பாடுகள் இப்படியாக இருக்கும் என்பதைத் தன் ஆவியானவர் மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறார். என்றாலும் மனிதனின் விண்வெளி ஆராய்ச்சிகள் வெற்றியடையாது என்பதாக வேதம் சொல்வதன் காரணம் என்ன? மனிதன் சந்திரனில் போய் இறங்கினான்... செவ்வாய் கிரகத்திற்கு ஆய்வுக்காக விண்கலங்களை அனுப்பினான்... சூரியனைப் பற்றியும், அதைச் சுற்றிவரும் சகல கிரகங்களைக் குறித்தும், அவற்றின் சந்திரன்களைக் குறித்தும் ஆராய்ச்சிகள் நடத்தினான். இந்த ஆய்வு நீண்டு நட்சத்திரங்களூடே சென்றது. பூமியைப் போலவே கிரகங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தான். விண்வெளியில் ஆராய்ச்சி மையங்களை ஏற்படுத்தி ஆய்வு நடத்தி வருகிறான். ஆயிரக்கணக்கான செயற்கைக் கோள்கள் பூமியை சுற்றி வருகின்றன. இந்தியா அனுப்பிய சந்திரயான்–1 விண்கலம் நிலவில் தண்ணீர் இருப்பதை கண்டுபிடித்திருக்கிறது.

என்றாலும் எல்லாமே சோதனைக் கட்ட முயற்சியில்தான் இருக்கிறது. எல்லாவற்றையும் தொலைநோக்கியின் மூலமாக பார்க்கிறான், ஆனாலும் முழுமையாக எதையும் தெரிந்து கொள்ள

முடியவில்லை, அடைய முடியவில்லை. சந்திரனில் போய் இறங்கினான் தான்; ஆனால் கூடுகட்ட (வசிக்க) முடியவில்லை. பல செயற்கைக் கோள்கள் செயலிழந்தன, எரிந்தும் விழுந்தன. பல ஆய்வுகள் இடையிலேயே நிறுத்தப்பட்டன. செலவைச் சமாளிக்க முடியாமல் பல ஆராய்ச்சிகள் தங்களை முடக்கிக்கொண்டன. பல பின்னடைவுகளால் பல நாடுகள் விண்வெளி ஆராய்ச்சிகளை நிறுத்தி வைத்தன. சில நாடுகள் பெயரளவில் ஈடுபட்டு வருகின்றன.

ஏன் இப்படி நடக்கிறது? மனிதன் விண்வெளி ஆராய்ச்சியில் முழு அளவில் வெற்றியடையாததற்கு என்ன காரணம்? மனிதன் வெற்றியடைந்திருப்பான் என்றால்; சூரிய மண்டலத்தைத் தாண்டி; பல மில்லியன் ஒளி வருடங்களைக் கடந்து சென்று, எங்கோ இருக்கும் பூமியையொத்த கிரகத்தில் தன் குடியிருப்பை அமைத்திருப்பான். பூமியும் மனிதனின் தாக்குதலால், மறுசுழற்சியினால், கார்பன்–டை–ஆக்சைடு பிரச்சனைகளால், இந்த அளவுக்குச் சீர்கெட்டுப் போகாமல் இருந்திருக்கும்.

உண்மையாகவே மனிதனுக்கு இதெல்லாம் சாத்தியம் தான்; ஏனென்றால் அவன் தேவனுடைய ஞானத்தை தனக்குள் பெற்றிருக்கிறான். ஆரம்பத்தில் அந்த ஞானம் மனிதனில் முழு அளவில் இயங்கிக் கொண்டிருந்தது. துரதிஷ்டவசமாக அது ஆதாம், ஏவாள் என்ற இரண்டு முதல் மனிதர்களோடு நின்று போனது! பூமி சாபத்துக்குள்ளானதும் இந்த ஞானத்தின் ஆற்றல் (மூளையின் அறிவாற்றல், நினைவாற்றல், செயல்பாடுகள்) ஒரேயடியாக இல்லாமல் போய்விடவில்லை, காலப்போக்கில் படிப்படியாக சந்ததி சந்ததியாக குறைவுபட்டுக் கொண்டே வந்தது. இக்கால கண்டுபிடிப்புகளைவிட மிக அற்புதமான அறிவியல் கண்டுபிடிப்புகள் அக்காலங்களில் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. (வேதாகமமும் சம்பவங்களும் பகுதி – 1) இயற்கை சீற்றங்களாலும், காலப்போக்காலும் அவைகள் அழிவுக்குள்ளாகின. என்றாலும் அந்த கண்டுபிடிப்புகளின் விதைகள் மீண்டும் மீண்டும் துளிர் விட்டன.

மனிதனால் முழு அளவில் இந்த விஷயத்தில் வெற்றி பெற முடியாமல் போனதற்கு காரணம் என்னவென்பதை வசனமே விவரிக்கிறது. *(எரே. 49:16).* அகந்தையும், இருதயத்தின் பெருமையும் என்று வேதம் காரணத்தைச் சொல்கிறது. தேவன் என்று ஒருவர் இல்லை என்ற கருத்து, எல்லாம் தானாக உருவானது என்ற கருத்தை உறுதிப்படுத்த ஏற்படுத்தப்பட்ட பரிணாம கொள்கைகள், மனிதனும் ஒரு விலங்குதான் என்ற எண்ணம் ஆகியவையே மனிதனைக் கெடுத்தன, கெடுக்கின்றன. தன்னுடைய முயற்சியினால், அறிவாற்றலினால், படிப்பினால், கண்டுபிடிப்புகளினால்தான் எல்லாம் நடக்கிறது என்று மனிதன் நினைத்துக் கொண்டதுதான் அவனுடைய இயலாமைக்குக் காரணமாகிப் போனது.

தேவனைப் போலவே மனிதன் தடம் மாறாமல், தரம் மாறாமல் ஆதி. 1, 2 அதிகாரத்திலிருக்கும் முதல் மனிதர்களைப் போலவே, இன்றளவும் இருந்திருப்பானானால் இதெல்லாம் சாத்தியமாக இருந்திருக்கும். இப்போதும் காலம் கடந்து விடவில்லை. மனிதன் தேவனைப் பற்றியும், தன்னைப் பற்றியும் சரியாக அறிந்து கொண்டு, ஒரு முடிவுக்கு வருவானானால் இப்போதும் இதெல்லாம் சாத்தியம் தான். சத்தியத்தை அறிந்து கொண்டால்; வானபரியந்தம் ஏறினாலும் தள்ளப்பட மாட்டார்கள்! இயேசுவை ஏற்றுக் கொண்டு; சிலுவையின் இரகசியங்களை (புதிய உடன்படிக்கை) அறிந்து கொண்டால்; நட்சத்திரங்களுக்குள் கூட்டைக் கட்டினாலும் விழ மாட்டார்கள்! தேவனுடைய ஆவியானவர் கொண்டு வரும் இந்த சத்தியத்தைச் சாந்தமாக ஏற்றுக் கொண்டால் எல்லாம் சாத்தியமாகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் **(all things are possible)**, அல்லேலூயா!

## என்றும் பதினாறு!:

வயதாக வயதாக நம்முடைய முதுமை சரீரத்தில் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பிக்கின்றன. தலை முடி நரைக்க ஆரம்பிக்கிறது, தோலில் சுருக்கங்கள் விழுகிறது. ஐம்புலன்களும் கொஞ்சம் கொஞ்சமாக செயலிழக்க ஆரம்பிக்கிறது. சரீரத்தில் பலவீனம், வியாதிகள் தாக்குகின்றன, மொத்தத்தில் சரீரம் தன்னுடைய தோற்றப் பொலிவை (அழகை, கெம்பீரத்தை) கொஞ்சம் கொஞ்சமாக இழந்து, விரும்பத்தகாத ஒரு தோற்றத்திற்கு மாறுகிறது. அதாவது சரீரம் தன்னுடைய ஆதி மகிமையை இழக்கிறது! வயதான தோற்றத்தைக் கண்ணாடியில் பார்க்கும் போது மனது சோகத்தில் ஆழ்ந்து போகிறது, தன்னம்பிக்கையை இழக்கிறது, எப்போதும்

இளமையாகவே இருக்க முடிந்தால் நன்றாக இருக்குமே என்ற ஏக்கம் வருகிறது. இது இயற்கையின் நியதி, அதனால் மாற்ற முடியாது என்று நினைத்து மனதைத் தேற்றிக் கொள்கிறோம். செயற்கையான இளமையை உருவாக்கக்கூடிய அலங்காரப் பொருட்கள் ஓரளவுக்கு கைகொடுத்து, முதுகில் தட்டி ஆறுதல் தருகிறது. **Beauty parlour (place of beauty treatments -** இயற்கை செய்த அலங்கோலத்தை செயற்கையான முறைகளால் மாற்றும் முயற்சி) செயற்கையான இளமையை பெற்ற மனிதன் கடைசியில் இயற்கை எய்துகிறான்!

செயற்கையான இளமையை உருவாக்க, வயதாவதைத் தடுக்க, என்றும் சாகாமல் உயிரோடு இருக்க... இது போன்ற காரியங்களுக்கான ஆராய்ச்சிகள் ஆண்டாண்டு காலமாக நடந்து கொண்டுதான் இருக்கிறது. **Plastic surgery, Hormone treatment** மூலமாக ஓரளவுக்குத் தீர்வை கண்டுபிடித்தனர்; ஆனால் அது நிரந்தர தீர்வாகவில்லை. நாம் இளமையோடு, என்றென்றும் சாகாமல் உயிரோடு பிழைத்திருப்பதே தேவனுடைய விருப்பமாக இருந்தது. ஆதியில்... ஏதேனில்... இப்படிப்பட்ட தன்மையுள்ள சரீரத்தைத்தான் தேவன் மனிதனுக்காக வடிவமைத்திருந்தார்! என்றென்றும் சாகாமல், அழகோடு, இளமையோடு, வசீகரத்தோடு, சுகத்தோடு, பலத்தோடு, பராக்கிரமத்தோடு இருக்கவே தேவன் மனிதனை உருவாக்கினார். இப்போது நாம் காண்கின்ற இந்த அலங்கோல நிலைமைகள் தேவனால் உண்டானதல்ல, அது பூமியின் சாபத்தினால் உண்டானது. நாம் தேவனைப் பற்றி தவறாக புரிந்து கொண்ட விஷயங்களில் இதுவும் ஒன்று. தலைமுடி நரைத்து போவது நமக்கு மகிமையல்ல, இளமை மாறாமல் இருப்பது தான் மகிமை. அப்படிப்பட்ட மகிமையான சரீரம் சாபத்தால் தன் மகிமையை இழந்தது. மகிமையை இழந்த சரீரத்தால் தன்னுடைய இளமையை பாதுகாத்து வைக்க முடியவில்லை. இளமையைப் பாதுகாக்க முடியாத சரீரம் முதுமையை நோக்கி பயணித்தது... சாவை எதிர்நோக்கிச் சென்று அணைத்துக் கொண்டது.

லண்டனிலுள்ள "ஹெல்த்தி ஏஜ்ங் யூனிவர்சிட்டி" **(Healthy Ageing University)** யில் உள்ள விஞ்ஞானிகள் 50 வயதைக் கடந்தவர்களிடம் ஏற்படும் வியாதிகளைப் பற்றி ஆய்வு செய்தபோது ஒரு உண்மையை கண்டுபிடித்திருக்கிறார்களாம். **S6K1** என்ற புரத மூலக்கூறுகளின் செயல்பாட்டைத் தடை செய்வதன் மூலம் வயதாவதைத் தடுத்து, எப்போதும் இளமையுடன் இருக்கச் செய்யலாம் என்பதே அந்த கண்டுபிடிப்பு! எலிகளிடம் இந்தச் சோதனையை நடத்தியபோது; அவைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்தது. வயதானாலும் நோய்களின் தாக்கம் இல்லாமல் இளமையோடு இருந்ததாம்; ஆயுட்காலமும் அதிகரித்ததாம். என்றும் பதினாறு கனவு நனவாகும் என்ற விஞ்ஞானிகளின் நம்பிக்கை ஒரு பக்கம் இருக்கட்டும்.

*"முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; சூரியனுக்கு கீழே நூதனமானது ஒன்றுமில்லை **(no new thing)**. பிர. 1:9"*

*"... இது நூதனம் என்று சொல்லப்படதக்க காரியம் ஒன்றுண்டோ? அது நமக்கு முன்னுள்ள பூர்வகாலங்களிலும் இருந்ததே. **(it have been already of old time, ...)** பிர. 1:10"*

*"முன் இருந்தவைகளைப் பற்றி ஞாபகம் இல்லை; ... பிர. 1:11"*

இந்த விஞ்ஞான உண்மை நூதனமான கண்டுபிடிப்பல்ல, தேவனின் ஆரம்பக்கால திட்டமே அதுதான். மனிதன் என்றும் மாறாத இளமையோடு, வயதாகாமல், சாகாமல் என்றும் உயிரோடு வாழ வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாக இருந்தது. அதற்கேற்றபடிதான் அவர் பூமியையும், அதில் மனிதனையும், அதற்கேற்றபடி அவனுடைய சரீரத்தையும் ஏற்படுத்தினார். விழுந்து போன மனிதன் தேவன் தந்த அந்த மகிமையான சரீரத்தை இழந்தான் என்று பார்த்தோம்.

*"... கழுகுக்கு சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது. **(youth is renewed)** சங். 103:5"*

*"அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்; நூறு வயதுசென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான், ... ஏசா. 65:20"*

*"... எங்கள் குமாரர் இளமையில் ஓங்கி வளருகிற விருட்சக்கன்றுகளைப் போலவும், எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரமனை மூலைக்கற்களைப் போலவும் இருப்பார்கள். சங். 144:12*

*(plants grown up in their youth; ... corner stones, polished after the similitude of a palace.)'*
பூமியின் ஆரம்பக்கட்டத்தில் தேவன் யதார்த்தமாக வைத்திருந்த காரியங்களையெல்லாம் இப்போது மனிதன் பெரிய அளவில் ஆராய்ச்சிகளைச் செய்து தான் கண்டுபிடிக்க வேண்டியதாயிருக்கிறது. இந்த விஷயம் தான் என்றல்ல; மனிதனின் நாகரீக, அறிவியல் முன்னேற்றங்களால் கண்டுபிடிக்கப்பட்ட எல்லா நூதனமான காரியங்களும் ஆதி ஏதேனில் இயற்கையாகவே தேவன் வைத்திருந்த காரியங்கள்தான்! பூமியின் மேல் வந்த சாபத்தால் அவைகள் இயற்கைக்கு எதிரிடையாக திருப்பிவிடப்பட்டன. பூமியதிர்ச்சியின் தாக்கம் அதிகமாக இருக்கும் இடங்களில்; பூமி பிளந்து மேலே இருக்கும் காரியங்களை (மனிதனையும், அவனுடைய வாழ்வாதாரங்களையும்) உள்ளே இழுத்துக் கொள்ளும். அப்படிப்போலவே ஆதி மேன்மை, மனிதனின் மகிமை எல்லாம் சாபத்தால் விழுங்கப்பட்டது. விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் செய்து ஒவ்வொன்றாக கண்டுபிடித்தாலும்; அவற்றை நடைமுறைப் படுத்துவதில் **(practical)** சிக்கல்கள் நீடிக்கின்றன.

சத்தியத்தை அறிந்து கொள்ளாமல் பூமியை ஆரம்ப நிலைக்கு சாத்தியப்படுத்துவது என்பது கூடாத காரியம். பூமியின் சகல ஜனங்களும் சத்தியத்தை அறிந்து கொண்டு; அதற்கேற்றபடி செயல்பட்டால் பூமியின் ஆதி மேன்மை நம் கைவசமாகும். அதற்கான சாத்தியக் கூறுகளை தேவன் வேதத்தில் உள்ள 7000—க்கும் மேற்பட்ட வாக்குத்தத்தங்களுக்குள் வைத்திருக்கிறார். வாக்குத்தத்தங்களைப் பிடித்துக் கொள்ளுங்கள்; ஏதேனுக்குள் நுழைய அதை விட்டால் வேறு வழியில்லை. பூமி தேவனை அறிந்து கொள்ளுமா? **why not?** நிச்சயமாக அறிந்துக் கொள்ளும்.

*"... சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல்; பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். ஏசா. 11:9"*

## இலவசத்தின் விலை!:

*"எங்கள் தண்ணீரைப் பணத்துக்கு வாங்கிக் குடிக்கிறோம்; எங்கள் விறகு விலைக்கிரயமாய் வருகிறது. புலம்பல். 5:4."* இக்காலங்களில் நாம் உபயோகிக்கும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் **(mineral water)** சமையல் எரிவாயு **(Petroleum gas)** மின்சார அடுப்புகள், கெரசின் ஸ்டவ், விலைக்கு வாங்கப்படும் விறகு, இன்று நடைமுறையில் உள்ள நவீன மைக்ரோ வேவ் அடுப்புகள், சோலார் அடுப்புகள், ... இதைக் குறித்ததான வெளிப்பாடுதான் எரேமியா தீர்க்கதரிசியின் அந்த வசனம். செலவில்லாமல் நமக்கு கிடைத்துக் கொண்டிருந்த தண்ணீரும், எரிபொருளும் காலத்தின் கொடுமையால் விலைகொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை! வீடுகளுக்கு குடிதண்ணீர் இணைப்புகளுக்கு வரி வசூலிக்கப்படுகிறது. கிணறு, அல்லது ஆழ்துளை கிணறு அமைத்தல்; அவற்றை இயந்திரங்களின் உதவியுடன் உபயோகிக்க வேண்டிய சூழ்நிலை, இவையெல்லாவற்றிற்கும் ஆதாரம் பணம் தான்! தூத்துக்குடியில் 1 லாரி குடிதண்ணீரின் விலை 1000 ரூ & +, 1 குடம் தண்ணீர் 2 ரூபாய், 250 மி. லிட்டர் ரீஃபில் பேக் தண்ணீர் 1 ரூபாய்! ஒரு லிட்டர் பாட்டில் தண்ணீர் 15 ரூபாய். மாவட்டங்கள் தோறும், மாநிலங்கள் தோறும், தேசங்கள் தோறும் விலைகள் வித்தியாசப்படலாம்; ஆனால் தற்கால உலக மக்களின் நிலை இதுதான்!

1960ஆம் வருஷ காலங்களில் வழக்கத்தில் இருந்த விறகு அடுப்புகள், கரிநெருப்பு அடுப்புகளுக்கு செலவுகள் எதுவும் செய்யப்படவில்லை, தண்ணீரும் இலவசமாக கிடைத்தது. ஆனால் இதன் பின்னணியத்திலாகும் செலவுகளை அரசாங்கமும், தனியார் நிறுவனங்களும் பொறுப்பெடுத்துக் கொண்டன. அதற்கு முற்பட்ட காலங்களில் மனிதன் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவு தயாரிப்பதற்கு அத்தியாவசியமான தண்ணீர், எரிபொருள் இரண்டிற்கும் செலவு எதுவும் செய்யப்படவில்லை. காட்டில் போய் விறகு வெட்டி எடுத்துக் கொண்டு வந்து, ஆற்றில் தண்ணீர் எடுத்து கொண்டு வந்து... சாப்பாடு சமைத்து அதைத் தட்டில் எடுத்துக் கொண்டு வந்து...! சொல்ல வந்த விஷயத்திற்கு வருகிறேன். ஆதி ஏதேனில் தண்ணீர், விறகு இரண்டுக்குமே தேவையேதும் இல்லாமல்தான் இருந்தது. தேவன் மனிதனுக்கு நியமித்திருந்த உணவான பழத்திலேயே போதுமான தண்ணீர் இருப்பதால்; தண்ணீர் என்று ஒன்றை தனியாக குடிக்க வேண்டிய அவசியமில்லை. அதுமட்டுமல்ல பழத்தை அப்படியே சாப்பிட வேண்டியதுதான்; சமைக்க வேண்டியதில்லை, அப்படியிருக்க விறகு என்னத்திற்கு?

சூரியனின் வெப்பம் பூமியை நேரிடையாகத் தாக்காதபடி ஜலத்திரை பாதுகாத்தது, அதனால் பூமிக்கு இயற்கையாகவே ஒரு குளிர்பதன அமைப்பு இருந்தது. தண்ணீர் தாகமும் இல்லை,

வியர்வையும் இல்லை. உணவைச் சமைத்து சாப்பிடும் முறை பூமியின் சாபத்திற்கு பிறகு ஏற்பட்ட ஒன்று தான். பூமி தன் விளைச்சலைத் தர மறுத்ததால்; முள்ளையும் குறுக்கையும் முளைப்பித்ததினால்; வெளியின் பயிர் வகைகளைச் சாப்பிட வேண்டிய கட்டாயத்திற்கு மனிதன் தள்ளப்பட்டான். இப்படியே கொஞ்சம் கொஞ்சமாக தேவன் நமக்கு இலவசமாக கொடுத்த பூமியின் சகல காரியங்களுக்குமே விலை ஏற்படுத்தப்பட்டது. விறகு, தண்ணீர் என்றில்லை, மனிதனின் வாழ்க்கைக்குத் தேவையான சகல வாழ்வாதாரங்களுக்குமே விலைக்கிரையம் கொடுக்கப்பட வேண்டியதாகிறது **(cost of living : the amount of money spent on food, clothing, housing, and other basic necessities)**

இந்தப் பிரச்சனையில் இருந்து வெளியே வர முடியுமா? ஏன் முடியாது? பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக ஜெபித்து; வேதத்தை ஆராய்ந்து, இரகசியங்களை அறிந்து கொண்டு, அதற்கேற்றபடி செயல்பட்டால்... ஆதி ஏதேனில் தேவன் நமக்குத் தந்த சகல இலவச இணைப்புகளையும் பெற்றுக் கொள்ளலாம்; விலையில்லாத வாழ்க்கையைப் பெற்றுக் கொள்ளலாம். (அந்த இரகசியங்களைப் பற்றி விதைகள் புத்தகத் தொடர்களில் ஆராய்ந்து எழுதி வருகிறோம்). விலையில்லாமல் ஏதாவது ஒன்று இலவசமாகக் கிடைக்கிறது என்றாலே கொஞ்சம் ஆர்வத்துடன் பார்ப்பது, ஆ என்று வாயைப் பிளப்பது, முண்டியடித்துக் கொண்டு ஓடி அதை பெற்றுக் கொள்ள முயற்சிப்பது போன்ற காரியங்களை எல்லா தரப்பு மக்களிடமும் பார்க்க முடிகிறது. இதற்கு காரணம் இல்லாமலில்லை, ஆரம்பத்தில் மனிதன் தேவனிடமிருந்து பெற்றிருந்த அந்த இலவச பாக்கியத்தின் பிரதிபலிப்புதான் அது! கொஞ்சம் அதிகப்படியான விலை என்றால் உடனே கண்ணை உருட்டிக் கொண்டு; இதென்ன அநியாயமா இருக்கே, பூனைக்கு யானை விலை சொல்றானே! என்பதான டயலாக்குகள் மிகச் சாதாரணம். இதற்கும் காரணமுண்டு; மனிதனின் இதயத்திற்குள் உறங்கிக் கிடக்கும் ஆதி கால மேன்மையின் உயிரூட்டம்தான் அது!

ஆம், நம் தேவனிடம் இன்றளவும் இலவசமான காரியங்கள் பல உண்டு. அவற்றை முதலில் பெற்றுக் கொண்டால்; அதன் மூலமாக பூமிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும். வசனங்களைப் பாருங்கள்:

*“... வியாதியுள்ளவர்களச் சொஸ்தமாக்குங்கள், ... மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். மத். 10:8”*

*“... தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்கு பிரசங்கித்ததினாலே... 2 கொரி. 11:7”*

*“... தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்.” “... விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன். வெளி. 21:6, 22:17”*

தேவன் நமக்கு இலவசமாக – பரிசாகத் தந்த இந்த அழகான பூமியை வியாபார மயமாக்கின பூமியின் சாபத்தை ஒழித்துக் கட்ட ஒன்று சேர்ந்து எழும்புவோம்.

*“இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை. ஏசா. 65:17”*

*“அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். 2 பேது. 3:13”*

*“... நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின, ... வெளி. 21:1”*

தேவன் புதிய பூமியை ஏற்படுத்துவதாக ஏசாயா தீர்க்கதரிசன ஆகமத்தில் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். வாக்குமாறாத தேவன் அப்படியே செய்வார் என்று பூமி காத்துக்கொண்டிருக்கிறது. அப்படி உருவாகப் போகும் பூமி எப்படி இருக்கும் பார்த்தும் விட்டார் ஒருவர்; தரிசனத்தின் மூலமாக. தேவன் வாக்குத்தத்தம் செய்ததை சாத்தியப்படுத்தும் பொறுப்பை நம்மிடம் விட்டிருக்கிறார். ஏனென்றால் இந்த பூமிக்கு நாம்தான் ஆளுநர்கள், அதிகாரிகள், பொறுப்பாளிகள், கண்காணிப்பாளர்கள்... எல்லாம்! தேவன் ஆவியாக இருப்பதால் (கண்களால் காணக்கூடாதவராக) கண் காணக்கூடிய இந்த பூமியில் அவர் நேரடியாக நுழைந்து எதையும் செய்வதில்லை, செய்யவும்

முடியாது. (விதைகள் பகுதி – 6, 7, 8, 9, 10, 11 புத்தகங்களில் இதைக்குறித்த விளங்கங்களை கொடுத்திருக்கிறோம்.) அதனால் அவருடைய சாயலாக இருக்கிற நம்முடைய ஆவியுடன் (உள்ளான ஆவி மனிதனுடன்) தொடர்பு ஏற்படுத்தித்தான் இந்த பூமியின் மீது செயல்படுகிறார்.

இந்தப் பூமியை புதிதாக்கும் காரியத்தையும் அவ்விதம் தான் தேவன் செய்து முடிக்கப்போகிறார். அதற்காகத்தான் தேவன் இக்கடைசி காலங்களில் இப்படிப்பட்ட ஊழியங்களை எழுப்பிக்கொண்டிருக்கிறார். தேவன் பூமியையும் அதன் நிறைவையும் வார்த்தைகளைச் சொல்லிச் சொல்லி உருவாக்கியதைப் போலவே, நாமும் வார்த்தைகளை அனுப்பித்தான் புதிய பூமியை உருவாக்க வேண்டும். அப்படி நாம் பேச வேண்டிய வார்த்தைகளையும் தேவன் வேதத்திலுள்ள 7000க்கும் மேற்பட்ட வாக்குத்தத்த வசனங்களில் புகுத்தி வைத்திருக்கிறார். மனுக்குலம் இழந்து போன அந்த ஆரம்பக்கால அழகான, குறைவில்லாத பூமியை மீண்டும் கொண்டு வருவதற்கான **formula** இந்த வாக்குத்தத்தங்கள் சார்ந்த வார்த்தைகளில் தான் இருக்கிறது. அதை நாம் வாசித்து, தியானித்து, ஆராய்ந்து, அதை விசுவாசித்து, அதை நாவில் வைத்து, பேச வேண்டும். பேசிய வார்த்தைகளின்படி நிச்சயமாக நடக்கும் என்று இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசிக்கவும் வேண்டும். இவ்விதமாக புறப்பட்டு செல்கிற வார்த்தைகள் தாங்கள் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றி முடிக்கும். இந்தச் செயல் தொடர்ச்சியாக நடக்கும் போது; பூமி மீண்டும் ஆரம்பக்கட்ட சூழ்நிலைக்கு மாற எத்தனிக்கும், மாற ஆரம்பிக்கும், (இப்போதே இந்த காரியங்கள் பூமியின் மேல் ஆரம்பமாகிவிட்டது). தேவன் வாக்குப்பண்ணின புதிய பூமி உருவாகி, தீர்க்கதரிசனத்தை நிரூபிக்கும். அந்த புதிய பூமிக்குள் பணம் இல்லை, விலைக்கிரையமும் இல்லை, விற்பாரும் இல்லை, வாங்குவாரும் இல்லை. எல்லோருக்கும் எல்லாம் இலவசமாக உண்டாகியிருக்கும், அல்லேலூயா.

## கடலுக்கடியில் ... :

கப்பல் ஏறி, கடல் யாத்திரை பண்ணி, திரளான தண்ணீர்களிலே தொழில் செய்கிறார்களே, அவர்கள் கர்த்தருடைய கிரியைகளையும், ஆழத்திலே அவருடைய அதிசயங்களையும் காண்கிறார்கள். சங்.107: 23, 24

நீ சமுத்திரத்தின் அடித்தளங்கள் மட்டும் புகுந்து, ஆழத்தின் அடியில் உலாவினதுண்டோ? யோபு. 38:16.

கடலின் ஆழங்களில் மூழ்கி செய்யப்படும் ஆராய்ச்சிகளைப் பற்றிய முன்னறிவிப்பை இந்த வசனங்களில் பார்க்கிறோம். கடலின் அடியில் என்ன இருக்கிறது என்ற கேள்வி, அதைப் பற்றிய ஆராய்ச்சிகள் மனிதன் தோன்றிய நாட்களிலிருந்தே ஆரம்பமாகிவிட்டது. கிரேக்க தத்துவ மேதை அரிஸ்டாட்டிலின் சிஷ்யர் அலெக்சாண்டர் ஒரு கண்ணாடி பலூனுக்குள் உட்கார்ந்து கடலுக்குள் கொஞ்சம் தூரம் போய்விட்டு வந்திருக்கிறார். இது விஷயமாக மனிதனின் ஆர்வம் கூடியது, எந்த உபகரணமும் இல்லாமல், மூச்சை அடக்கிக் கொண்டு கடலுக்குள் 285 அடி ஆழம் வரை போய்விட்டு வந்தார் ஒருவர். பிறகு சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பிக்கார்ட் என்பவர் நீர்மூழ்கி படகு ஒன்றின் மூலம் செங்குத்தாக கடலுக்குள் இறங்கினார். ஐந்து மணிநேரம் கழித்து கடலின் தரையைத் தொட்டுவிட்டேன் என்று வயர்லெஸ் செய்தி அனுப்பினார். அவர் சென்ற ஆழம் சுமார் 35,808 அடி! (எவரெஸ்ட் சிகரம் 29,028 அடி தான்). இந்த ஆழ்கடலில் பிக்கார்ட் 20 நிமிடங்கள் இருந்தாராம்.

ஆழ்கடல் ஆராய்ச்சிகள் இந்நாட்களில் இக்காலங்களில் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு முன்னேற்றமடைந்திருக்கிறது. பல அறிவியல் தொழில் நுட்ப கப்பல்கள், படகுகள், மூழ்கும் ஆழ்கோளங்கள் மூலமாக கடலாழங்களுக்குச் செல்கிறார்கள். ஒரு ஆழ்கடல் மூழ்கு வீரன், தண்ணீர் சூழ்ந்த நிலையில், வெளிச்சம் இல்லாத இடத்தில் வேலை பார்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும், அதற்கென்று பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இவர்களுக்கான சிறப்பு உடை டைவிங் பெல் என்ற அமைப்புடன் இணைக்கப்பட்டிருக்கும். இதிலிருந்து தொடர்ச்சியாக வீரனுக்குத் தேவையான வெதுவெதுப்பான நீரும், காற்றும் குழாய் மூலம் செலுத்தப்படும். இந்தக் குழாய்கள் சிறப்பு ஆடைகளுக்குள் இணைக்கப்பட்டிருக்கும்.

இவர்கள் சுவாசிக்கும் முறையும் வித்தியாசமானதுதான், சுவாசிக்கும் காற்றில் ஆக்சிஜனும்,

ஹீலியமும் கலந்ததாக இருக்கும். இது ரத்தத்தில் கரையாது என்பதே இதற்கு காரணம். சாதாரணமாக நாம் காற்றில் சேர்த்து சுவாசிக்கும் நைட்ரஜன், மூழ்கு வீரர்கள் கடலடிப் பகுதிகளுக்குள் செல்லும்போது அங்குள்ள அசாதாரண அழுத்தம் காரணமாக ரத்தத்திலிருந்து வெளியேற ஆரம்பிக்கும். இது மூழ்கு வீரருக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தும், சமயங்களில் மரணம் கூட வரலாம். அதனால் மூழ்கு வீரர் 15 – 20 நாட்களை ஆழ்கடல் பகுதியில் செலவிட்ட பிறகு, அவரகு உடல் சாதாரண அழுத்தத்துக்குப் பழகுவதற்காக சாச்சுரேஷன் சேம்பரில் **(Saturation Chamber)** வைக்கப்படும். வெளிப்புற அழுத்தத்திற்கு மெதுவாக மீளும் வகையில் அதில் வசதிகள் செய்யப்பட்டிருக்கும்.

நியூசிலாந்தைச் சேர்ந்த அலெக்கி என்பவர் தலை நகர் வெல்லிங்டன் பகுதியில் சுற்றுச்சூழல் சம்பந்தமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது அவருடைய திருமண மோதிரம் தவறி கடலில் விழுந்துவிட்டது. மோதிரத்தைத் தேடி அலைந்தார், மாதங்கள் உருண்டது, அவர் முயற்சியை நிறுத்தவில்லை. கடைசியில் செயற்கைகோள் உதவியுடன் தேடிய போது மோதிரம் கிடக்கும் இடம் கண்டுபிடிக்கப்பட்டது. துறைமுகக் கடலுக்கு அடியில் சென்று அதை மீட்டார்! தேவனைப் போலவே இருக்கும் மனிதனுக்கு எதுவுமே பெரிய விஷயமில்லை, ஏனென்றால் தேவனுக்கு எதுவுமே பெரிய விஷயமில்லையே! அப்பாவைப் போல பிள்ளை!

சாபத்தால் பூமியின் மீது ஏற்பட்ட மாயையின் சுழற்சியில் சிக்கி; தேவனை விட்டு நெடுந்தூரம் வந்து விட்ட மனுக்குலத்தின் திறமையைப் பாருங்கள்! தன்னோடு ஒத்துழைக்க மறுத்த பூமியின் சாபத்தைப் பார்த்து சவால் விட்டான் மனிதன்! இன்றளவும் ஜெயித்து வருகிறான், நவீன அறிவியல் சார்ந்த கண்டுபிடிப்புகளுடன்! சாதாரண மனிதனின் நிலையே இப்படியென்றால்; சத்தியம் அறிந்த தேவ பிள்ளைகளாகிய நாம், ஆவிக்குரிய ஆயுதங்களை வைத்திருக்கும் நாம் ஏன் உலகத்தின் சாபத்தை ஜெயிக்க முடியாது?

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு பிலி. 4:13. தேவனை அறியாத, ஆனால் தேவனைப் போல படைக்கப்பட்டிருக்கும் மனிதன் இயற்கையைப் பார்த்து இந்த அளவுக்கு **challenge** பண்ணும்போது; வானத்தையும் பூமியையும் படைத்த தேவனை உள்ளே வைத்திருக்கும் நாம் அதை விட அதிகமாக எதையாவது செய்ய வேண்டுமல்லவா? நிச்சயமாக... உலக மனிதர்கள் இயற்கையை எதிர்த்துப் போராடி, அதை தாக்கி, அழித்து, அதிலிருந்து தேவையானதைப் பெற்று அதைக்கொண்டு வாழ்வாதாரங்களை உருவாக்குகிறார்கள். நாமோ... வாருங்கள் ஒன்று சேர்ந்து செயல்படுவோம். இயற்கையை எதிர்க்காமல் அதனோடு ஒத்துழைப்புக் கொடுப்போம். அதைக் கெடுக்காமல் ஆதரித்து, வார்த்தையால் அரவணைத்து, அதற்குத் தேவையானதை உருவாக்கிக் கொடுப்போம். எப்படி? வார்த்தைகளால் தான்! சாதாரண வார்த்தைகள் அல்ல, வேத வசனம் சார்ந்த வார்த்தைகளை அனுப்பி பூமியின் சேதாரங்களை சரிசெய்து, சாபத்தை மாற்றி, நோய்களை தீர்த்து, ஆசீர்வாதமயமாக்குவோம்.

## பாலைவனம் கடலாகிறது!:

பாலைவனம் கடலாகிறது என்ற தலைப்பில் வேதத்தின் தீர்க்கதரிசனம் ஒன்று நிறைவேற ஆரம்பித்திருப்பதை சமீபத்திய செய்தி ஒன்றில் பார்க்க முடிந்தது.

*"... வனாந்திரத்திலே (natural uncultivated land) தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். (streams in the desert) ஏசா. 35:6"*

*"வெட்டாந்தரை (hot condition - see dry) தண்ணீர்த்தடாகமும், வறண்ட நிலம் (thirsty land) நீரூற்றுகளுமாகும்; ... ஏசா. 35:7"*

பூமி தோன்றி, அது சாபத்துக்குட்பட்டபிறகு அடுக்கடுக்காக அது பல மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. இந்த மாற்றங்களால் சொல்ல முடியாத கேடுபாடுகளை, இந்த பூமி சந்தித்து வருகிறது. என்றாலும் தேவனைப் போல உருவாக்கப்பட்டிருக்கும் மனிதன் தனக்குள் இருக்கும் தேவ ஞானத்தால் அந்த சாபத்தை எதிர்த்து எதிர்நீச்சல் போடுகிறான். பூமியில் பிறப்பெடுக்கிற ஒவ்வொரு மனிதனும் தன்னை எதிர்கொண்டு வரும் வாழ்க்கையைச் சந்திக்க, அதை அரவணைத்துக் கொண்டு வாழ, ஒரு செப்படி வித்தைக்காரனின் சாமர்த்தியத்தைக் காட்ட

வேண்டியதாயிருக்கிறது! என்றாலும் பூமியை ஆளுகை செய்து கொண்டிருக்கும் பரலோகத்தின் அதிகாரங்களாலும், தேவனுடைய பெரிதான கிருபையாலும் அவன் ராக்கெட் வேகத்தில் சீறிப் பாய்ந்து வெற்றி இலக்கை நோக்கி போய்க்கொண்டே இருக்கிறான்!

பூமியின் மாற்றங்களைக் கண்டு அவன் ஸ்தம்பித்து நின்றுவிடுவதில்லை, சவால் விடுகிறான். தனக்குள் இருக்கும் தேவ ஞானத்தால் அவற்றை உண்டு இல்லை என்று ஆக்கிவிடுகிறான். தான் வெப்பமடைந்து வருவதாக அதிர்ச்சியூட்டிய பூமி; இப்போது நிலநடுக்கம், எரிமலைகளால் இன்னுமொரு அதிர்ச்சியைக் கொண்டு வருகிறது. கடந்த 2005ம் ஆண்டு ஆப்பிரிக்க பாலைவன நாடான எத்தியோப்பியா நாட்டில் ஜிகான்டிக் என்ற பகுதியில் நடந்தது இந்த அதிசயம். சுமார் 3 மைல்கள் நீளத்திற்கு பாலைவனத்தில் பெரும் பிளவு ஏற்பட்டது. பூமி அதிர்ச்சி, எரிமலை குமுறல்களால் இத்தகைய மாற்றங்கள் ஏற்படுவது சகஜம்தானே என்று நினைப்போம். ஆனால் திடீர் பிளவு புதிய கடல் உருவாவதற்கான அறிகுறி என்று விஞ்ஞானிகள் கணித்திருக்கிறார்கள். தற்போது உலகின் ஏராளமான விஞ்ஞானிகள் குழு இங்கு முகாமிட்டு இந்த அதிசய பள்ளத்தை ஆராய்ந்து வருகிறார்கள். நியூயார்க் – ரோசெஸ்டர் பல்கலைக்கழகம், எத்தியோப்பியா, கலிபோர்னியாவின் லீடு பல்கலைக்கழகங்கள் இவற்றில் முக்கியமானவை ஆகும்.

ஆய்வின் முடிவு: பூமியின் அடியிலுள்ள மக்மா அடுக்கில் நிகழும் வேகமான மாற்றங்களால் இந்த பிளவின் நீளம் இருபுறமும் அதிகரித்துக் கொண்டே போகிறது. இது நிலத்தின் இயல்பான தன்மையை மாற்றியமைக்கும் திறன் வாய்ந்தது. இங்கு நிகழும் மாற்றங்கள் முழுக்க நாளடைவில் கடல் கொள்ளும் வாய்ப்பு இருப்பதாகவே உணர்த்துகிறது என்கின்றனர் விஞ்ஞானிகள். இந்த நிகழ்வு சர்வ நிச்சயம் என்று வேதத்தின் தீர்க்கதரிசனம் அடித்துச் சொல்லுகிறது.

இந்தத் தீர்க்க தரிசனம் நிறைவேறுமா? நிச்சயமாக நிறைவேறும்...

*"வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மத். 5:18*

*வேதத்தின் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப் பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்து போவது எளிதாயிருக்கும். லூக். 16:17"*

வேதத்தின் தீர்க்கதரிசனங்கள் எப்படி நிறைவேறப் போகின்றன? இதென்ன கேள்வி, வேதத்தில் தீர்க்கதரிசனங்களையெல்லாம் தேவன் நிறைவேற்றி முடிப்பார் என்று சொல்லிவிட்டு ***escape*** ஆக முடியாது. தேவன் பூமியையும், அண்டசராசரங்களையும் உருவாக்கும்போது; சொல்லிச் சொல்லி உருவாக்குவதை ஆதி. 1:1–ல் பார்க்கிறோம். அது மட்டுமல்ல வேதத்தின் சகல நிகழ்வுகளும் சொல்லிச் சொல்லி உருவாக்கப்பட்டவைகள் தாம். பூமியில் கூட இதுநாள் வரை சகல காரியங்களும் மனிதர்களால் சொல்லிச் சொல்லி உருவாக்கப்பட்டவைகள்தான். தேவன் அவரைப் போலவே ஒரு பேசும் ஆவியாகத்தான் நம்மை படைத்திருக்கிறார். மட்டுமல்ல விசுவாசித்து, விசுவாசித்ததை பேசும் ஆவியாக உருவாக்கியிருக்கிறார்.

தேவன் நல்லவர், நல்லதையே பேசினார், பூமியில் நல்லதே நடந்தது. *"... தேவன் தாம் (சொல்லிச் சொல்லி) உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாக இருந்தது; (it was very good.) ... ஆதி. 1:31"* மனிதனும் நல்லவன்தான், நல்ல தேவன் மனிதனை தன்னைப் போல நல்லவனாகத்தான் உருவாக்கினார். மனிதனும் ஆரம்பத்தில் (ஆதி 3:5 வரையிலுமாக ...) நல்லவைகளைத்தான் பேசி வந்தான், நல்லதே பூமியின் மீது நடந்து வந்தது. பூமியின் மீதான ஆளுகையை, பொறுப்பை தேவன் மனிதன் வசம் ஒப்படைத்துவிட்டதால்; நலமானவைகளைப் பேசி பூமியையும் அதன் நிறைவையும் நல்லபடியாக கவனித்துக் கொள்ளும் பொறுப்பு அவன் மேல் விழுந்து விட்டது. வேதத்தில்தானே இருக்கிறது என்று எல்லா வசனங்களையும் எடுத்து வாயில் வைத்து பேசிவிடக்கூடாது. வேதம் என்றாலே அதில் நல்ல வசனங்கள் தானே இருக்கும்? தேவன் கெட்டதையா எழுதி வைப்பார் என்று வாக்குவாதம் செய்யவும் கூடாது. வேதம் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டது என்பது உண்மை. தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்தாவியானவரால் ஏவப்பட்டு எழுதினார்கள் என்பதும் உண்மையிலும் உண்மை. (வேதம் ஒரு வரலாற்று புத்தகம் என்பதையும், அதில் சொல்லப்பட்டவைகளெல்லாவற்றையும் நம்பித்தான் ஆக

வேண்டும் என்றும் ஆணித்தரமாக உத்தரவிடுகிறோம்!)

ஆனால் வேதத்தில் எழுதப்பட்டுள்ள சம்பவங்களில் வரும் மனிதர்கள் எல்லோருமே தேவ ஆவியால் ஏவப்பட்டு பேசவில்லை. தங்களுடைய சுய ஆவியினால் (மூளையறிவினால்) ஏவப்பட்டு பேசிய காரியங்களும் வேதத்தில் இருக்கின்றன. சிலர் சாத்தானால் ஏவப்பட்டும் பேசினார்கள், ஏன்... பல இடங்களில் சாத்தானே பேசியுமிருக்கிறான்! தேவன் எல்லாவற்றையும் கோர்வையாக்கி, தன்னுடைய ஆவியை அக்காலகட்டங்களில் நீதிமான்களாக இருந்த மனிதர்களின் மேல் ஊற்றி, அவர்களை ஏவி எழுத வைத்திருக்கிறார். இவ்விதமாக நமக்கு வேதம் தரப்பட்டிருக்கிறது. உதாரணமாக சில வசனங்கள்:

*"அப்போது யாக்கோபு ராகேலின் மேல் கோபம் கொண்டு; தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார், நான் தேவனா? என்றான். ஆதி. 30:2" (இது மனிதன் தன் சுயஅறிவினால் தனக்குத் தெரிந்ததை பேசிய வசனம்)*

*"அப்போது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான். மத். 16:22" (மனிதன் சாத்தானால் ஏவப்பட்டு பேசின வசனம்)*

*"... சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்திரமாக: பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன் என்றான். யோபு: 1:7" (சாத்தானே பேசிய வசனம்!)*

காரியம் இப்படியாக இருக்கிறபடியினால்; வேதத்தில் இருக்கிற எல்லா வசனங்களையும் எடுத்து தீர்க்கதரிசனமாக சொல்லுவது சரியாக வராது. பரிசுத்தாவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட, பூமியில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்றதான, நல்ல, நன்மையான, ஆசீர்வாதமான வசனங்களை மாத்திரம் எடுத்துப் பேச வேண்டும். அப்படிப் பேசும் போது மீண்டும் பூமி ஆதியிலிருந்த நிலைமைக்கு திரும்புவதற்கேதுவான சாத்தியக்கூறுகளை பெற்றுக் கொள்ளும். இப்படியே தொடர்ச்சியாக பேசிக்கொண்டே இருக்கும் போது அந்த சாத்தியக்கூறுகள் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குகின்றன. இப்படியே இந்த வார்த்தைகளை அதிகரிக்கச் செய்யும் போது; சாதகமான சூழ்நிலைகள்; வார்த்தைகளை நிஜமாக்கச் செய்யக்கூடிய எல்லைகளுக்குள் பிரவேசிக்கின்றன. விடாமல் சொல்லிக்கொண்டே இருக்கும்போது அவை நிஜமாக ஆரம்பிக்கின்றன, காணும் காட்சியாக மாறுகின்றன. பிறகென்ன நான் காண்பது கனவா? நனவா? என்று கிள்ளிப் பார்த்தால் ...? சுரீர் என்று வலிக்கும்!

பூமியில் இப்போது பாலைவனங்களாக இருக்கிற தேசங்கள் எல்லாம் முற்காலங்களில் கடல் நீரால் சூழப்பட்டிருந்தன. பாலைவனங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்; அப்பகுதிகள் ஒரு காலத்தில் செழிப்புள்ள தேசங்களாக இருந்தன என்பதை நிரூபித்திருக்கின்றன. ஆறுகள் பாய்ந்திருப்பதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன, மட்டுமல்ல அவைகள் நல்ல விளைநிலங்களாக இருந்தன என்பதற்கான சான்றுகள் குகை ஓவியங்கள் மூலமாக கிடைத்துள்ளன. அப்படிப்பட்ட தேசங்கள் கால ஓட்டத்தில், பூமியின் சாபத்தால் பாலைவனமாக மாற்றப்பட்டன. பூமியை சுற்றியிருந்த ஜலத்திரை நோவா கால வெள்ளத்தில் பூமியின் மீது மழையாக ஊற்றப்பட்டு; கடலுடன் சேர்ந்தது. சூரியனின் நேரிடையான கதிர்வீச்சுக்களால் வெப்பமடைந்த கடல் வற்ற ஆரம்பித்ததினால் பாலைவனங்கள் உருவாகின. சூரியனை படைத்த தேவன் அதை நல்லது என்று தான் கண்டார். சூரியனின் கதிர்கள் பூமிக்கு தீங்கிழைக்கவில்லை. பூமியின் மீது இயங்கிக் கொண்டிருந்த சாப நியமத்தினால்; பூமி சூரியக்கதிர்களை தவறாக, தீமைக்கேதுவாக, சாப நியமத்தின்படி கிரகித்தது. அதனால் பூமி வெப்படைய ஆரம்பித்தது, பாலைவனங்களை உருவாக்கிற்று. நம் தேவன் நல்லவர், அவரிடம் யாதொரு மாறுதலின் நிழலுமில்லை. அவருடைய சிருஷ்டிப்புகள் எல்லாம் நல்லதாகவே இருந்தது. சூரியனை, பூமிக்கு தீங்கிழைக்கும் விதத்தில் தேவன் உருவாக்கியிருப்பாரானால்... பூமி பரலோகமாக நீடித்திருப்பது எப்படி? அவருடைய நோக்கத்தையே கெடுக்கிற விதமாக அல்லவா அது இருக்கும்?

தேவனை, சரியாக அறியத்தக்க விதமாக அறிந்து கொள்ளுவோம்; அவரைப் பற்றி நிதானமாக பேச கற்றுக் கொள்ளுவோம். இனிவரும் தீர்க்கதரிசன நிறைவேறுதலின் காலங்களில் பாலைவனங்களில் பயணம் செய்ய பாலைவனக்கப்பல்களை (ஒட்டகங்கள்) தேட வேண்டிய

அவசியம் இருக்காது; டைட்டானிக் கப்பல்களே ஓட ஆரம்பிக்கும், அல்லேலூயா!

## விசித்திர விநோதம்!:

*"நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு (made in secret), பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாக (curiously wrought) உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. (சங். 139:15)"* நாம் நம்முடைய தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியாகி, வளர்ச்சியடைந்து, பிறப்பதை ஒரு விசித்திர விநோதமான காரியமாக வேதம் சொல்லுகிறது. இது புதுமையான, அதிசயமான காரியமாக இந்த வசனத்தில் காணப்படுகிறது. விளக்குவதற்கு மிகவும் கடினமான ஒன்றாகவும், புரிந்து கொள்ள முடியாததாகவும் இந்த விஷயம் காணப்படுகிறது. மனிதனின் கூடாரமாகிய சரீரத்தை மிகவும் கவனத்துடன், நேர்த்தியாக தாயின் கர்ப்பப்பைக்குள் உருவாக்குவதை பார்க்கிறோம். **Zoology** (விலங்கியல் – உயிரினங்களைக் குறித்த அறிவியல் கல்வி) படித்திருப்பவர்களுக்கு தெரிந்த விஷயம்தான். எல்லோருமே விஷயம் தெரிந்தவர்கள்தான்; ஆனால் தெரிந்து கொண்ட விஷயங்கள்தான் வெவ்வேறாக இருக்கிறது! நான் இங்கே கொண்டுவரப்போவது வெறும் குழந்தை பிறப்பை பற்றி மட்டும் அல்ல. அநேகருக்கு மறைபொருளாக இருக்கும் சில வேதத்தின் சத்தியங்களையும், இரகசியங்களையும் தான்.

ஆரம்பத்தில் தேவன் மனிதனை (மனிதனின் கூடாரத்தை) உருவாக்கும்போது; அவனை இக்காலங்களில் நாம் பார்க்கும் ரீதியிலான முறையில் உருவாக்கவில்லை. வளர்ச்சியடைந்த நிலையிலான ஒரு மனிதனை (ஆண், பெண் என்ற இரண்டுவிதமான உருவத்தில்) உருவாக்கினார். தேவன் கையினால் மண்ணை பிசைந்து மனிதனை வடிவமைத்ததினால் அது மிகவும் சிறப்பானதாக, அழகானதாக, மகிமை **(honour)** பொருந்தியதாக இருந்தது. ஒன்பது அடி உயரத்தில் வாட்டசாட்டமான உருவத்தில் உருவாக்கினார். சீர்குலையாமல், முழுமையானவனாக **(integrity)** பரலோக நியமத்தின்படி மனிதன் உருவாக்கப்பட்டிருந்தான். தேவனைப் போலவே உருவாக்கப்பட்ட மனிதன் ஆவிரூபத்தில்தான் இருக்கிறான். தன்னுடைய சாயலாக இருந்த கண்ணுக்குத் தெரியாத ஆவி ரூபத்தில் இருந்த மனிதனை தேவன் அவனை தங்க வைப்பதற்கு எல்லாவிதத்திலும் தகுதியுடைய, அப்பழுக்கில்லாத, மாசுமருவில்லாத, கூடாரமாகத்தான் சரீரத்தை உருவாக்கினார்.

ஆதாமின் (மனுக்குலத்தின்) வீழ்ச்சிக்குப் பிறகு; இந்த மகிமையான சரீரம் கொஞ்சம் கொஞ்சமாக ஒளியிழந்து, களையிழந்தது. கால ஓட்டத்தில் உருக்குலைந்து, முழுமையிழந்து, பாவத்தால் தீட்டாகி, வியாதிப்பட்டது. அழகை இழந்து, மகிமையிழந்து, சாபத்தின் தாக்குதல்களால் தரித்திரம் பிடித்துப் போனது. இக்காலங்களில் நாம் பார்ப்பது இப்படிப்பட்ட மனிதக் கூடாரங்களைத்தான். ஆரம்பத்தில் இருந்த மகிமையான சரீரத்தின் இயக்கம் இப்போது இல்லை. அது கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து மறைந்தது. ஆனால் நம்முடைய உள்ளான மனிதன் ஆரம்பத்தில் படைக்கப்பட்ட வண்ணமாகவே இருப்பதால்; அவன் தரும் பலத்தால் + அவன் மூலமாக வெளிப்படும் கிருபையால் + வார்த்தை ரூபத்தில் இருக்கும் இயேசுவால் + அவர் தரும் விசுவாசத்தால் + பரிசுத்தாவியானவர் தரும் அபிஷேகத்தால் ... இப்படிப்பட்ட அநேக ஆவிக்குரிய "ஆல்"-களால் நம் மண்ணான சரீரம் – கூடாரம் இயங்குகிறது.

ஆவி உருவத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனையும் தேவன் இந்த பூமிக்கு அனுப்பும்போது; அந்த ஆவி தங்குவதற்கான கூடாரத்தை உருவாக்க இந்த பூமி (இயற்கை) மிகவும் அதிகப்படியான சிரமம் எடுக்க வேண்டியதாயிருக்கிறது. ஒரு பெண்ணின் கருப்பைக்குள் **(womb - uterus of woman)** ஒரு மனிதனுடைய கூடாரம் உருவாக ஏற்படும் கஷ்டங்களையும் தடைகளையும் பார்க்கும் போது... மனம் அதிருகிறது. ஆதியாகமம் 2 ஆம் அதிகாரம் வரையிலுமாக பூமியின் மீது காணப்பட்ட தேவனுடைய பரிபூரணமான சித்தப்படியான உலகத்தை நினைத்து மனது ஏங்கித் தவிக்கிறது. **3**–ஆம் அதிகாரத்தில் ஏற்பட்ட சாபத்தால் பூமி படும் பாட்டை நினைத்து மனம் கரைந்து போகிறது. பூமியின் மீது நடக்கும் சகலவிதமான சீர்கேடுகளின் மீதும் ஒரு கண்ணோட்டமிட்டு **(glance)**; அதைக் குறித்து ஆராய்ந்து; அதைக் குறித்த ஒரு **project report**-டுடன் ஏதேனுக்குள் நுழைந்து விடுவது என்னுடைய அன்றாட வழக்கம்!

ஒரு பெண்ணின் வயிற்றுக்குள் ஒரு மனிதனின் கூடாரம் உருவாக்கப்படும் விதத்தை ஒரு பத்திரிக்கையில் வாசிக்கும் சந்தர்ப்பம் வந்தது. என் நினைவு மண்டலம் வழக்கம் போல ஏதேனுக்குள் போய்விட்டது. ஒரு பெண் கர்ப்பம் தரிக்க ஒரே ஒரு உயிரணு போதுமானது.

ஆனால் ஒரு கருமுட்டையை உடைக்க 300 மில்லியன் வரையிலான உயிரணுக்கள் போட்டி போடுகிறதே, அது ஏன்? கருப்பைக்குள் இந்த உயிரணுக்கள் போட்டி போட்டபடி நீந்திச் செல்லும்போது வழியில் உற்பத்தியாகும் அமிலத்தில் மூழ்கி 50% உயிரணுக்கள் இறந்து போகின்றன, **How sad!** (இந்த அமிலம் பாக்டீரியாக்களின் தாக்குதல்களில் இருந்து அந்தப் பெண்ணின் உடலைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது).

தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓட்டமெடுக்கும் மீதி 50% உயிரணுக்களை வெள்ளையணுக்கள் வழிமறிக்கும்! (வெள்ளையனே வெளியேறு என்றெல்லாம் அங்கே போராட்டம் நடத்திக்கொண்டிருக்க முடியாது; ஏனென்றால் அவை கர்ப்பப்பையின் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருக்கிறது.) இந்த வெள்ளையணுக்கள் உயிரணுக்களை ஏதோ ஆபத்தை உருவாக்க வந்திருப்பதாக தவறாகப் புரிந்து கொண்டு பிடித்து விழுங்க ஆரம்பிக்கும்! இந்த அபாயக்கட்டத்தையும் தாண்டி நீந்தும் உயிரணுக்கள் ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருப்பதால் இவைகள் அடுத்தக்கட்ட ஆபத்தில் மாட்டிக் கொண்டு உயிரை விடுகின்றன; கர்ப்பப்பையின் முகப்பிலுள்ள திரவத்தில் மிதக்க முடியாமல் செத்துப்போகின்றன. 100 முதல் 200 வரையிலான அணுக்கள் மட்டும் இந்த உயிர்ப்போராட்டத்தில் தப்பி முன்னேறுகின்றன. இத்தனை நிகழ்வுகளும் நடக்க 5 நிமிடங்கள் முதல் சில மணி நேரங்கள் வரை ஆகின்றன. காத்திருக்கும் கருமுட்டையின் மேல் காணப்படும் ஜோனா பெல்லுசிடா, கியூமுலஸ் ஊபோரஸ் என்ற இரண்டு அடுக்குகளையும் துளைக்க உயிரணுக்களின் தலைப்பகுதியிலிருந்து என்சைம் **(enzyme)** ஒன்று வெளிப்படும். பல உயிரணுக்கள் சேர்ந்து துளைத்தாலும் ஒன்று மட்டும் தான் கருப்பைக்குள் உள்ளே நுழையும். உள்ளே நுழைந்ததும் கருமுட்டை இறுக்கமாக மூடிக்கொள்ளும், அப்போது வெளிப்படும் இரசாயன திரவம் மற்ற அணுக்களை உள்ளே விடாதபடி தடுத்து அழித்துவிடும்!

உள்ளே நுழைந்த உயிரணுவிலிருக்கும் 23 குரோமோசோம்களும் **(chromosome)**, கருமுட்டையின் 23 குரோமோசோம்களும் சேர்ந்து கருவாகிறது. இந்த கருவானது கருப்பையை அடைய 3 முதல் 5 நாட்கள் வரையில் ஆகும். அது கர்ப்பப்பையை அடைந்து கரு பதியம் ஆன பிறகுதான் அதை கர்ப்பம் என்று சொல்ல முடியும். முதல் முயற்சியிலேயே இந்த கர்ப்ப நிகழ்வு நடப்பதும் இல்லை. ஏனென்றால் பெண்ணின் கருமுட்டையின் ஆயுள் காலம் 24 மணி நேரம் தான். உயிரணுவின் ஆயுள் 48 முதல் 72 மணி நேரம். இதற்குள் மேற்கண்ட செயலாக்கம் நடந்து முடியாவிட்டால் செயலற்ற முட்டையும், உயிரற்ற அணுக்களும் கழிவுகளாக வெளியேறிவிடும். **(menstruation).**

இங்கே நான் சொல்ல வரும் விஷயத்தின் கருப்பொருள் என்னவென்றால்: இது தேவனுடைய ஆரம்பக்கட்ட செயல் திட்டமாக இருந்திருக்க முடியாது. ஏனென்றால் ஆதி. 1, 2 அதிகாரங்களில் – பூமியின் மேல் சாபம் வராததற்கு முன்பு – ஆதாமும் ஏவாளும் ஒன்று சேரவில்லை என்பதைப் பார்க்கிறோம். பூமியின் மேல் சாபம் வந்த பிறகு – ஆதாமும் ஏவாளும் ஏதேனைவிட்டு வெளியேற்றப்பட்டு, வாசல் பூட்டப்பட்டபின்பு – வெளியே எங்கோ ஓரிடத்தில்; சாப உலகத்தின் மீது இந்த நிகழ்வு நடக்கிறது. ஆதி. 4:1 வாசித்தால் புரியும்.

பூமியைத் தேவன் உருவாக்கும்போது அதை ஒரு ஆசீர்வாதமான பிரமாணத்தின்படி **(perfect law)** இயங்கும்படியாகவே வடிவமைத்தார். சாபத்தால் அந்தப் பிரமாணத்தில் பிரச்சனை வந்ததினால் எல்லாமே தலைகீழாகிப் போனது. தவறாகிப் போன பிரமாணத்தினால் **(law of sin)** பூமி தவறான காரியங்களைப் பிறப்பிக்க ஆரம்பித்தது. ஆசீர்வாதமாக இருந்த பூமியில் ஏற்பட்ட சாபத்தை என்னென்னவென்று தேவன் பட்டியலிடுவதை ஆதி. 1: 14–19 ல் பார்க்கலாம். சாபத்திற்குப் பிறகு பூமியின் மீது நடந்த எந்தவொரு நிகழ்வும் ஆரம்பத்தில் தேவன் திட்டமிட்டபடி **(diagram)** இல்லை, அது கெடுக்கப்பட்டுப் போனது. அதில் மனிதன் & மனிதனின் கூடாரத்தை உருவாக்கும் விதத்தில் தேவன் போட்ட **layout**-ம் நிச்சயமாக மாற்றத்துக்குள்ளாகியிருக்கும். அப்படி மாற்றத்துக்குள்ளான காரியத்தைதான் **(sexual actvities &** குழந்தை பிறப்பு) இன்று மனுக்குலம் பார்த்து, சந்தித்து, அதில் சிக்கி அவஸ்தைப்பட்டு வருகிறது. தேவன் தன்னுடைய சிந்தையில் அழகாக **plan** பண்ணிய ஒரு காரியம், சாபத்தால் பாவமாக... இச்சையாக... காம விகாரத்துக்கேதுவாக திருப்பப்பட்டுப் போனது. இன்று இந்தக் காரியம் விபச்சாரம்... வேசித்தனம்... மோகம்... துர்இச்சை... அசுத்தம் என்று சாத்தானால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சாபத்தின் எதிர்மறை பக்கம் இன்று மக்களால் பாவ சந்தோஷங்களுக்காகவும்,

வியாபாரத்துக்காகவும் கையாளப்பட்டு, வியாதியைக் (**e.g. Venereal disease, Aids**) கொண்டு வந்து சாவில் முடிக்கிறது.

ஆதியாகம் 3:5 வரையில்தான் பூமி ஆசீர்வாத சட்டத்தின்படி இயங்கிக்கொண்டிருந்தது. அதுவரையில் ஏதேனின் ஆதாமும் ஏவாளும் ஒன்றாகத்தான் இருந்தார்கள், ஆனால் அவர்கள் ஒன்று சேரவில்லை என்பதைப் பார்க்கிறோம். காரணம் சாத்தான் ஏவாளை சந்தித்து; அவளுக்குள் தன்னுடைய வார்த்தையை போடும் வரையிலும் இச்சை என்ற பாவம் ஏவாளிடம் இல்லை. அது சாத்தானால் விதைக்கப்பட்டது. அதுவரையில் நிர்வாணமாக இருந்தும் வெட்கப்படாமல் இருந்தவர்கள்; அதற்குப் பிறகு தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து வெட்கப்பட்டார்கள் என்பதை அறிய முடிகிறது. அவர்களின் பாவத்தைப் போக்க தேவன் தற்காலிகமாக ஒரு மிருகத்தைக் கொன்று, அதன் இரத்தத்தை சிந்தி, அதன் தோலினால் அவர்களுக்கு ஆடையை உருவாக்கி அவர்களுக்கு உடுத்தி விடுகிறார். ஆனால் இதுவரையிலான காலகட்டம் எவ்வளவு என்பது தெரியவில்லை. எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளை மாத்திரம்தான் நான் எழுதிக்கொண்டிருக்கிறேன்.

இதைப் பற்றிய வெளிப்பாட்டை தாவீதுக்கு பரிசுத்தாவியானவர் கொடுத்திருப்பதைப் பாருங்கள். *"இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் (**in sin did my mother conceive me**). சங். 51:5."* இச்சை என்ற பாவம் + நிர்வாணி என்ற எண்ணம் + அதனால் உண்டான வெட்கம் + தேவனைத் தவறாகப் புரிந்து கொண்டதால் ஏற்பட்ட தவறான பயம் + சாத்தானை ஏற்றுக் கொண்டதால் ஏற்பட்ட தவறான மனப்பக்குவம் **mind setting** = இவற்றோடு தான் இவர்கள் ஒன்று சேர்ந்தார்கள் என்பதை ஆதி. 4:1ல் பார்க்கிறோம். முக்கியமாக ஏதேனில் இருக்கும்போது கொடுக்கப்பட்ட மகிமையான சரீரம் பிறகு இல்லை, அது தன் மகிமையை இழந்தது. நிச்சயமாக தேவனுடைய திட்டப்படி இருந்திருக்காது என்று, சொல்லித் தெரியவேண்டியதில்லை.

மனிதன் பாவத்துக்குள் விழும் வரை ஏதேனில் இச்சை இல்லை, நிர்வாணம்... அதனால் உண்டாகும் வெட்கம் எதுவுமே இல்லை. தேவனுடன் சரிசமமாக நடந்து கொண்டிருந்ததால் பயப்படாதிருந்தார்கள், தேவனைப் போன்ற நல்ல மனநிலையும் இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இவர்கள் சேர்ந்து வாழ ஆரம்பித்திருப்பார்களானால் அது நிச்சயமாக தேவ திட்டத்தின்படி இருந்திருக்கும். தேவனுடைய திட்டம் எப்படி என்பதை விளக்க முடியாவிட்டாலும்; நிச்சயமாக அது நன்றாக, நேர்த்தியாக, ஒழுங்காக, அழகாக இருந்திருக்கும். (எனக்கு வெளிப்படுத்தப்பட்டபடி தேவன் தன்னுடைய குமாரனை இந்த பூமியில் மனிதனாக பிறக்க வைக்க எந்த முறையை கையாண்டாரோ; அந்த முறையாகத்தான் இருந்திருக்க வேண்டும்! இயேசுவின் தாயாகிய மரியாள் தனக்கு நியமிக்கப்பட்ட யோசேப்பினால் அல்ல, பரிசுத்தாவியானவரின் அசைவாடுத–னால் கர்ப்பவதியானாள் என்று பார்க்கிறோம். இதுதான் தேவனுடைய ஆரம்பக்கால திட்டம். இந்த திட்டம் இன்னமும் நீடித்திருக்குமானால் சங். 51:5ல் வருவதைப் போல நம் தாய் நம்மை பாவத்தில் கர்ப்பம் தரிக்க வேண்டிய சூழ்நிலை இருந்திருக்காது.) ஆனால் இப்போது ... ?

தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்த போது; அவைகள் எல்லாம் மிகவும் நன்றாக இருந்ததாம். (ஆதி. 1:31) ஆனால்... சாபத்திற்குப் பிறகு பூமியின் நிகழ்வுகளைப் பார்த்தால்? நிச்சயமாக ஒன்று கூட நன்றாக இருந்திருக்காது; "இந்த நிகழ்வுகள்" உட்பட! அதற்குப் பிறகு குழந்தை பிறப்பென்றால், அது இப்படித்தான், வேறு வழியில்லை என்பது தலையெழுத்தாகிப் போனது. வேறு வழியில்லாத காரணத்தினால் "இந்த விஷயம்" அப்படியே விட்டுவிடப்பட்டது. மனிதன் பாவத்தில் தான் கர்ப்பம் தரிக்கப்பட வேண்டிய கட்டாயம் உருவானது. ஒரு மனிதன் இந்தப் பூமியில் வந்து பிறப்பதற்கு ஏன் இந்த அளவுக்குப் பாடுபடுகிறான் என்பதும், அவன் குழந்தையாக தாயின் கருவில் உருவாவதற்கு ஏன் இந்த அளவுக்கு போராட வேண்டியதாயிருக்கிறது என்பதும் இப்போது தெளிவாகியிருக்கும்.

சங். 51:5ல் பாவத்தில் கர்ப்பம் தரிக்கும் காரியம் சொல்லப்படுகிறது. அப்படியென்றால் பாவமில்லாத கர்ப்பம் தரிக்கும் முறையும் ஒன்று இருந்திருக்க வேண்டும். அதுதான் ஆரம்பத்தில் தேவன் உருவாக்கிய முறை. அது என்ன? *"இயேசுகிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. மத். 1:18."* இதுதான்

தேவன் ஏற்படுத்தின குழந்தை பிறப்பின் முறைமை! ஆதியிலே ஆதாம், ஏவாளை உருவாக்கிய போதும் தேவன் இந்த முறையைதான் ஏற்படுத்தியிருந்தார்! அதை செயல்படுத்தும் முன்னதாக சாப நியமம் பூமியின் மீது இயங்க ஆரம்பித்துவிட்டதால் நிலமை தலைகீழாகி விட்டது. அதற்குப் பிறகு நடந்த காரியங்கள் தான் நமக்குத் தெரியுமே.

மனிதன் ஆவியாயிருக்கிறான், அவன் கண்களால் காணக்கூடாதவன், இப்போது நாம் பார்த்துக்கொண்டிருப்பது மனிதனை அல்ல, அவனுடைய கூடாரத்தைத்தான் (உடல்) என்ற உண்மையை மீண்டுமாக இந்த இடத்தில் நினைவூட்டுகிறேன். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது கவனியுங்கள்: ஆவியாயிருக்கிற மனிதனை இந்த பூமியில் பிறக்க வைக்க; தேவன் அதே ஆவிக்குரிய காரியத்தை கையாண்டால்தான் சரியாக இருக்கும் (கொஞ்சம் புரிந்திருக்கும்.) அதாவது ஆவியான மனிதனை உருவாக்கும் முறை **(process)** அதே ஆவிக்குரிய ரீதியில் இருந்தால் தான் சரியாக வரும் (இன்னும் ஒரு படி புரிந்திருக்கும்.) ஆவியான மனிதனை உருவாக்க தேவன் உபயோகித்த உபகரணங்கள் நிச்சயமாக ஆவிக்குரியதாக இருந்தால் தான் பொருந்தி வரும். (ம்... இப்போ புரிந்ததா?)

அதனால்தான் தேவன் பரிசுத்தாவியானவரின் அசைவாடுதலின் மூலமாக ஆவியான மனிதனை பூமியில் ... தாயின் கர்ப்பத்தில் உருவாகும்படி திட்டமிட்டார். அந்தத் திட்டத்தை ஏவாளிடம் செயல்படுத்த முடியாத சூழ்நிலை உருவானது; ஆனால் அந்த திட்டம் தோல்வியில் முடியவில்லை, இயேசுவின் தாயாகிய மரியாளிடம் நிறைவேற்றப்பட்டது. இயேசு மனிதனாகத்தானே பிறந்தார், அப்படியிருக்க அவர் மாத்திரம் ஏன் இந்த வித்தியாசமான முறையில் (பாவமில்லாமல் கர்ப்பந்தரிக்கும் முறை) பிறக்க வேண்டும்?

எத்தனை கேள்விகள் கேட்கப்பட்டாலும் பரிசுத்தாவியானவரின் மூலம் பதில் கொடுக்க முடியும். இயேசு மனிதனாக பிறந்த நோக்கம் சரியாக புரிந்திருந்தால் இப்படிப்பட்ட கேள்வியை கேட்க மாட்டார்கள். இயேசு மனிதனாக பிறந்தால் மட்டும் போதாது; பாவத்தால் கறைபட்டுப்போன மனுக்குலத்தை மீட்கவும் வேண்டும். இந்த காரியத்தைச் செய்ய வேண்டுமானால் உலக மனிதர்கள் பிறப்பதைப் போன்ற முறையில் பிறக்கக்கூடாது. அப்படிப் பிறந்தால் அவரும் மற்ற மனிதர்களைப் போலவே இருப்பார் என்பதால் மனுக்குலத்தை பாவத்திலிருந்து மீட்க முடியாமல் போய்விடுமே?

பாவமில்லாத பரிசுத்த முறைமையில் உருவாக்கப்பட்டிருந்த ஆதாமும் ஏவாளும் சேர்ந்து பூமியின் மீது தங்களுக்கு கொடுக்கப்பட்ட ஆளுகையை தூக்கி சாத்தான் கையில் தூக்கி கொடுத்துவிட்டனர். நடந்தது நடந்து விட்டது; அப்படியே விட்டுவிட்டால் தேவனுடைய திட்டமல்லவா கெட்டுப்போகும்? மனிதன் – தேவனுடைய மகா பிரமாண்டமான ஒரு **project.** ஏனென்றால் மனிதன் எல்லா ரீதியிலும் தேவனைப் போலவே இருக்கிறான்! அவரைப் போலவே உருவாக்கப்பட்ட மனிதனைப் பற்றின திட்டம் நினைத்துப் பார்க்க முடியாத அளவில் இருக்க வேண்டும் இல்லையா? அதனால் மீண்டுமாக சாத்தான் கையிலிருந்து பூமியையும், மனுக்குலத்தையும் மீட்க வேண்டும். அப்படி மீட்க வேண்டுமானால் அது மீண்டும் ஆதாம், ஏவாளினால்தான் முடியும். ஆனால் அவர்களோ மரித்துப் போனார்கள். இப்போது ஆதாமுக்குப் பதிலாக அவனைப் போலவே இன்னொரு ஆதாம் வந்தாக வேண்டும்; மட்டுமல்ல அவன் பாவமில்லாத முறையில் பிறந்தவனாகவும் இருக்க வேண்டும்.

அதனால் பிதாவாகிய தேவன் தன்னுடைய வார்த்தையாகிய குமாரனையே இரண்டாம் ஆதாமாக, பாவமில்லாத கர்ப்பந்தரிப்பு முறையில் பூமிக்கு அனுப்புகிறார். (இந்த பாவமில்லாத கர்ப்பந்தரிப்பு முறை உலக மக்களால் கடந்த 2009 வருடங்களாக சர்ச்சைக்குள்ளான ஒரு விஷயம். அதனாலென்ன? அவர்கள் சத்தியத்தை அறிந்து கொள்ளும்போது விவாதம் செய்வதை நிறுத்திவிடுகிறார்கள், நிறுத்திவிடுவார்கள்!) இவ்விதமாக பூமிக்கு வந்த இயேசு ஜெயித்துக் காட்டியதை நாம் பார்த்து வருகிறோம். அவர் ஜெயித்ததினால்தான் நான் இந்த புத்தகத்தை இவ்வளவு தைரியமாக (வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பதைப் போல ...) எழுத முடிகிறது!

ஆதாமும், ஏவாளும் மட்டும் பாவம் செய்யாமல் இருந்திருப்பார்களானால்; (இச்சை என்ற பாவத்தில் விழாமல் இருந்திருப்பார்களானால்) பூமியில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் பாவமில்லாத இந்த பரிசுத்த முறையில்தான் பிறந்திருப்பார்கள் (பரிசுத்தாவியானவரின் அசைவாடுதல் மூலமாக). அப்படி பிறக்க முடியாமல் போன துர்அதிர்ஷ்ட சூழ்நிலை மனுக்குலத்திற்கு ஏற்பட்டதால் பிறப்பின்

முறை மோசமாகிப் போனது. ஆவியான மனிதனை இந்த பூமியில் பிறக்க வைக்க பூமிக்குரிய ரீதியிலான முறைமை இக்காலத்தில் கையாளப்படுகிறது. இது சாபத்தால், நியமம் **(law - rule)** மாற்றப்பட்டதால் ஏற்பட்டது. அதாவது மனிதனின் கூடாரமாகிய சரீரம் (உடல்) ஆவியான மனிதனை தனக்குள் கொண்டு வர, நிலை நிறுத்த முயற்சிகளை எடுக்கிறது; அதனால் இத்தனை சிரமங்களை சந்திக்க வேண்டியதாயிருக்கிறது. எப்படியோ மனிதன் பூமியில் வந்து பிறந்தாக வேண்டும்; அவனைக் குறித்த தேவனுடைய திட்டம் அவனுக்காக படைத்த இந்த பூமியிலும், உலகத்திலும் (அண்டசராசரம்) நிறைவேற வேண்டும். அதனால் தேவன் மாற்று திசையில் திருப்பப்பட்ட நியமத்தின் ஓட்டத்திலேயே பூமியும் அதன் காரியங்களும் ஓடும் படிக்கு விட்டுவிட்டார்.

இந்த ஒரு காரியம் தான் என்றில்லை, எல்லா காரியங்களுமே அதினதின் போக்கில் போகும்படி விடப்பட்டன. மனிதன் வைத்தது தான் வரிசை என்றாயிற்று. அதற்காக தன் போக்கில் விடப்பட்டிருக்கும் காரியங்களை நினைத்து வேதனைப்படவோ, குற்ற உணர்வுடன் செயல்படவோ வேண்டிய அவசியமில்லை. ஆசீர்வாத நியமம் மாற்றப்பட்ட பூமியில் மனிதனால் இவ்வளவு தான் வாழ முடியும், இப்படித்தான் வாழ முடியும் என்பதை அறிந்து கொண்ட தேவன்; மனிதனின் சூழ்நிலையைப் புரிந்து கொண்ட தேவன் சாப நியமத்தை எதிர்த்துப் போராட தேவையான மாற்றங்களைச் செய்தார். தனது ஆவியானவரின் மூலமாக மனிதனுக்குத் தேவையான ஞானம், சக்தி, ஆற்றல், உதவிகளைத் தந்தார். மனிதன் பாவத்தினால் அழிந்து போகக்கூடாது என்பதற்காக நியாயப்பிரமாணத்தை (பத்து கட்டளைகள்) ஏற்படுத்தினார். பாவம் போக்கும் தற்காலிக பலிகளை (காளைகளை பலியிடுதல் ... போன்ற காரியங்கள்) ஏற்படுத்தினார்.

இராஜாக்களை ஏற்படுத்தினார், மக்களை ஒழுங்குபடுத்தினார். தீர்க்கதரிசிகளின் மூலமாக வார்த்தையை அனுப்பினார், அது நிறைவேறும்படி செய்தார். மனிதன் தன்னை நோக்கி ஜெபிக்கும்போது; அதைக் கேட்டு அவன் வழியாக பூமியில் கிரியைகளை நடப்பித்தார். பழைய ஏற்பாட்டின் காலங்களிலேயே மனிதனை அபிஷேகித்து, வரங்களைத் தந்து நன்மையானவற்றை பூமியில் நடப்பித்தார். சாபத்தின், சாத்தானின் தொடர்ச்சியான எதிர்ப்புகளைச் சந்தித்து முடிவில் காலம் நிறைவேறினபோது வார்த்தையாயிருந்த இயேசு மாம்சமானார்... மனிதனாக, பூமியில் தோன்றினார். மனிதனின் இயலாமையை மாற்ற நியாயப்பிரமாணத்துக்கு சிலுவையில் முடிவு கட்டினார். புதிய கிருபை பிரமாணத்தை ஏற்படுத்தி; தன்னுடைய வெற்றியை மனிதனுக்கு பரிசாக கொடுத்தார். பரலோக வாசலைத் திறந்து; நரகத்தின் வாசலை மூடி... சாத்தானை பேய்முழி முழிக்க வைத்தார்! அல்லேலூயா!!

மனிதனைக் குறித்த தேவனுடைய திட்டம் பூரணமாக நிறைவேறும்போது, அவரைப் போலவே உருவாக்கப்பட்டு பூமியில் இருக்கும் நாம், தேவனுடைய இரகசியங்களைப் பற்றிய வெளிப்பாடுகளைப் பெற்ற நாம் நிறைவேற்றி முடிக்கும்போது ... சகல காரியங்களும் ஆரம்பத்தில் இருந்ததைப் போலவே பரிசுத்தமான நிலைக்கு திருப்பப்படும்.

*“இனி ஒரு சாபமுமிராது. ... வெளி.”* 22:3 (இனி ஒரு பாவமுமிராது, இனி ஒரு வியாதியுமிராது, இனி தரித்திரமுமிராது, தோல்வியிராது, அழுகை இராது ... etc.,) அல்லேலூயா! **Praise the Lord!**

## பறக்கும் தட்டுகள்!:

*“வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியையோ மனுபுத்திரருக்குக்கொடுத்தார். சங்.115:16”*

இந்த ஒரு வசனத்தை வைத்து பூமியைத் தவிர வேறு எந்த கிரகத்திலும் உயிரினங்களே இருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. வசனத்தை வாசித்தால் மாத்திரம் போதாது: அதை ஆராய்ச்சியும் செய்ய வேண்டும் என்று வேதம் நமக்கு ஆலோசனை தருகிறது. வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; **(search - examine thoroughly)** ... யோவான். 5:39. வானங்கள் கர்த்தருடையவைகள் என்பது உண்மைதான்... ஒத்துக்கொள்கிறோம். இக்கால அறிவியல் முன்னேற்றங்களையும், இயற்கையின் மாற்றங்களையும் வேதம் முன்னறிவித்திருக்கும் காரியங்களையும் தொகுத்து தந்து கொண்டிருக்கிறேன். அதோடு சேர்த்து அதைச்சார்ந்த ஆவிக்குரிய காரியங்களையும் கொடுத்திருக்கிறேன். ஒரு வசனத்தை வைத்து ஒரு முடிவுக்கு

வந்தால்; அந்த முடிவு ஏடாகூடமாகிவிடும்! வேதத்தில் இருந்து இதற்கு பல உதாரணங்களைத் தர முடியும். யூதாஸ் தற்கொலை செய்து கொண்டான் என்ற வசனம் வேதத்தில் தான் இருக்கிறது. அதற்காக யாரும் அந்த வசனத்திற்குக் கீழ்ப்படிந்து விடுவதில்லை, அதைச் சரியானது என்று எடுத்துக் கொள்வதும் இல்லை.

நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டுப் போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான் (சாத்தான்). மத். 4:6. சாத்தான் அப்படி ஒரு வசனம் வேதத்தில் இருப்பதாக சொன்னது உண்மையா? அதிலென்ன சந்தேகம் நிச்சயமாக உண்மைதான்!

உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காக தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுப் போவார்கள். சங். 91: 11, 12. இதை வாசித்ததும் உடனே வீட்டின் மேல் ஏறி நின்று கொண்டு தொபுக்கடீர் என்று யாரும் கீழே குதிப்பதில்லையே! இந்த வசனங்கள் தேவ பிள்ளைகளுக்கான வாக்குத்தத்த வசனங்கள். தேவனுடைய பிள்ளைகள் செல்லும் இடமெல்லாம் அவர்களுக்கு பரலோக பாதுகாவல் இருப்பதாக அந்த வாக்குத்தத்தம் வாக்களிக்கிறது. ஆனால் சாத்தான் இந்த வசனத்தை எடுத்து வந்து சம்பந்தமில்லாத இடத்தில் புகுத்துவதைப் பார்க்க முடிகிறது.

சபையில் பெண்கள் பேசக்கூடாது என்று கூடத்தான் இருக்கிறது. (1 கொரி. 14:35) கெங்கிரேயா ஊர் சபைக்கு பாஸ்டராக இருந்ததே பெபேயாள் என்ற பெண் ஊழியக்காரிதான்! (ரோம. 16:1) அவர்கள் சபையில் பேசாமலா ஊழியம் செய்தார்கள்? பிரசங்க நேரத்தில், பிரசங்கத்தைக் கவனிக்காமல் சளசளவென்று பேசி இடையூறு செய்த பெண்களை கண்டித்து பவுல் எழுதுகிறார். பிரசங்கத்தைப் பற்றித்தான் ஒருவருக்கொருவர் பேசி, சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொண்டார்கள் என்பதை அடுத்த வசனத்தை வாசித்தால் புரியும். என்றாலும் அப்படி பேசிக் கொண்டது இடையூறாக இருப்பதால்; வீட்டில் போய் புருஷர்களிடம் விவாதித்துக்கொள்ளுங்கள் என்று ஆலோசனை சொல்லுகிறார். பிரசங்க நேரத்தில் ஒரு சில மாதங்களே ஆன கைக்குழந்தை அழுதது. அது இடையூறாக இருந்ததால்; பிரசங்கியார் சபையாரைப் பார்த்து சிறு குழந்தைகளை வைத்திருப்பவர்கள் குழந்தைகளை கொஞ்சம் நேரம் வெளியே கொண்டுபோய் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி விடுகிறார். உடனே ஒரு சில பெண்கள் கைக்குழந்தைகளுடன் வெளியே போகிறார்கள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த சிலர் "சபைக்கு சிறுகுழந்தைகளைக் கொண்டு வரக்கூடாது" என்று வெளியே போய் சொல்வார்களானால் (பிரசங்கத்திற்குள்ளும் அதையே கொண்டு வருவார்களானால்...) அதன் முடிவு எவ்வளவு விபரீதமாக இருக்கும்!

சபை என்றால் ஆயிரம் பிரச்சனைகள் இருக்கும். பிரச்சனைகள் சபைக்கு சபை வித்தியாசமாகவும் இருக்கும். அதற்கேற்றபடி சபை போதகர் பிரச்சனைகளுக்கு தீர்வாக ஏதாவது சில ஆலோசனைகளைக் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதையெல்லாம் எடுத்து சபையில் உபதேசமாக்க முயற்சித்தால்; சபை சபையாக இருக்காது, விசுவாசிகளும் விசுவாசிகளாக இருக்க முடியாது.

ஒரே ஒரு வசனத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, முடிவுக்கு வராமல் அந்த வசனத்திற்கு மேலுள்ள, கீழுள்ள, தேவையானால் முழு அதிகாரத்தையும், வாசிக்க வேண்டும். பிறகு ஒரு முடிவுக்கு வரவேண்டும். வேதத்தை வாசிப்பது நாமாக இருந்தாலும்; நம்மை சத்தியத்திற்குள் நடத்துவது ஆவியானவர்தான். அவரே நமக்குச் சரியானதை சொல்லிக் கொடுத்து விடுவார். இதற்காகத்தான் வேதத்தை வாசிக்கும்போது ஆதியாகமத்திலிருந்து தொடங்கி வரிசையாக வாசிக்க வேண்டும் என்று ஆலோசனை கொடுத்தோம் (விதைகள் பகுதி–11). இப்படிப்பட்ட வேதவாசிப்பினால் இப்படிப்பட்ட பிரச்சனைகளில் சிக்காமல் தப்பிக்கலாம்.

*"வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார். சங்.115:16." வானங்கள் கர்த்தருடையவைகள் என்பதால் பூமி கர்த்தருடையதல்ல என்று அர்த்தம் வராதே! ... "பூமியும் அதன் நிறைவும் என்னுடையவைகளே. (தேவனுக்குரியவை) சங். 50:12" "வானங்கள்*

*உம்முடையது, பூமியும் உம்முடையது, .. சங். 89:11"* என்றும் வசனம் இருக்கிறதே! பூமியும் கர்த்தருடையது தான்; ஆனால் ஆளுகை செய்யும் பொறுப்பை நம் கையில் கொடுத்திருக்கிறார். *பூமி தேவனுக்குரியது என்பதால் அது நமக்கு உரியது அல்ல என்றும் அர்த்தமில்லை! பூமியை மனுபுத்திரனுக்குக் கொடுத்தார் என்று இருப்பதால்; வேறெதையுமே அவர் மனிதனுக்குத் கொடுக்கவில்லை என்றும் அர்த்தமாகாது!* அதற்கு தகப்பன்: *"மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது. லூக். 15:31."* என்றும் வசனம் இருக்கிறதே! நாம் தேவனுடைய சொந்தப் பிள்ளைகள், அவர் நம் தகப்பனார், அவருடைய சொத்துக்கு நாம் சுதந்தரவாளிகள். நாம் வாழும் பூமியிலேயே இந்த முறைமையை நாம் பார்க்கிறோம். அப்பா சொத்து பிள்ளைகளுக்கு எழுதி வைக்கப்படுகிறது, இந்த முறைமை பரலோகத்திலிருந்து பூலோகத்துக்கு கடந்து வந்த ஒரு காரியம் தான்.

*மொத்தத்தில் தேவனுக்குரியதெல்லாமே நமக்கும் உரியதுதான் என்பதைப் பார்க்கிறோம்.* தன்னுடைய சாயலின்படியும், தனது ரூபத்தின்படியும், தன்னைப் போலவே உருவாக்கிய மனுபுத்திரனுக்கு (மகன்களுக்கு – பிள்ளைகளுக்கு) எதையும் கொடுக்காமல் எல்லாவற்றையும் தானே வைத்துக் கொள்வதால் தேவனுக்கு எந்தவித லாபமும் இல்லை. அப்படி தேவன் செய்வாரானால் அவரைப் போலவே இருக்கிற மனிதன் அவரைப் போல செயல்பட முடியாமல் போய்விடுமே! தேவனைப் போலிருக்கும் நாம் அவரைப்போலவே இயங்க வேண்டுமானால்; அவருடைய சித்தப்படி பூமியை ஆளுகை செய்ய வேண்டுமானால்; அவருடையவைகள் எல்லாம் நமக்கு கடந்து வந்தால்தான் சாத்தியமாகும் இல்லையா?

விண்வெளியில் நீண்ட காலம் வசித்த விண்வெளி வீரர்களுக்கு புற்றுநோய் தாக்கும் அபாயம் இருப்பதாக வாஷிங்டன் நகரின் ஜார்ஜ் டவுன் பல்கலைக்கழக (Georgetown University) விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். சூரியக்கதிர்களால் உருவாக்கப்படும் சக்திவாய்ந்த நுண்துகள்கள் விண்வெளியில் நிறைந்து காணப்படுகின்றன. இவை மரபணுவை (DNA) சேதப்படுத்தும் அழிவு மாலிக்யூல்களை (Molecules - மூலக்கூறு) உற்பத்தி செய்கின்றன. மரபணுக்கள் சேதமடைவதால் புற்றுநோய் தாக்கம் உண்டாகிறது.

இந்த துகள்களை எலிகள் உடலில் செலுத்தி ஆராய்ச்சி நடத்தியபோது அவைகளுக்கு வேகமாக வயதாகி விடுவதுடன், முழுவதுமாக வெளுத்துப் போய்விட்டதாக அறிவித்தனர். பூமியில் உள்ள வாயுமண்டலம் மனிதர்களுக்கு கதிரியக்க ஆபத்து இல்லாமல் பாதுகாக்கிறது, ஆனால் விண்வெளியில் இந்தப் பாதுகாப்பு கிடையாது என்று இதன் ஆராய்ச்சியாளர் டாக்டர். கமல்தத்தா கூறியுள்ளார்.

மனிதன் யார் என்பதைப் பற்றி விதைகள் பகுதி 6–லிருந்து 11 வரையிலான புத்தகங்களை வாசித்தால் புரியும். மனிதன் தேவனைப் போலவே தேவனால் படைக்கப்பட்ட ஒரு ஆவி. தேவன் மனிதனை தன்னைப் போன்ற சாயலில் மாத்திரமல்ல, சகல ரீதியிலும் தன்னைப் போலவேதான் உருவாக்கியிருக்கிறார். அதனால் தேவனால் எல்லாம் கூடும் என்றால்; மனிதனாலும் எல்லாம் கூடும்! பரலோகத்தின் விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியான பூமியைத் தேவன் தன்னைவிட தரக்குறைவான ரீதியில் படைக்கப்பட்ட மனிதனிடம் நிச்சயமாக ஒப்படைத்திருக்க முடியாது.

அப்படி உருவாக்கியிருப்பாரானால் நிச்சயமாக மனிதனால் பூமியை ஆளுகை செய்யவும் முடியாது. மனுக்குலம் பூமியின் மீது தோன்றி சுமார் 6500 வருஷங்கள் ஆகிறது. இதுநாள் வரையிலும் மனிதன்தான் பூமியை ஆளுகை செய்து வருகிறான். அவன் தேவனுடைய பரிபூரணமான சித்தத்தின்படி இந்த பூமியை அவனால் ஆளுகை செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டபோதும்; அவன் எப்படியோ ஆளுகை நடத்தி வருகிறான். முதல் மனிதனின் பாவத்தால் சாபத்துக்குள்ளான பூமியின் நியமம் மாற்றப்பட்டபோதிலும்; அதனால் சொல்லிமுடியாத பிரச்சனைகள் பூமியின் மீது தோன்றின போதிலும்; எப்படியோ அவன் ஆளுகை செய்து தான் வருகிறான்.

ஆனால் தேவன் பரலோகத்தை ஆளுகை செய்வதைப் போல பூலோகத்தை மனிதன் ஆளவில்லை என்பதை பார்த்தாலே தெரியும்! பரலோகத்தைப் போல இருக்க வேண்டிய பூமி இப்படி தரங்கெட்டு நரகத்தைப் போல ஆகிப்போன கோரக்காட்சியை பார்க்க சகிக்காமல்தான் சாலமோன் ஞானி (பிரசங்கி) புலம்பித் தள்ளுகிறார். பிரசங்கி தேவனிடத்திலிருந்து ஞானத்தை மட்டுமல்ல, மனிதன் யார் என்ற வெளிப்பாட்டையும் பெற்றுக் கொள்கிறார். அவருடைய

புலம்பல்களில் அர்த்தம் இல்லாமல் இல்லை, அவர் வாழ்ந்த காலகட்டத்தில் புலம்புவதுதான் சாத்தியம். ஆனால் உலகத்தின் சாபத்தை ஜெயித்த இயேசு சாலமோனிலும் பெரியவராக நமக்குள் வாசம் செய்வதால்; நாம் புலம்பிக் கொண்டிருக்காமல் ஆக வேண்டிய காரியத்தை கவனிக்க வேண்டிய மகா பொறுப்பில் இருக்கிறோம்!

மனிதன் தன்னுடைய ஞானத்தினால் விண்வெளிக்கு சென்று தங்கும் அளவுக்கு தன்னுடைய ஆராய்ச்சியில் சாதனைகள் படைத்திருக்கிறான். நிச்சயமாக மனிதன் தேவனைப் போல இருப்பதால் தான் இவையெல்லாம் சாத்தியமாகின்றன. தேவனைப் போலிருக்கும் மனிதன் சந்திரனில் இறங்கியது, செவ்வாய் கிரகத்தில் ஆராய்ச்சி நடத்தியது, சூரியன் இருக்கும் பால்வெளி மண்டலத்தை கடந்து எங்கெங்கோ தன்னுடைய ஞானத்தை செலுத்தி பூமியைப் போலிருக்கும் கிரகங்களைக் கண்டுபிடிப்பது... இன்னும் என்னென்னவோ! இதில் எதுவுமே எனக்கு ஆச்சரியமாகத் தெரியவில்லை. ஏனென்றால் மனிதன் தேவனைப் போலிருக்கிறான்; அதனால்தான் அவனுக்கு இதெல்லாம் சாத்தியமாகிறது, இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

ஆனால் மனிதன் இவ்விதமாக விண்வெளிக்கு கடந்து செல்லும்போது பல பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டியதாய் இருக்கிறது. விண்வெளி ஆராய்ச்சிகளுக்கு மிக அதிகப்படியான அளவுக்கு செலவாகிறது. இது தாக்குப்பிடிக்க முடியாத ஒன்றாக இருப்பதால்; ஆய்வுகளை மிகக்குறுகிய அளவான எல்லைக்குள் நிறுத்த வேண்டியதாயிருக்கிறது. அது மட்டுமல்ல, சூரிய கதிர்களின் தாக்கத்தால் சரீரம் பலவிதத்தில் தாக்கத்துக்குள்ளாகிறது, பாதிக்கப்படுகிறது, நோய்வாய்ப்படுகிறது, செத்தும் போகிறது! ஏன் இப்படி நடக்கிறது? மனிதன் தேவனைப் போல செயல்பட முயற்சித்தாலும் அவனால் முழு அளவில் வெற்றி பெற முடியாமல் போவதற்கு காரணம் என்ன?

முதல் மனிதர்களான ஆதாம், ஏவாள் தேவனுடைய வார்த்தைக்குத் தொடர்ச்சியாக கீழ்ப்படிந்திருப்பார்களானால்; சர்ப்பம் (சாத்தான்) ஏவாளை வஞ்சித்திருக்க முடியாது. பூமிக்கு சாபமும் வந்திருக்காது, மனிதன் தேவ மகிமையை இழந்திருக்கவும் மாட்டான். பூமி பரலோகத்தின் விரிவாக்கமாக தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்திருக்கும், இயற்கை மனிதனுக்கு சாதகமாகவும் இருந்திருக்கும். ஏதேனில் ஆதாமும் ஏவாளும் பெற்றிருந்த மகிமையான சரீரம் இன்றளவும் மனிதனுக்கு இருந்திருக்கும். உலகத்தில் மரணம் என்பதே இருந்திருக்காது, பிறக்கிற மனிதர்கள் என்றென்றுமாக உயிரோடே இருந்திருப்பார்கள். 6500 வயதுடைய மனிதர்கள் இன்றளவும் பூமியில் உலாவிக் கொண்டிருப்பார்கள்! மனிதர்கள் சாகா வரம் பெற்றவர்களாக இருந்திருப்பார்கள்; அதனால் பூமியில் இந்த அளவுக்கு மனிதர்கள் வந்து பிறக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது. தேவையான அளவுக்கு மனிதர்கள் பிறந்திருப்பார்கள், தேவனும் அவர்களோடு உலாவி முகமுகமாக பேசி ஆளுகை செய்து கொண்டிருந்திருப்பார். 6500 வருஷங்களுக்கும் மேலாக மனுக்குலம் இப்படி அல்லாட வேண்டியதாயிருக்காமல்; குறிப்பிட்ட காலகட்டத்துக்குள் இருக்கிற மனிதர்களை வைத்து தேவன் தன்னுடைய திட்டத்தை பூமியின் மேல் நிறைவேற்றி முடித்திருப்பார்!

இப்படிப்பட்ட மகிமையில் மனிதன் தொடர்ச்சியாக நிலைத்திருந்திருப்பானானால்; விண்வெளி மனிதனுக்கு சாதகமாக இருந்திருக்கும்; முழு அளவில் ஒத்துழைப்பும் கொடுத்திருக்கும். விண்வெளி வீரர்களுக்கென்று விசேஷித்த விதமாக தயாரிக்கப்படும் உடை தேவையாக இருந்திருக்காது, நவீன விண்வெளி வாகனங்களைத் தயாரிக்க இந்த அளவுக்கு மெனக்கெட வேண்டிய அவசியமும் இருந்திருக்காது. எல்லாமே விரலைச் சொடுக்கு விடும் அளவுக்கு எளிதாக இருந்திருக்கும். புவி வெப்பமயமாதல் (Global Warming) அச்சுறுத்தல் பூமிக்கு வந்திருக்காது.

தேவன் உலகங்களை உருவாக்கி இருப்பதாக வேதத்தில் பார்க்கிறோம். ... *"இவரைக்கொண்டு (இயேசுவை) கொண்டு உலகங்களை உண்டாக்கினார் (..he made the worlds;) எபி. 1:2." "விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப்பட்டதென்றும், (the worlds were framed by the word of God,) ... எபி. 11:3".* பூமியை மனுபுத்திரனுக்குக் கொடுத்தார், சரி. பூமியைப் போன்ற (அல்லது பூமியை போல இல்லாமல்) வித்தியாசமாக ஒரு கிரகத்தை தேவன் மனுபுத்திரனைப் போன்ற, (அல்லது மனுபுத்திரனைப் போல் இல்லாமல்) வித்தியாசமாக இருக்கும் வேறு ஒரு உயிரினத்திடம் ஏன் கொடுத்திருக்க கூடாது. அப்படி தேவன் கொடுத்திருக்கலாமோ என்று நினைக்கத் தோன்றும் அளவில் பல

செய்திகளைக் கேள்விப் படுகிறோம். அதில் ஒன்று:

பறக்கும் தட்டுகள் பற்றிய செய்திகள் அவ்வப்போது வெளிவந்து கொண்டேயிருப்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். சிலர் பறக்கும் தட்டை பார்த்ததாகவும், படம் பிடித்ததாகவும் சொல்லுகிறார்கள். பறக்கும் தட்டைப் பற்றி நம்பக்கூடிய தகவல்களே 5,000–க்கும் மேல் வந்துவிட்டன. இந்தத் தகவல்களை வைத்து பறக்கும் தட்டுகளை ஆராய்ச்சி செய்ய 1968–ம் ஆண்டு அமெரிக்காவில் கொலரடோ செயல் திட்டம் தொடங்கப்பட்டது. இதைப் பார்த்ததாக கூறுபவர்களின் கருத்தைத் தொகுத்த போது: இந்த பறக்கும் தட்டுகள் நீள்வட்ட வடிவமுடையவை. விமானங்கள் பின்பற்ற முடியாத வேகத்தில் பறக்கக்கூடியவை. பிரகாசமான ஒளிவீச்சைக் கொண்டது. தரையில் இறங்கும்போது மூன்று கால் மீது நிற்கும். இதை ஓட்டுபவர்கள் 4 அடி உயரம் கொண்டவர்கள். அவர்களின் தலையில் கொம்பு போன்ற அமைப்பு இருக்கிறதாம்.

நமது சூரிய குடும்பத்தைப் பொறுத்தவரை மற்ற கிரகங்களில் மனிதனைவிட அறிவில் சிறந்த உயிரினங்கள் இருக்க முடியாது என்று விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். இதனால் பறக்கும் தட்டு வேறு ஏதாவது ஒரு சூரியக்குடும்பத்தின் கிரகத்தில் இருந்து தான் வந்திருக்க முடியும்.

அப்படிப்பார்த்தால் நமக்கு மிக அருகில் உள்ள நட்சத்திரமே 4 ஒளி ஆண்டுகள் தூரத்தில் இருக்கிறது. ஒளி ஒரு வினாடிக்கு 3 லட்சம் கி.மீ. வேகத்தில் செல்கிறது. இப்படியாக ஒரு ஆண்டில் அது தொடர்ந்து செல்லும் தூரத்தைத்தான் ஒரு ஒளி ஆண்டு என்கிறோம். 1 வினாடிக்கு ஒரு லட்சம் கி.மீ. வேகத்தில் பயணித்தால் பூமிக்கு அருகில் உள்ள நட்சத்திரத்திற்குச் செல்ல 4 ஆண்டுகள் ஆகும். மனிதன் இன்று பயன்படுத்தும் அதிவேக ராக்கெட்டின் வேகம் வினாடிக்கு 12 கி. மீட்டர்தான். இந்த வேகத்தில் போனால் பக்கத்தில் இருக்கும் நட்சத்திரத்தைச் சென்றடைய 30 ஆயிரம் ஆண்டுகள் ஆகும். இந்தக் கணக்கீட்டின்படி பார்த்தால் ஒளியை விட பறக்கும் தட்டு வேகமானது என்று ஆகிறது!

உதாரணமாக ஒரு வினாடிக்கு 2 லட்சத்து 60 ஆயிரம் கி.மீ. வேகத்தில் பறக்கக்கூடிய ஒரு டன் எடை கொண்ட ஒரு ராக்கெட்டைத் தயார் செய்ய வேண்டுமானால் 250 கோடி கிலோவாட் மின் ஆற்றல் வேண்டியதாகிறது. இது உலகம் முழுவதும் ஒரு ஆண்டுக்கு மேல் உற்பத்தி செய்யப்படும் ஆற்றலின் அளவு. மேலும் இந்த வேகத்தில் செல்லும் ஒரு ராக்கெட்டை அதே வேகத்தில் பூமியில் இறக்க முடியாது. பாதுகாப்பான முறையில் தரையிறக்க அதன் வேகத்தை பல ஆயிரம் மடங்கு குறைத்தாக வேண்டும். அப்படி வேகத்தை குறைப்பதற்கு அதை இயக்கத் தேவைப்படும் ஆற்றலைவிட 200 மடங்கு அதிக ஆற்றல் தேவைப்படும்!

சரி, அப்படியே ஒளியின் வேகத்தில் செல்லக்கூடிய ஒரு விண்கலத்தை தயாரித்து விட்டதாகவே வைத்துக்கொள்வோமே. அந்த வேகத்தைத் தாங்கிக்கொள்ளக்கூடிய விண்கலமோ, உயிரினமோ கிடையாது, நிச்சயமாக சிதைந்து போய்விடும். இந்தக் கணக்கீடுகளையெல்லாம் கூட்டிக்கழித்துப் பார்க்கும்போது, பறக்கும் தட்டுகள் என்பது சாத்தியமான ஒன்றல்ல, அது கற்பனை கதை என்று விஞ்ஞானம் முடிவு கட்டியிருக்கிறது.

விஞ்ஞானம் இவ்வளவுதான் என்று ஒரு விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டால் ... அது சரி என்றாகிவிடுமா என்ன? அவர்களின் கண்டுபிடிப்பின் எல்லைக்கு அப்பாற்பட்டும் சில அல்லது பல விஷயங்கள் ஏன் இருக்கக்கூடாது? இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய உலகத்தின் காரியங்களை ஆராய்ச்சி செய்ய விஞ்ஞானிகளால் முடியாது என்பது தெரிந்த விஷயம். இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு மண்டலம் இருக்கிறதென்பதும், அது பரலோகம் என்பதும், அது கண்களால் காணமுடியாத அளவில் உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு இடம் என்பதும் நமக்குத் தெரியும். அந்த ஆவி மண்டலத்தில், கண்காணமுடியாத ஆவி மனிதர்களாகிய நாம், பரிசுத்தாவியானவரின் உதவியுடன் உலாவி வருகிறோம். அதனால் நமக்கு தேவனால் கிடைத்த வெளிப்பாட்டின்படி நிச்சயமாக உலக விஞ்ஞானிகளைவிட மகத்தான பெரிய பிரமிக்கத்தக்க விஷயங்களை கண்டுபிடிக்க முடியும்.

ஏனென்றால் கண்களால் காணக்கூடியதாக இருக்கிற இந்தப் பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் கண்களால் காணமுடியாமல் இருக்கிற காரியங்கள் (பரலோகம்) தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது என்பதை நாம் முன்பே பார்த்தோம். உதாரணமாக கண்களால்

காணக்கூடிய மனிதனின் சரீரத்தை கண்களால் காணமுடியாத மனிதனின் ஆவி (உள்ளான மனிதன் – உண்மையில் அவன்தான் மனிதன்) தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது என்பதை **demonstrate** செய்து காண்பித்தேன். மனிதன் இறந்து, அவனுடைய உள்ளான மனிதனான ஆவி அவனைவிட்டு பிரிந்து சென்றவுடனே அவனுடைய சரீரம் செத்த பிணமாக மாறுகிறது! கண்களால் காணமுடியாத ஆவி மனிதன் தான் இதுவரை (சுமார் 70 வருடங்களாக) இந்தக் கண்களால் காணமுடிகிற சரீரத்தை இயக்கி வந்திருக்கிறான் என்பதை நினைத்தால் ஆச்சரியமாக இல்லையா? இந்தக் காரியமானது நாம் அன்றாடம் பார்த்து பழகிப் போன ஒன்றாகிவிட்டதால் இதில் இருக்கிற ஆச்சரியம் மறைக்கப்பட்டுப் போனது.

நாம் கண்களால் காண்கிற இந்தப் பூலோகத்தை, அதை விட பலமடங்கு சக்திவாய்ந்த கண்காணாத ஒரு மண்டலம் (பரலோகம்) தன்னுடைய ஆளுகைக்குள் **(control - authority)** வைத்திருக்கிறது. (விதைகள் பகுதி 10, 11–ல் தேடி வாசியுங்கள்.) இந்த பூலோகத்தையே கண்ணுக்குத் தெரியாத ரீதியில் இருந்து இயக்குகிற பரலோகத்தின் மனிதர்கள் நாம்! ஆம், நாம் பரலோக வாசிகள்! நம்முடைய உள்ளான மனிதன் இந்த பூமிக்குரியவனே அல்ல, அவன் ஆவிக்குரியவன். மனிதனின் சரீரம் மட்டும் தான் இந்த பூமிக்குரியது. விஞ்ஞானிகள் இந்த பூமிக்குரிய கண்ணோட்டத்துடன்தான் ஆராய்ச்சிகளைச் செய்கிறார்கள். அவர்களுடைய உள்ளான மனிதனின் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படாமல் இருப்பதால்; வெறும் சரீரத்தி–ருக்கும் கண்களால் காண்பவைகளை வைத்து ஒரு முடிவுக்கு வருகிறார்கள்; அவர்களுடைய மூளையறிவும் அதற்கு ஒத்துழைக்கிறது அவ்வளவுதான். ஆனால் நாமோ, இந்தப் பூமியைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற ஆவிக்குரிய மண்டலத்தைச் சேர்ந்தவர்கள். நம்முடைய ஆவிக்குரிய கண்கள் காண்கிற காரியங்களை வைத்து ஆராய்ச்சிகளைச் செய்கிறோம்.

அதனால் பூலோக விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து முடித்துவிட்ட காரியங்களை நம்மால் தொடர முடியும்! அவர்கள் முற்றுப்புள்ளி வைத்துவிட்ட கதைகளை நாம் “ , ” அல்லது “ ; ” போட்டு தொடர்ந்து எழுத முடியும்! அப்படிச் செய்த ஆராய்ச்சியின் குறிப்புகள்தான் இந்த வேதாகமமும் சம்பவங்களும் பகுதி – 2 புத்தகம்! தேவனுடைய ஆவியானவரின் உதவியுடன் ஆராய்ச்சி செய்தபோது விண்வெளி ஆராய்ச்சி விஷயங்களில் கூட சில கூடுதலான தகவல்களைப் பெற முடிந்தது. பூமியை மனுபுத்திரனுக்குக் கொடுத்தார்; சரி, வேறு எந்த கிரகத்தையும் அவர் மனுபுத்திரனுக்குக் கொடுக்கவில்லை, அதுவும் சரி! அதற்காக அவர் வேறு எந்த கிரகத்தையும் வேறு யாருக்கும் கொடுக்கவில்லை என்று சொல்ல முடியாதே! கொடுத்திருக்க முடியாது வானங்கள் கர்த்தருடையது என்று எழுதப்பட்டிருக்கிறதே என்று ஒரு கூட்டத்தார் சொல்லுகிறார்கள். பூமி கர்த்தருடையது என்றும் எழுதியிருக்கிறதே, அதை அவர் நமக்குத் தந்திருக்கிறாரே! ஒரு வசனத்தை வைத்து ஒரு முடிவுக்கு வரக்கூடாது; அதற்கு ஜோடியான வசனங்களைக் கண்டுபிடித்து, சேர்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

*“கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும். ஏசா. 34:16”*

வசனத்தை வாசித்தால் மாத்திரம் போதாது, வசனத்தை ஆவிக்குரிய ரீதியிலான **Microscope** ன் அடியில் வைத்து ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

*“வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; ... யோவா. 5:39”*

வேற்றுகிரக வாசிகள், (பறக்கும் தட்டுகள்) பற்றிய செய்தியை மேலே வாசித்தோம். அது சாத்தியமல்ல என்பதை விளக்கியிருக்கிறார்கள் விஞ்ஞானிகள். உண்மை தான், தேவ மகிமையை இழந்த மனிதனின் சரீரத்தால், அதிலிருக்கும் மூளையால், அதன் அறிவால் இவ்வளவுதான் சாத்தியம். மனிதன் தன் சரீரத்தில் தேவன் ஆரம்பத்தில் கொடுத்திருந்த மகிமையை இழக்காமல்; அப்படியே தக்க வைத்திருந்திருப்பானானால் அவனால் எதுவும் சாத்தியமாகியிருக்கும். அப்படியானால் பறக்கும் தட்டுகள் வருவது உண்மைதானா? 5000–க்கும் மேற்பட்ட நம்பகமான செய்திகள் இதைப் பற்றி வந்திருப்பதால்; அது சாத்தியம் தான் என்ற முடிவுக்கு வந்தால்தான் என்ன?

கண்களால் காணக்கூடாத, தன்னைப் போலிருக்கிற ஆவி மனிதனை, தேவன் காணக்கூடிய மண்ணாலான பூமிக்கு அனுப்பினபோது; அவன் தங்குவதற்கு ஏற்ற சரீரத்தை பூமியின் மண்ணாலேயே உருவாக்கினார். அதே போல கண்களால் காணக்கூடாத, தன்னைப் போல (அல்லது தன்னைப் போல் அல்லாத) ஒரு ஆவி மனிதனை (அல்லது மனிதன் அல்லாத வேறொன்றை) பூமியைப் போன்ற (அல்லது வேறு மாதிரியான) இன்னொரு கிரகத்துக்கு அனுப்பும் போது அந்தக் கிரகத்தின் மூலக்கூறினால் அவனுடைய சரீரத்தை (கூடாரத்தை) வடிவமைத்திருக்கலாம். அப்படி வடிவமைக்கப்பட்ட வேற்றுக்கிரகவாசி தேவன் தனக்குக் கொடுத்த சரீரத்தின் மகிமையை கெடுத்துக் கொள்ளாமல் இருந்திருப்பானானால்... அவன் பறக்கும் தட்டுகளில் பூலோகத்திற்குள் வந்து இறங்குவது சாத்தியமானதுதானே? பூமியில் வாழ்ந்த மனிதன் தன்னுடைய மகிமையை கெடுத்துக் கொண்டான் என்பதற்காக, எல்லாக் கிரக மனிதர்களும் அவ்விதமாக கெடுத்துக் கொண்டார்கள் என்று சொல்லிவிட முடியாதே?

அதாவது தேவ மகிமையை இழந்த மனிதனால் வேறு கிரகங்களில் போய் இறங்க முடியவில்லை. ஆனால் தனக்கு தேவன் தந்த மகிமையை இழக்காமலிருக்கிற ஏதோ ஒரு வேற்று கிரகவாசிகள் நம்முடைய கிரகத்தில் வந்து இறங்கிவிடுகிறார்கள்! இதை வாசிக்கும்போது கொஞ்சம் அதிகப்படியாகத் தோன்றலாம். இது ஒரு வேத ஆராய்ச்சி புத்தகம்தான்; ஆராய்ச்சிகள் நடந்து கொண்டு தான் இருக்கிறதே தவிர இன்னும் எதையும் ஒரு முடிவுக்கு கொண்டு வரவில்லை. எனக்குக் கிடைத்திருக்கும் வெளிப்பாட்டின் அளவுக்குத்தக்கதாக, அதனடிப்படையிலான ஆராய்ச்சியின் குறிப்புகளை எழுதி வருகிறேன், அவ்வளவுதான்.

*“அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது.”* என்று சங். 145:3–ல் பார்க்கிறோம். தாவீதின் நாட்களின் தேவனுடைய மகத்துவங்களை ஆழமாக ஆராய முடியாத சூழ்நிலை இருந்தது. இயேசு வெளிப்படவில்லை, அவருடைய ஆவியானவர் நிரந்தரமான முறையில் ஊற்றப்படவில்லை. சாத்தானின் தலை நசுக்கப்படவில்லை, மனிதன் தேவனுடைய பிள்ளை என்ற தகுதியைப் அக்காலகட்டங்களில் பெற்றிருக்கவில்லை, பரலோக வாசல் திறக்கப்படவுமில்லை, இயேசுவின் நாமம் மனிதனுக்கு தரிப்பிக்கப்படவில்லை. நிறைவேற்ற முடியாத நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளோடு மனிதன் போராடிக் கொண்டிருந்தான், பதிலே கிடைக்காத பல கேள்விக்குறிகள் (?) அவர்களுக்கு முன்பாக இருந்தன. ஆனால் நம்முடைய காலகட்டம் வேறு. இயேசு வெளிப்பட்டு, தன்னுடைய ஆவியை நிரந்தரமாக நம் இருதயத்தில் ஊற்றினார். சிலுவையில் சாத்தானின் தலை நசுக்கப்பட்டது, நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற தகுதியை மீண்டுமாக கைப்பற்றிக் கொண்டோம். பரலோக வாசல் திறக்கப்பட்டது, நம்முடைய குடியிருப்பே அங்கே தான் இருக்கிறது (பூமியில் இருப்பது மனிதனின் கூடாரமாகிய சரீரம் மாத்திரம்தான்). நமக்கு இயேசுவின் நாமம் தரிப்பிக்கப்பட்டது. நியாயப்பிரமாணத்திலுள்ளதையெல்லாம் நிறைவேற்றி முடிப்பதற்கு வசதியாக வேறொரு புதிய பிரமாணம் இயற்றப்பட்டது. அது விசுவாசப்பிரமாணம், கிருபை பிரமாணம், நீதி பிரமாணம், கிறிஸ்துவின் பிரமாணம் என்று பல பெயர்களில் புதிய ஏற்பாட்டில் வருகிறது. நம்முடைய கேள்விகளுக்கெல்லாம் ஆச்சரியப்படும் விதத்தில் பரிசுத்தாவியானவரிடமிருந்து பதில் வந்தது!

அதனால் *“ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்;”* ... என்று 1 கொரி. 2:15–ல் பார்க்கிறோம்.

*“தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்”* என்று பவுல் ஜெபிக்கிறார் எபே. 1:19–ம் வசனத்தில். அப்படியே பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக ஜெபித்துப் பெற்றுக் கொண்டு வேதத்தை ஆராய்ந்து பார்ப்போமானால்; அவருடைய மகத்துவங்களை ஆராய முடியும். அவருடைய வல்லமையின் இடிமுழக்கத்தையும் அறிய முடியும்!

*“அவருடைய வல்லமையின் இடிமுழக்கத்தை அறிந்தவன் யார்”* என்று சொன்ன யோபுவும் தாவீதின் சூழ்நிலைக்குள்தான் இருந்தார். பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களுக்கு முடியாமல்

போன எல்லா காரியங்களையும் நம்மால் செய்ய முடியும். நாம் அவர்களைவிட உயர்வானவர்கள் என்பதனால் அல்ல, நமக்கு இரண்டு கொம்பு முளைத்திருக்கிறது என்பதனாலும் அல்ல! இயேசு நமக்குள் இருப்பதால், நமக்குப் பதிலாக செயல்படுவதால் இது சாத்தியமானது.

*"கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; ... கலா. 2:20"*

## சினிமா!:

உலகத்தோற்றத்திற்கு முன்னதான காரியங்கள் முதல் உலகம் முடிந்த பிறகு நடக்கும் காரியங்கள் வரை நடந்த... நடக்கிற... நடக்கப்போகிற... எல்லாவற்றையும் பற்றி வேதத்தில் முன்னறிவிப்பு இருக்கிறது. ஆதியாகமம் 2–ம் அதிகாரத்துடன் பூமியின் ஆசீர்வாதத்தை சாபம் வந்து கெடுத்துப்போட்ட சோகத்தைப் பார்த்து வருகிறோம். அதுவரை மனிதன் சுகமாக வாழ ஒத்துழைத்த பூமி, அதற்குப் பிறகு ஒத்துழைக்க மறுத்தது, எதிர்த்து வந்தது. வாழ்க்கையை கடக்க மனிதன் எதிர்நீச்சல் போட வேண்டியதாக இருந்தது. "வெற்றி வேண்டுமா போட்டுப் பாரடா எதிர்நீச்சல்!" என்றுப் பாடினான் மனிதன். சாப வெள்ளத்தில் மனிதனால் நேர் நீச்சல் போட முடியாமல் போனது!

இதெல்லாம் மனிதனைச் சோர்வுக்குள்ளாக்கி விடவில்லை. மனிதன் தேவனைப் போலிருப்பதால் அவனுக்குள்ளிருக்கிற தேவ ஞானம் அவனுக்குக் கைகொடுத்தது. மனிதன் தன்னை தகவமைத்துக் **(adjust)** கொண்டு வாழ ஆரம்பித்தான். தன்னுடைய கையின் பிரயாசத்தினால் மாற்றங்களைக் கொண்டு வந்தான்; நெற்றி வியர்வை சிந்த பாடுபட்டான். எதிர் நீச்சல் போடக் கற்றுக் கொண்டான், அது அவனால் முடிந்தது, காலப்போக்கில் கஷ்டங்கள், எதிர்ப்புகள் அவனுக்குப் பழகிப் போனது, எளிதாகவும் மாறிப் போனது. நாகரீகம், விஞ்ஞானம், அறிவியல் என்று ராக்கெட் வேகத்தில் சாபத்திரையை கிழித்துக்கொண்டு சீறிப்பாய்ந்தான்!

நின்று, நிதானித்து இறந்த கால மனிதர்களின் வாழ்க்கையை தோண்டியும் பார்த்தான். இதுவரை வாழ்ந்த ஜனங்கள் 88 விதமான நாகரீகங்களைக் கடந்து முன்னேறி இக்கால நாகரீகத்திற்குள் வந்திருப்பதாக புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எல்லாவற்றையும்விட மனிதனின் அறிவு என்னை ஆச்சரியப்படுத்தியது; அதாவது மனிதனின் மூளைக்குள் இருந்து வெளிப்படும் தேவனுடைய ஞானத்தை நினைத்தால் விழி பிதுங்கிப் போகிறது. *"... அப்போது (இப்போது) அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் ... தானி. 12:4."* மனிதன் தனக்குள் இருக்கிற தேவனுடைய ஞானத்தை உபயோகித்து; எதிர்த்து வரும் சாபத்தை அடக்கி, அதைத் தன் கைக்குள் போட்டுக் கொள்ள கற்றுக் கொண்டான். விஞ்ஞான கண்டுபிடிப்புகளால் செயற்கையான உபகரணங்களை உருவாக்கிக் கொண்டு; வாழ்க்கையில் வெற்றி நடை போட்டான். ஆனால் ஒரு **drawback;** மனிதனின் வாழ்க்கை இயந்திரமயமாகிப் போனது. இவையெல்லாம் வேதத்தில் முன்னறிவிப்பாக இருக்கிறது; அதில் சினிமாவைப் பற்றியும் இருக்கிறது. இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. காரணம் வேதத்தை எழுதியவர் முக்காலத்தையும் உணர்ந்த சர்வவல்லமை பொருந்திய பரிசுத்தாவியாகிய தேவன், அல்லேலூயா!

*"... ஆகாமியக் கூடாரங்களில் (tents of wickedness) வாசமாயிருப்பதைப் பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன். சங். 84:10."* இந்த வசனத்தில் வரும் ஆகாமியக்கூடாரம் என்பது உலகத்தின் பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதற்காக உலகத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இடங்களைக் குறிக்கிறது. எந்தவொரு காரியமும் ஆரம்பத்தில் ஒரு நல்ல நோக்கத்தோடு தான் ஆரம்பிக்கப்படுகிறது. நாளடைவில் பாவத்தில் இருக்கிற மனிதர்கள் பூமியின் சாப கதிர்வீச்சுக்களைத் தாக்குப்பிடிக்க முடியாமல் சாத்தானுக்குக் கீழ்ப்படிந்து விடுவதால் அது தவறான ரீதியில் – பாவகாரியங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டு விடுகின்றன. தவிர்க்கமுடியாத அப்படியொரு பிரச்சனையில் சிக்கிக்கொண்ட ஒரு தகவல் தொடர்பு சாதனம் தான் **(media - visual communication)** தான் இன்று மனிதனின் வாழ்க்கையின் ஒரு பகுதியாகிப்போன சினிமா. தொலைக்காட்சி பெட்டி, கணிணி, கையடக்க தொலைபேசியும் இதில் அடக்கம்.

ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் தான் வாழும் பூமியில் நடக்கும் நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ள வேண்டிய உரிமை பெற்றிருக்கிறான், தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்திலிருக்கிறான், தெரிந்து கொள்ள வேண்டிய கட்டாயத்திலுமிருக்கிறான். சுமார் 50 வருடங்களுக்கு முன்பு உலகச் செய்திகளை மனிதனுக்கு கடத்துவதில் வானொலி, தினசரி செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன. அதற்கு முன்பாக தூதுவர்கள் குதிரைகளில் செய்தி கொண்டு செல்வதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். அக்காலங்களில் மன்னர்கள் புறாக்களை பயன்படுத்தியிருக்கிறார்கள், தண்டோரா போடும் முறையும் இருந்தது. யோசேப்பு தன்னுடைய சகோதரர்களின் சுகசெய்தியை விசாரிக்க நடந்தே தேசம் விட்டு தேசம் செல்வதைப் பார்க்கிறோம்.

நிறைய சொல்லலாம்... எது எப்படியோ உலகத்தோற்றமுதல் இந்நாள் வரையிலும் தகவல் பரிமாற்றம் என்பது வெற்றியாக நடந்து கொண்டுதான் இருக்கிறது. இன்று **T.V.** முன் உட்கார்ந்தால்; தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடந்த காரியங்களை பார்க்க முடிகிறது. சென்னை சட்டமன்றத்தில் நடந்த காரியங்களை பார்க்க முடிகிறது. புது டில்லி மக்களவையில் நடந்த காரியங்களைப் பார்க்க முடிகிறது. மழை நீரினால் சென்னை பட்டணவாசிகளின் பரிதவிப்பை பார்க்க முடிகிறது. வடஇந்திய எல்லைப் பிரச்சனைகளைக் கவனிக்க முடிகிறது. பனிப்பிரதேசங்களில் வாழும் பெங்குவின் பறவைகளைப் பார்வையிட முடிகிறது. அமெரிக்கா – நியூயார்க்கில் வசிக்கும் 21 வயதான நாயைப் பற்றிய செய்தியை அறிய முடிகிறது. அந்த நாய்க்கு (சானல்) அதன் உரிமையாளர் கர்ல் புது டிரஸ் அணிவித்து, கேக் வெட்டி பெரிய அளவில் பிறந்த நாள் கொண்டாடினார்! இப்படியாக உலகத்தையே கிரகிக்கும் – உள்வாங்கும் – உறிஞ்சும் **(absorb)** வாய்ப்பு கிடைக்கிறது. இது ஒரு நல்ல, மனுக்குலத்துக்கு ஒரு அத்தியாவசியமான காரியம் என்பதை மறுக்க முடியாது.

தான் வாழும் பூமியில் நடக்கும் சகல காரியங்களையும் கவனித்துப் பார்க்க வேண்டும் என்ற குணாதிசயத்தை மனிதன் இயற்கையாகவே, தன்னைப் படைத்த தேவனிடமிருந்து பெற்றிருக்கிறான். *"... கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது; ... 2 நாளா. 16:9."* மனிதனுடைய இந்த இயல்புக்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. நாமெல்லோரும் ஒரே பூமியில்தான் வாழ்கிறோம். ஆஸ்திரேலியாவிலுள்ள காப்ஸ் ஹார்பர் நகரில் வசிக்கும் –ஸ் கிரேவால் என்பவருக்கும், சீனாவின் மாஜியாகியாவோ கிராமத்தைச் சேர்ந்த விவசாயி காலோ பென்ஜியிங் என்பவருக்கும், அமெரிக்கா – பாவெல் நகரை சேர்ந்த மேரி ஆன் ஸ்மித்க்கும், தென்னிந்தியா – திருநெல்வேலி, புளியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மூக்கம்மாளுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்க முடியுமா? நிச்சயமாக இருக்க முடியாது என்று தான் தோன்றுகிறது; ஆனால் நிச்சயமாக இருக்கிறது என்பதே ஆணித்தரமான உண்மை! இவர்களுக்கு இடையில் இருக்கிற சம்பந்தத்தின் கணக்கீடு மிகவும் புறக்கணிக்கத்தக்க அளவில் குறைவாக இருக்கலாம். ஆனால் சம்பந்தம் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது; ஏனென்றால் எல்லோரும் ஒரே பூமியின் மீது தான் வாழ்கிறோம்.

அப்படி பூமியின் மீது நடக்கும் விஷயங்களை மனிதர்கள் தெரிந்து கொள்வதினால் என்ன பிரயோஜனம்? அப்படி தெரிந்து கொள்வதினால்தான் இந்த பூமியே இயங்கி வருகிறது. தகவல் சேகரிப்புகள், பரிமாற்றங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்க உதவுகிறது. அமெரிக்காவிலிருந்து வந்தது **global warming** செய்திகள் (பயமுறுத்தல்கள்!). பேக்கரியில் மைசூர்பாகு வாங்கினேன், அதை பாலிதீன் கவரில் போடப்போன கடைக்காரனிடம் மறுப்புத் தெரிவித்து அதைத் தாள் பேப்பரில் வைத்து கட்டச் சொன்னேன். எப்போதும் இது சாத்தியமில்லை தான்; என்றாலும் இதுதாங்க என்னால் முடிந்தது! என்றாலும் சிறு துளி பெருவெள்ளம் என்பது எனக்குத் தெரியும். அதென்ன **bracket** க்குள் பயமுறுத்தல்கள்? இதுமட்டுமல்ல, பூமியின் மீது நடக்கிற பல நிகழ்வுகள் மனிதனை பயமுறுத்தவே செய்கின்றன. சில காலகட்டத்திற்கு முன்பாக பூமி குளிர்ச்சியடைந்து வருவதாகக்கூடத்தான் பரபரப்பு செய்திகள் வந்தன! நீங்க பயப்படுகிற மாதிரியெல்லாம் பூமிக்கு எதுவும் நடக்கப் போவதில்லை. என்ன நடந்தாலும் சரி; அதற்கேற்றவாறு தகவமைத்துக்கொள்ளும் ரீதியில் தான் பூமி உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருப்பதால்தான் 20,00,000–க்கும் மேற்பட்ட ஜீவஜந்துக்களும், 10,00,000–க்கும் மேற்பட்ட தாவர இனங்களும் இன்னமும் இந்த பூமியின் மீது அழியாமல், முடிவுக்கு வராமல் வெற்றியாக உயிர்வாழ்ந்து

கொண்டிருக்கின்றன!

திரையரங்குகளில் திரைப்படம் காட்டப்படுவது கூட இப்படிப்பட்ட பல நல்ல நோக்கங்களுக்காகத்தான் முதலில் கொண்டு வரப்பட்டது. நல்லநோக்கத்துடன் உருவாக்கப்பட்ட பலகாரியங்களை தந்திர சாத்தான் கெட்ட நோக்கத்துக்காக திருப்பியதைப் போல இதையும் திருப்பினான். பூமிக்குரிய ரீதியில் மக்களை நல்வழிப் படுத்த, நல்லகாரியங்களை எடுத்துச் சொல்லி புரிய வைக்க, கலையுணர்வை உண்டாக்க, விழிப்புணர்ச்சியை உருவாக்க ... இப்படியாக ஆரம்பக்கட்டத்தில் திரைப்படங்கள் வெளிவந்ததென்னவோ உண்மைதான். ஆனால் காலப்போக்கில், படம் விறுவிறுப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், தற்காலிக சந்தோஷத்திற்காகவும், வியாபார நோக்கத்திற்காகவும், திரைப்படத்துறை நிர்பந்தங்களுக்குள்ளாகியது. வன்முறைகள், கொலை வெறிகள், கொள்ளை, பல விதமான சமுதாய சீர்கேடுகள் சினிமாவை ஆக்கிரமித்தன.

ஆதியில், ஏதேனில், சாத்தானால் ஆரம்பமான இச்சை என்ற பாவம் (காமம் – காதல்) இதில் முக்கியமான இடத்தை பிடித்துக் கொண்டது. மனிதனால் மேற்கொள்ள முடியாத (ஜெயிக்க முடியாத) இச்சை என்ற இந்தப் பாவத்தை சாத்தான் சினிமாவின் முக்கியமான விஷயமாக்கியிருப்பது **(significant theme)** சாத்தானின் எதிர்மறையான கெட்ட புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறது! காதல் என்ற வார்த்தை அந்த ஆதி பாவமாகிய இச்சையை நியாயப்படுத்த முயற்சிக்கும் சாத்தானின் வார்த்தை! பாவத்தை பாவமல்ல என்று போதித்து; அதைச் சரியானது தான் என்று வாதாடினான்! காதல் என்ற வார்த்தைக்கு பரிசுத்தமான அன்பு என்ற பொய்முலாம் பூசி வாலிபர்கள் காதில் பூ சுற்றினான்.

அவன் வார்த்தையை நம்பி உலகத்தோற்றமுதல் காதலுக்காக கண்ணீர் சிந்தி, வாழ்க்கையை பறிகொடுத்து, நாட்டை இழந்து, வீட்டைவிட்டு வெளியேறி, பைத்தியமாக அலைந்து, செத்து மடிந்தவர்கள் கோடாகோடி. இந்தப் பாவத்தை தீவிரப்படுத்த சினிமா சாத்தானுக்கு ஒரு வசதியான ஊடகமாகிப்போனது. அதனால்தான் சினிமா பார்க்காதே என்ற எச்சரிக்கை பிரசங்கங்களில் கொடுக்கப்படுகிறது. சினிமா மட்டுமல்ல வேறெந்த பாவமானாலும் சரி, அதை செய்யாதே என்று எச்சரிப்பு கொடுப்பதால் மட்டும் யாரும் திருந்தி விடுவதில்லை, திருந்தவும் முடியாது. ஒரு மனிதன்; அவன் யாராக இருந்தாலும் சரி, சுயமுயற்சியினால் பாவத்தின் பிடியிலிருந்து வெளியேறவே முடியாது. அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? பாவம் செய்யாமல் இருக்கும் ஆற்றல் நமக்குள் வர வேண்டும். அது எப்படி வருகிறது? அது இயேசுவால் வருகிறது. **(Ref.** பாவம் செய்யாமல் இருக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றுக் கொள்ளும் விதத்தைப் பற்றி விதைகள் பகுதி 6–லிருந்து பகுதி 11 வரையிலான புத்தகங்களில் பலரீதியில் விரிவாக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது)

சினிமா பார்ப்பதை கண்டித்து எச்சரிப்பு குரல் கொடுத்த ஆயிரம் பிரசங்கங்களைக் கேட்டிருக்கிறேன். சிலமுறை சுயமுயற்சியால் நிறுத்தியும் பார்த்தேன். மற்ற பாவங்களைப் போலவே இதையும் என்னால் விட முடியாமல் போனது. அதற்குப் பிறகு நான் எந்த பாவத்தையும் விட முயற்சிக்கவில்லை. ஆனால் எனக்கு ஒன்று புரிந்தது, பாவத்தை விட்டுவிட – சினிமா பார்ப்பதை விட்டுவிட மனிதனால் முடியாது. ஆனால் நமக்கு யாராவது ஒருவர் இந்த விஷயத்தில் உதவி செய்வதாக இருந்தால்... அதாவது, பாவத்தை விட்டுவிடும் ஆற்றலை கொடுத்தால்... முடியும் என்று தோன்றியது. அதாவது, நாம் சிக்கிக்கொண்டிருக்கிற பாவமாகிய சிறையிலிருந்து நம்மை வெளியேறும்படி செய்ய, அதன் பூட்டை உடைத்து, கதவைத் திறந்து, வெளியே கொண்டுவர ஒரு நபர் தேவைப்படுகிறார். அப்படிப்பட்ட ஒரு நபர் வந்து எனக்காகச் செயல்பட்டால் நிச்சயமாக பாவத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று தோன்றியது. என் எதிர்பார்ப்பு வீணாகவில்லை, அப்படிப்பட்ட ஒருவர் வந்தார், என்னை வெளியே கொண்டு வந்தார், அவர்தான் இயேசு! இயேசு சொன்ன வார்த்தைகளை கவனியுங்கள்:

*“என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்க மாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. யோவா. 15: 4, 5”* கனி கொடுப்பது

என்றால் என்ன? *கலாத்தியர் 5: 22, 23 ல் பார்க்கிறோம். அவை: அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகியவை.*

இந்த வசனத்தைப் புரிந்துக்கொள்ளும் ரீதியில் சொல்கிறேன். "என்னிடத்தில் (இயேசுவிடத்தில்) வா, என்னை ஏற்றுக்கொள், நான் உனக்குள் வந்துவிடுவேன். என்னை உன் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளாவிட்டால் உங்களால் பாவம் செய்யாமல் இருக்க முடியாது. திராட்சைச்செடியும் கொடியும் போல நீ என்னுடன் சேர்ந்து இருந்தால் மாத்திரமே பாவம் செய்யாமல் தப்பித்துக்கொள்ள முடியும். என்னை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல்; பாவம் செய்யாமல் இருக்க முயற்சித்தாயானால் அது நடக்காது!" ஓரளவுக்கு புரிந்திருக்கலாம். திராட்சைக்கொடியில் பழங்களைப் பார்க்கிறோம். அந்தத் திராட்சைச் செடி அதற்குக் கீழே இருக்கிற செடியுடன் இணைந்திருந்தால் தான் இத்தனை பழங்களை அதனால் கொடுக்க முடிந்தது. செடியில் இருந்து அதன் கொடியை அறுத்து விட்டால்? அறுத்துவிட்டாலும் அது திராட்சைக் கொடிதான்; என்றாலும் அதில் பழம் பழுக்காது. ஏனென்றால் அந்த கொடிக்கு ஜீவனைத் தந்து கொண்டிருந்த செடியில் இருந்து அது பிரிக்கப்பட்டுவிட்டது. இன்னும் கொஞ்சம் புரிந்திருக்கும். கொடிக்கு உயிரைக் கொடுத்துக் கொண்டிருந்த செடியிலிருந்து அது பிரிக்கப்பட்டுப் போனதால் சில நாட்களில் அது காய்ந்து சருகாகிவிடும். தோட்டக்காரன் அதை எடுத்து குப்பையுடன் சேர்த்து தீ வைத்து எரித்துவிடுகிறான். *"ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல எறியுண்டு உலர்ந்து போவான்... யோ. 15:6"*

ஆவியின் கனிகள் பட்டியலில் வருகின்ற முதல் 8 கனிகளையும் இயேசு இல்லாத மனிதர்களால் கூட ஓரளவுக்கு கொடுத்துவிட முடியும். ஆனால் 9–ஆவது கனியான இச்சையடக்கம்... ? எல்லோருடைய இருதயத்திலும் இந்த விஷயம் ஒரு கேள்விக்குறிதான். பலர் இதைக் குறித்து அங்கலாய்ப்பதை கேள்விப்பட்டிருக்கிறேன். எவ்வளவுதான் நல்லவனாக, ஆவிக்குரியவனாக, விசுவாசியாக, வரங்களோடு ஊழியம் செய்பவனாக இருந்தாலும் இந்த கண்களின் இச்சையைத் தவிர்க்க முடியவில்லையே, அது ஏன்? இது புரியாத புதிராக இருக்கிறதே? இந்தப் புதிருக்கு யாரால் விடை சொல்ல முடியும்?

தேவனால், அவருடைய குமாரனால், குமாரனுடைய ஆவியினால் பதில் சொல்ல முடியும். பிதா, குமாரன், பரிசுத்தாவியாகிய தேவன் நமக்குள்ளே வாசம் செய்கிறபடியால்; அந்த புதிருக்கான விடையை நமக்குச் சொல்லிக் கொடுக்கிறபடியால்; நம்மாலும் விடை சொல்ல முடியும். சொல்லுகிறேன் கவனியுங்கள். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் மனிதன் பாவம் செய்யாதபடி தன்னை பாதுகாத்துக்கொள்ள முடியாது என்பதை பார்த்து வருகிறோம். மனிதன் எவ்வளவோ முயற்சி செய்தும், சுயகட்டுப்பாடுகளை மேற்கொண்டும் அவனால் பாவம் செய்யாமல் இருக்க முடிவதில்லை, இரகசிய பாவமாகிய கண்களின் இச்சையை மேற்கொள்ள முடிவதில்லை, சினிமா பார்க்காமல் இருக்கவும் முடிவதில்லை. ஏன் இப்படி நடக்கிறது என்பதைப் பார்க்கப் போகிறோம். *"...பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. ரோம. 3:20."*

தேவன் பழைய ஏற்பாட்டின் காலத்தில் மோசே மூலமாக பத்து கட்டளைகளை எழுதிக் கொடுத்தார். யாத்திராகமம் 20–ம் அதிகாரத்தில் வருகிற இந்த கட்டளைகளில் முதலில் வருகிற 9 கட்டளையையும் மனிதனால் கைக்கொள்ள முடியும். ஓரளவுக்கு அல்லது ஒரு சிலருக்கு முழுமையாகக்கூட முடியும். அதாவது 10%, 20%, 30%, 40%, 50%, 60%, 70%, 80%, சிலருக்கு 90% கூட முடியும். ஆனால் 10 வது கட்டளையை மட்டும் யாராலும் நிறைவேற்ற முடியாது என்பதால் 100% மதிப்பெண்களை யாராலும் பெற முடியாமல் போகிறது. இதுதான் நியாயப்பிரமாண கட்டளைகளில் உள்ள குறைபாடு **(draw back)** என்று சொல்லலாம். 40% லிருந்து 90% வாங்கினாலும் பாஸ் மார்க் தானே என்று சொல்ல முடியாது!

*"எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். யாக். 2:10."* அப்படியானால், ஒரு கட்டளையை நிறைவேற்ற தவறினாலும் அவன் தோற்றுப் போனவன்தான் என்றாகிறது. ஒரு மனிதனாலும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற முடியாமல் போனது. காரணம்

எல்லோருமே 10 வது கட்டளையில் தோற்றுப் போய்க்கொண்டே இருந்தார்கள். அந்த 10–வதான கடைசி கட்டளைதான் "இச்சியாதிருப்பாயாக" என்பது. பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களில் ஒருவர் கூட இந்தக் கட்டளையை நிறைவேற்றவில்லை, (நிறைவேற்ற முடியவில்லை) என்று பார்க்கிறோம். ஏனென்றால் முதல் 9 கட்டளைகளும் வெளியரங்கமாக நடக்கும் விஷயங்கள், ஆனால் 10வது கட்டளை மட்டும் இரகசியமாக, மனதிற்குள் நடக்கும் காரியம். அதனால்தான் யாராலும் அதை நிறைவேற்ற முடியவில்லை. மனிதன் இந்தப் பாவத்தை செய்கிறானா, இல்லையா என்பது வெளியே தெரியாது என்பதால்; எல்லோருக்குமே இந்த விஷயத்தில் குளிர்விட்டுப் போனது!

இந்தப் பாவத்தை மாத்திரம் சாதாரணமாக எடுத்துக் கொள்ள பழகிக் கொண்டார்கள். இது இயல்பானது, இயற்கையானது என்கிறார்கள். தேவனுடைய பார்வையில் இது பாவமில்லை என்றும் அவர் இந்தப் பாவத்தை கண்டுக்கொள்வதில்லை என்றும், பாவத்தின் பட்டியலில் இதை சேர்ப்பதில்லை என்றும் தங்களையே தேற்றிக் கொண்டு வாழ்கிறார்கள். ஆனால் தேவன் இயேசு என்ன சொன்னார் என்றால்: *"... ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடு விபசாரம் செய்தாயிற்று. மத். 5:28"* ஆனால் தேவனை அறியாத உலக ஜனங்களும், மருத்துவ உலகமும், தேவனை அறிந்த, ஆனால் இன்னும் நியாயப்பிரமாணத்தின் ஆளுகைக்குள்ளாக இருக்கிற விசுவாசிகளும் இந்தப் பாவத்தை இயல்பானதாகவும், இயற்கையானதாகவும் கணக்கு பண்ணி வாழ்கிறார்கள். மனதளவில் இருப்பதால் தவறில்லை, செயலில் வெளிப்பட்டால் தான் பாவம் என்பது இவர்களது வாதம். ஆனால் இயேசு அப்படி சொல்லவில்லையே, வசனத்தை திரும்பவும் கவனியுங்கள். அதனால் பாவ உணர்வோடும், குற்ற மனசாட்சியோடும், தீட்டுப்பட்டு, நடித்துக்கொண்டு வாழ்ந்து... ஒரு வழியாக வாழ்க்கையையும் முடித்துக் கொள்கிறார்கள்.

இச்சை என்பது இந்த ஒரு பாவத்தை **(sexual desire)** மாத்திரம் சுட்டிக்காட்டவில்லை. *"பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய வீட்டையும், அவனுடைய நிலத்தையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார். உபா. 5:21."* என்று எல்லாக் காரியத்தையும் பற்றிதான் வருகிறது; என்றாலும் சினிமாவைப் பற்றிய ஒரு ஆவிக்குரிய கண்ணோட்டம் இது என்பதால் குறிப்பாக இந்த பாவத்தைச் சுட்டிக் காட்ட வேண்டியதாயிருக்கிறது. இச்சை என்ற பாவத்தை சினிமா அதிகமாக ஊக்குவிப்பதற்கேதுவாக அமைந்திருப்பதால்; "சினிமா பார்க்காதே" என்ற எச்சரிப்பின் சத்தம் சபை வட்டாரத்தில் எதிரொலித்துக்கொண்டே இருக்கிறது.

நல்ல அறிவுரைதான், என்றாலும் "ஏன் பார்க்கக்கூடாது?" என்ற கேள்விக்குச் சரியான பதில் கொடுக்கப்படாமல் இருப்பதால் இந்தப் பிரச்சனை முற்றுப் பெறாத தொடர்கதையாகவே இன்றளவும் இருந்து வருகிறது. விசுவாசப் பிள்ளைகளும் விழுந்து, விழுந்து சினிமா, சீரியல் பார்க்கிறார்கள். ஜன்னலையும், கதவையும் அடைத்துக் கொள்வதால் வெளியே தெரியாது என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள்! சபை போதகர் வீடு சந்திப்பிற்காக வரும்போது நியூஸ் சேனலுக்கு படக்கென்று மாற ரிமோட் கைகொடுக்கிறது! சினிமா பார்த்தால் கெட்டுப்போய் விடுவார்கள் என்று சொல்கிறார்கள், நல்லது. சினிமா இந்த உலகத்தில் தோன்றுவதற்கு முன்னதாகவே கெட்டுப்போனவர்கள் கோடானுகோடி! உடனே சினிமாவுக்கு வக்காலத்து வாங்குவதாக புரியாமல் அதையும் இதையும் பேசி வைக்கக்கூடாது. ஏன் சினிமா பார்க்கக்கூடாது என்ற கேள்விக்கு ஏன் யாராலும் சரியான பதிலைக் கொடுக்க முடிவதில்லை என்பதையும், எதனால் இந்தக் கட்டளைக்கு கீழ்ப்படிய முடியவில்லை என்பதையும் பற்றி ஆராய்ந்து வருகிறோம்.

ஒருவன் கெட்டுப் போக வேண்டுமென்றால்; சினிமா பார்த்துதான் கெட்டுப்போக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இக்கால உலகத்தில் இல்லை, அக்கால உலகத்திலும் இருந்ததில்லை! யாரும் சொல்லிக்கொடுக்காமல் அவரவர் தங்கள் தங்கள் வழிகளிலே மிக நேர்த்தியாக கெட்டுப் போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள்! இதற்கு வாத்தியார் போட்டு பாடம் நடத்த வேண்டியதில்லை. ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போதே அவனுடன் ஜென்ம பாவம் ஒட்டிக்கொண்டுதான் பிறக்கிறது. சினிமாவில் காட்டப்படும் காட்சிகளை விட பல மடங்கு கேடுகெட்ட காரியங்கள் தெருக்களிலும், முச்சந்திகளிலும் அரங்கேறிக்கொண்டிருக்கும் போது; ஏன் வீணாக நேரத்தையும், காசையும் சினிமா தியேட்டரில் போய் வீணடிக்க வேண்டும்? (!)

உலகத்தில் நடக்கிற காரியங்கள்தான் சினிமாவிற்குள் போகிறதே தவிர, சினிமாவிலிருந்து எதுவும் உலகத்திற்குள் போகிறதில்லை. உலகத்தில் நடக்கின்ற பாவங்களின் பலதரப்பட்ட நிலைகளை **(variety)** எங்கும் எடுத்துச் செல்ல சினிமா ஒரு நல்ல கடத்தியாக இருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். உலகத்தில் நடக்கிற பல காரியங்களையும், சமுதாயத்தில் நடக்கின்ற யதார்த்தமான நிகழ்வுகளையும், ஏன் நல்ல, சன்மார்க்க ரீதியான காரியங்களையும் கூடத்தான் சினிமா கடத்துகிறது! உலகத்தில் நடக்கிற காரியங்களை, முக்கியமான நிகழ்ச்சிகளை, பாவ காரியங்களை, அதில் மிக முக்கியமான இடத்தை பிடித்திருக்கின்ற இச்சை என்ற பாவத்தை (அதற்கு காதல் என்ற பெயிண்டை அடித்து) சினிமாவில் காட்டுகிறார்கள். இதனால் ஒரு நல்ல செயலாக்க நோக்கத்தோடு துவங்கப்பட்ட திரைப்படத்துறை, சினிமா என்ற பெயரில் மிகவும் மோசமாகிப் போனது. சினிமா பார்க்கும்போது ஏற்படும் மன உளைச்சல், கவலை, சோகம், கண்ணீர், பயம், குழப்பம், இன்னும் பல ரீதியிலான மோசமான, படுமட்டமான உணர்வுகள்... அதைப் பார்க்காமல் இருப்பது நல்லது என்ற முடிவுக்கு வர வைக்கிறது. சினிமாவில் காட்டப்படுகிற ஒரு சில (1–10%) நல்ல காரியங்கள் கூட மீதமிருக்கிற காரியங்களால் கறைபட்டு, கரைந்து, இருந்த இடம் தெரியாதபடி காணாமல் போய்விடுகின்றன. திமிங்கலத்தின் வாய்க்குள் போன மனிதனின் நிலை? பரிதாபம்! ஒரு துளி தயிரை ஒரு லிட்டர் பாலில் விட்டாலே மொத்த பாலும் புளித்துப் போகிறதே! ஒரு லிட்டர் தயிரில் ஒரு துளி பாலை விட்டால்? ஆக மொத்தத்தில் சினிமா பார்ப்பவர்கள் காசு கொடுத்து காசுக்குதவாத காரியங்களை வாங்கி மடியில் கட்டிக்கொண்டு வருகிறார்கள்!

மனிதர்கள் – சத்தியம் தெரியாத பாரம்பரிய தேவ பிள்ளைகள், யாரானாலும் சரி அவர்களைக் கெடுக்க சினிமா மாத்திரமல்ல, எத்தனையோ விதமான பாவங்கள், பல விதங்களில், பல கோணங்களில், உலகத்தை சுற்றி வந்துக் கொண்டிருக்கின்றன. சினிமாவை விட மிகப்பெரிய அளவில் மனிதனைக் கெடுக்கக்கூடிய சாத்தானின் திட்டங்கள் பல உலகத்தில் உண்டு. சினிமா பார்ப்பதை கண்டிக்கும் அளவுக்கு அதைவிட மனிதனை மிக மோசமான முடிவுக்குள் நடத்தக்கூடிய பாவங்களை குறித்து யாரும் கண்டிப்பதில்லை. உதாரணமாக பெருமை, தாழ்வு மனப்பான்மை, பயம், சந்தேகம், அவிசுவாசம், மாய்மாலம்.... போன்றவை. ஆனால் அதைச் செய்யாதே, இதைச்செய்யாதே என்று எச்சரிப்பதால், பயமுறுத்துவதால் பாவம் செய்யாதபடி ஒரு மனிதனை தடுக்க முடியாது. பாவம் செய்யாமல் இருக்க மனிதனால் முடியாது, ஏனென்றால் அது அவனுடைய இயல்பு, அது ஏதேனிலேயே ஆரம்பித்துவிட்டது. *"... தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே. லூக். 18:19 ... நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. ரோம 3:10, 12"*

இயேசு வந்து பாவச்சிறைக்குள் இருக்கும் ஒருவனை பூட்டை உடைத்து விடுவித்தாலன்றி யாராலும் வெளியே வரவும் முடியாது. இயேசு வந்து ஒரு மனிதனின் இருயத்தில் தங்கி; அவனுக்கு பாவம் செய்யாமல் வாழக் கூடிய ஆற்றலைக் கொடுக்கிறார். அந்த ஆற்றலை இயேசு பரிசுத்தாவியின் அபிஷேகத்தின் மூலமாகக் கொடுக்கிறார். அந்த ஆற்றலைப் பெற்றுக் கொள்ளும் மனிதன் தன்னிச்சையாகவே பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டுவிடுகிறான். உலகத்தின் 1,00,000 பாவங்களடங்கிய பட்டியலில் ஒன்றான சினிமாவிலிருந்தும் விடுதலையாகி விடுகிறான்!

தேவனை அறியாத உலக மனிதன் சினிமாவை ஒரு நல்ல பொழுது போக்காக நினைக்கிறான். இயேசுவை ஏற்றுக் கொள்ளாத பெயர் கிறிஸ்தவர்கள் ஆலோசனைகளை உதறித் தள்ளிவிட்டு சினிமா பார்க்கிறார்கள். இயேசுவை ஏற்றுக் கொண்ட – ஆனால் சத்தியம் தெரியாத, இன்னும் நியாயப்பிரமாண உபதேசத்தின்படி வாழ்கிற ஒரு விசுவாசி சினிமாவை பார்க்கவும் முடியாமல் பார்க்காமல் இருக்கவும் முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாக தவிக்கிறான். சிலுவையின் புதிய பிரமாணத்திற்குள் வந்துவிட்ட சத்தியம் அறிந்த தேவ பிள்ளை சினிமாவை ஒரு ஆராய்ச்சிக்குரிய பொருளாக கையில் எடுத்துக் கொள்கிறான். (வித்தியாசங்கள் புரிகிறதா?)

அது எப்படி? டாக்டரிடம் வருகிறான் ஒரு நோயாளி. டாக்டர் அந்த நோயாளியின் நோயைக் குறித்து விசாரித்து, அவனை பரிசோதனை செய்து, அவனுடைய இரத்தத்தை பரிசோதித்து, கொஞ்சம் குறைய டாக்டர் அந்த நோயாளியின் நோய்க்குள்ளாகவே போய்விடுகிறார்!

என்றாலும் அந்த நோய் அவருக்கு வந்துவிடுவதில்லை, வரும் அளவுக்கு அவர் புத்தியீனமாக நடப்பதும் இல்லை. ஆனால் டாக்டரல்லாத, ஆனால் டாக்டருக்கு படிக்க வேண்டும் என்ற எதிர்கால திட்டங்களோடு, தற்சமயம் +2 படித்துக் கொண்டிருக்கும் ஒரு மாணவன் அந்த நோயாளியை பரிசோதிப்பானென்றால் ... ?

அப்படி நான் சினிமாவை ஒரு ஆராய்ச்சிக்காக கையிலெடுத்தபோது; பூமியின் பலதரப்பட்ட மனிதர்களைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. பூமியில் வாழும் எந்தவொரு மனிதனும் அவன் தேவனைப் போல அவருடைய சாயலாகத்தான் படைக்கப்பட்டிருக்கிறான் என்பதை அறிய முடிந்தது. அதனால் தேவனை அறியாத மனிதர்களிடமிருந்தும் வெளிப்படும் நல்ல குணாதிசயங்களைக் கண்டு ஆச்சரியப்பட முடிந்தது. தன்னுடைய சிருஷ்டிகரின் சாயலை, குணங்களை எதாவது ஒரு ரீதியில் வெளிப்படுத்தும் உலக மனிதர்கள்! தேவனை அறியாத அவர்களிடமிருந்து தேவனை அறிந்த நான் பல காரியங்களை கற்றுக் கொள்ள முடிந்தது! அது எப்படி சாத்தியம்? தேவனுடைய சாயல், அதனால் வரும் நல்ல கருத்துக்கள் அவர்களிடமிருந்து மிதந்து வருகிறது; அவர்களுக்கே தெரியாமல்! அவைகளை நான் வலைபோட்டு அவ்வப்போது அரித்து எடுத்துக் கொண்டு வந்துவிடுகிறேன், இதுவும் அவர்களுக்குத் தெரியாமல்தான்!

தமிழ் சினிமாவின் ஒரு முன்னணி நடிகரின் கருத்து.: “தெய்வத்தை தேடி எங்கும் போக வேண்டியதில்லை. அவன் நமக்குள்தான் இருக்கிறான். நமக்குள் இருக்கும் அந்த இயக்க ஆற்றலைக் கண்டுபிடித்துவிட்டால் போதும்; உலகத்தையே வசப்படுத்தி விடலாம்!” என்பதே. அந்த நடிகருக்குள் தெய்வம் (இயேசு) இல்லாவிட்டாலும்; தேவன் ஒரு மனிதனுக்குள் வந்து வாசம் பண்ண முடியும் என்பது தெரிந்திருக்கிறது!

முடிவாக ... *“எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் 1 தெச. 5:21”*

## வேதமும் விஞ்ஞானமும்:

வேதமும் விஞ்ஞானமும் என்ற தலைப்பில் பல புத்தகங்கள் சபை வட்டாரத்தில் வெளிவந்திருக்கின்றன. இக்கால நாகரீக முன்னேற்றம், அறிவியல் வளர்ச்சி, அவை மனுக்குலத்தின் மீது நடத்தும் தாக்குதல் இவைகளைக் கிறிஸ்தவர்களின் வேதம் முன்னறிவித்திருப்பதை இந்த புத்தகங்களில் சுட்டிக்காட்டி எடுத்து ஆதாரங்களுடன் எழுதியிருப்பார்கள். வேதாகமமும் சம்பவங்களும் பகுதி – 1 கூட இந்த வகையைச் சேர்ந்த புத்தகம் தான்.

அறிவியல் ரீதியாக ஏதாவது ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டால், அல்லது பூமியின் மேல் அரிய நிகழ்வுகள் ஏதாவது நடந்துவிட்டால், அடுத்த நிமிடமே அது கிறிஸ்தவர்களின் வேதாகமத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது என்று சொல்லிவிடுவது இந்த கிறிஸ்தவர்களின் வழக்கமாக இருக்கிறது என்று கூட ஒருவர் எழுதியிருந்தார். எல்லா விஷயங்களுமே வேதத்தில் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ள முடியாது என்றும் எழுதியிருந்தார். இவர் எதை ஒத்துக்கொள்ளுகிறார், அல்லது ஒத்துக்கொள்ளாமல் இருக்கிறார் என்பதைப் பொறுத்து தீர்க்க தரிசனங்கள் மாறப்போவதில்லை. பூமி உருவாவதற்கு முன்னதாக இருந்த காரியங்கள் முதல்; இந்த பூமி முடிவுக்கு வரும் போதும் அதற்குப் பிறகு நடக்கப் போகிற காரியங்கள் வரை உள்ள காரியங்களை பரிசுத்த வேதாகமம் மிகத் துல்லியமாக தனக்குள் பொதிந்து வைத்திருப்பது முற்றிலும் உண்மை.

புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளின் பெயர்களை ஒவ்வொன்றாக வேதம் பட்டியலிட வில்லைதான்; அப்படி பட்டியலிட்டால் பைபிள் பழைய ஏற்பாட்டின் உடன்படிக்கை பெட்டியின் அளவுக்கு வந்துவிடும். அப்படியானால் பைபிளை சர்ச்சுக்குப் போகும்போது லாரியில் ஏற்றிதான் கொண்டு போக வேண்டியதாயிருக்கும்! அப்படி ஏடாகூடமாக ஏதும் ஆகாத அளவில் வேதம் எல்லாவற்றையும் சுருக்கமாக, மறைபொருளாக, மேற்கோள்காட்டி அறிவித்துள்ளது. இன்னும் 10 வருஷங்களில்... 100 வருஷங்களில் பூமியில் என்னென்ன காரியங்கள் நடக்கப் போகிறது என்பதைக் குறித்து மனிதன் தன் மூளையறிவை உபயோகித்து யூகித்து சொன்ன விஷயங்கள் பல உண்மையாகி இந்த பூமியின் மீது நடந்து வருகிறது! (மனிதன் தேவசாயலில், அவருடைய ஞானத்துடன் படைக்கப்பட்டிருப்பதால் இது சாத்தியமாகிறது). தேவனை அறிந்து கொண்டிராத

உலக மனிதனுக்கே இது சாத்தியமாகிறது என்றால் தேவனாலும், தேவனை அறிந்த மனிதனாலும் இது ஏன் சாத்தியமாகாது?

பூமியின் மேல் வருங்காலங்களில் நடக்கப்போகிற காரியங்களை குறித்து வேதம் முன்னறிவித்திருக்கிறது, அதில் விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் அடக்கம். வேதம் பல விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்கு வித்திட்டிருக்கிறது. உதாரணமாக தேவன் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை **(deep sleep)** வரவழைத்து அவன் விலா எலும்பில் ஒன்றை வெளியே எடுத்தார் என்று பார்க்கிறோம். உடனே தேவன் ஆதாமுக்கு குளோரோபார்ம் கொடுத்தார் என்று அர்த்தமாகிவிடாது. இந்த காலத்தில் மயக்க மருந்து கொடுத்து செய்ய வேண்டிய ஒரு அறுவை சிகிச்சையை அந்த காலத்தில் தேவன் எதுவுமே இல்லாமல் செய்தார் என்று தான் அர்த்தம். அவர் தேவன் என்பதால் அதைச் செய்ய முடிந்தது என்பதல்ல காரியம். தேவன் ஆரம்பத்தில் மனிதனுக்கு கொடுத்திருந்த சரீரம் மகிமையான சரீரம். (ஆதாமின் பாவத்திற்குப் பிறகு மனிதனின் சரீரம் தன் மகிமையை இழந்துவிட்டது) அதனால் குளோரோபார்ம் கொடுக்காமலேயே ஆழ்ந்த நித்திரையை அந்த சரீரத்தில் வரவழைக்க முடிந்தது. சுற்றுச்சூழலும் எந்த ஒரு குறைவுமில்லாமல் பரிபூரணமாக இருந்ததால் ஆப்பரேஷன் நடந்து கொண்டிருக்கும்போது அவனுக்கு தூக்கம் கலைந்து விடவில்லை! இக்கால மகிமையிழந்த சரீரத்தில் அது சாத்தியமில்லையென்பதால் குளோரோபார்ம் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. ஆனால் இந்த சம்பவம் பின்னாட்களில் ஆழ்உறக்க மயக்க மருந்துகளுக்கு வித்திட்டது. இந்த ரீதியில்தான் வேதத்தில் சம்பவங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

விஞ்ஞானத்துக்கு இணையாக, துல்லியமாக எதையும் கணிக்கக்கூடிய ஆற்றல் அக்கால மனிதர்களுக்கு விஞ்ஞான உபகரணங்களின் உதவியில்லாமலேயே இருந்தது என்பது உண்மை! காரணம் மனிதனின் மகிமை ஒரே நாளில் காணாமல் போய்விடவில்லை. மனிதன் பாவம் செய்து சாபத்துக்குட்பட்ட நாள் முதல் இந்த மகிமையிழப்பு படிப்படியாகவே நடந்தேறியது. அதனால் அக்காலங்களில் இயற்கையாகவே சாத்தியக்கூறுகள் அதிகமாயிருந்தன.

ரிக் வேதத்தில் நட்சத்திரங்களைப் பற்றிய பல நவீன காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. டெலஸ்கோப்பின் உதவியில்லாமல் வெறுங்கண்களாலேயே வானத்தை ஆராயும் புத்திக்கூர்மையைப் பெற்றிருந்தார்கள். பூமி சூரியனைச் சுற்றி வருவதை விஞ்ஞானம் 200 ஆண்டுகளுக்கு முன்புதான் கண்டுபிடித்தது. கி.பி. 300ம் ஆண்டிலேயே சூரிய சித்தாந்தம் என்ற நூலில் இந்த அறிவியல் உண்மை எழுதப்பட்டிருக்கிறது. கி.பி. 499–ல் ஆரியபட்டர் என்ற அறிஞர் இரவும் பகலும் பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதால் வருகிறது என்ற உண்மையை வெளியிட்டார். கெப்ளரின் கண்டுபிடிப்புகளுக்கு 1000 வருடங்களுக்கு முன்னதாகவே கிரகங்கள் நீள் வட்ட பாதையில் சூரியனைச் சுற்றி வருகிறது என்பதை இவர் அறிந்திருந்தார். ஒரு வருடம் என்பது 365 நாட்கள், 6 மணி நேரம், 12 நிமிடம் என்று கணக்கிட்டிருந்தார். பின்னாளில் விஞ்ஞானம் இந்த உண்மையைக் கண்டுபிடித்தபோது அதில் வெறும் நிமிடக் கணக்கில் மட்டுமே மாற்றம் இருந்தது.

இவரைப் போலவே வராகமிஹிதர், பிரம்மகுப்தர் போன்ற மேதைகள் இக்கால அறிவியல் கண்டுபிடிப்புகளை அக்காலங்களிலேயே அறிந்திருந்தனர். அதர்வண வேதத்தில் நிறைய வேதியியல் கோட்பாடுகள் காணப்படுகின்றன. நம்மாழ்வார் பாடல்களிலும், திருமுறைகளிலும் பல நவீன **cosmology (scientific study of Universe)** காணப்படுகின்றன. சீவக சிந்தாமணியில் தூரத்து நிகழ்ச்சிகளைப் பார்க்கக்கூடிய ஒரு கண்ணாடியைப் பற்றிய சம்பவம் வரும். இப்படியே சொல்லிக்கொண்டே போகலாம். கிறிஸ்தவர்களின் வேதத்தில் மட்டும் இப்படிப்பட்ட முன்னறிவிப்புகள் இருக்கவில்லை என்பது இப்போது புரிந்திருக்கும்.

நிலைமை இப்படியிருக்க, இப்படிப்பட்ட அறிவியல் ரீதியிலான விளக்கங்களினால் கிறிஸ்தவம்தான் சரியான மார்க்கம் என்றும், இயேசுவே ஆண்டவர் என்பதையும் உலகத்திற்கு நிரூபித்துவிட முடியாது என்பது தெளிவு! அப்படியானால் ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு இந்த ரீதியிலான புத்தகங்களை தயார் செய்ய வேண்டும் என்ற கேள்விகளுக்கு: இந்த விஞ்ஞான ரீதியிலான புத்தகங்களை வெளியிட்டு; அதனை முன்னிட்டு நாங்கள் இயேசுவையே பிரசங்கிக்க முயற்சிக்கிறோம். இது ஒரு சுவிசேஷம் அறிவிக்கும் முறை, அவ்வளவுதான். பூமியின் சகல மனிதர்களும் தேவனால் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். உண்டாக்கப்படும் எந்தவொரு பொருளும், தன்னை உருவாக்கியவரின் சாயலை, தனித்தன்மையை, அல்லது ஏதோ ஒன்றை ஒத்திருக்கும் என்பது பூமியில் நாம் சாதாரணமாக காண்கின்ற ஒரு காரியம். நம் பிள்ளைகள் நம்மைப்போன்ற

சாயலிலேயே பிறக்கின்றனர். எங்க வீட்டு பூனை குட்டி போட்டது; என்ன ஆச்சரியம், அது பூனையைப் போலவே இருந்தது! என்று யாரிடமாவது போய்ச் சொல்லிப் பாருங்கள்; உங்களை லூசு என்பார்கள்! வாழை மரத்தின் வேர்ப்பகுதியிலிருந்து துளிர்த்து வெளிப்பட்ட வாழைக் கன்று; தாய் வாழையைப் போலவே இருந்தது! தேவன் மட்டும் மனிதனை வேறு எதுவோ போலவா உருவாக்கியிருப்பார்? நிச்சயமாக இல்லை, எந்தவொரு மனுஷனும் தன்னுடைய சிருஷ்டிகருடைய சாயலைக் கொண்டே பிறக்கிறான். தன்னுடைய சாயலில்லாத ஏதொன்றையும் தேவனால் பிறப்பிக்கவும் முடியாது!

அதனால் பூமியின் மீது பிறப்பெடுத்த மனிதன்; அது யாராக இருந்தாலும் சரி, அவனுக்குள் தேவனுடைய ஞானம், ஆற்றல், அறிவு, புத்திக்கூர்மை, முக்காலத்தையும் உணரும் அறிவு, வார்த்தை, இப்படி பல காரியங்கள் பொதிந்து, பதிந்து, அமிழ்ந்து, நுழைந்து, அழுந்தி, கிடக்கின்றது! அதனால் தான் பூமியின் மீது அவ்வப்போது, தொடர்ச்சியாக, பல்வேறு காலகட்டங்களில் அறிஞர்கள், மேதைகள், வல்லுநர்கள், பலவேறு ஆற்றல் மிகுந்தவர்கள், நுண்ணறிவாளர்கள், ... இப்படி பலதரப்பட்டவர்கள் தோன்றிக் கொண்டேயிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல கிறிஸ்தவர்களின் வேதாகமம் தேவனால் மனிதனுக்கு கொடுக்கப்பட்டது. அப்படியானால் மற்ற வேதங்களெல்லாம் தேவனால் கொடுக்கப்பட்டது இல்லையா? இந்தக் கேள்விக்கு ஆதாரப்பூர்வமான விளக்கத்தை கொடுக்க முடியாதுதான். ஏனென்றால் அவைகளும் இக்கால நிகழ்வுகளை முன்னறிவித்திருக்கிறதே! என்றாலும் பதிலைச் சொல்லியாக வேண்டும் இல்லையா? சொல்கிறேன், சரியாக பிடித்துக் கொள்ளுங்கள்! கிறிஸ்தவர்களின் வேதாகமமாகிய **(The bible)** மட்டும் தான் தேவனால் மனிதனுக்கு அருளப்பட்டது. மற்ற வேதங்களில் பைபிளில் காணப்படுகிற காரியங்களும், அதற்கொத்த, இசைவான, சாயலான காரியங்களும் காணப்படுவதற்குக் காரணம்? சொல்கிறேன் கேளுங்கள்: கிறிஸ்தவர்களின் தேவன்தான் அவர்களுக்கும் தேவன்! *“மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே (made of one blood) தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; அப். 17:26”*

உலகத்தின் முதல் மனிதன் முதல் கடைசி மனிதன் வரை, அவன் யாராக இருந்தாலும் சரி, தேவனை அறியாதவனாக இருந்தாலும் சரி, தேவனே இல்லை என்று சொல்பவனாக இருந்தாலும் சரி, எல்லோரையும் தன்னுடைய மாதிரியின்படி தான் உருவாக்கியிருக்கிறார். மற்ற வேதங்களை எழுதியவர்களும் தன்னை உருவாக்கிய தேவனின் ஞானத்தையும், அவர் உருவாக்கிய மூளையையும் உபயோகித்துதான் எழுதியிருக்கிறார்கள். *“மனுஷருடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும். நீதி. 20:27.”* தேவனை அறியாதிருக்கிற மனிதனிடமிருந்தும் அவருடைய ஞானம் வெளிப்படவே செய்கிறது. தேவனுடைய ஞானத்தின் வல்லமை, மகத்துவம் அப்படி! எந்தவொரு மனிதனாலும் தன்னிடமிருந்து வெளிப்படும் தெய்வீகக் குணங்களை மறைத்து வைக்க முடிவதில்லை! அதில் ஒன்றுதான் ஞானம், அவர்கள் அந்த ஞானத்தை உபயோகித்து, மூளையறிவினால் தாங்கள் கிரகித்த காரியங்களையும், யூகித்தவைகளையும், ஆராய்ச்சி செய்தவைகளையும் எழுதி வைத்திருக்கிறார்கள். அவைகளின்படியும் நடக்கிறது. **Yes,** அவர்களாலும் முடியும்! பூமியின் சாப இருளும், சாத்தானின் தந்திரங்களும் எவ்வளவு தான் மனிதனை சூழ்ந்து கொண்டு மூழ்கடிக்க முயன்றாலும்; அவை யாவையும் மீறி, பீறிக்கொண்டு வெளிப்படும் தெய்வத்துவத்தின் வெளிச்சிதறல்கள்! இவற்றை நாம் அவர்களின் வேதங்களில் பார்க்க முடிகிறது.

*“தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள். 2 பேது. 1:21”*

கிறிஸ்தவ வேதாகமத்தை மனுக்குலத்துக்கு கொடுத்தது சர்வவல்லமை பொருந்திய தேவனுடைய ஆவியானவர். புரியும்படி சுருக்கமாகச் சொல்லப்போனால்; வேதத்தை மனிதனுக்கு கொடுத்ததே தேவன் தான். வேதத்தில் வரும் எல்லா வார்த்தைகளும் தேவனால் பேசப்பட்டதல்ல என்பதைப் பார்த்தோம். தேவன் பேசிய வார்த்தைகள், சாதாரண மனிதர்கள் சுயமாக மூளையறிவினால் பேசிய வார்த்தைகள், தேவனால் ஏவப்பட்ட வார்த்தைகள், சாத்தானால் ஏவப்பட்டு பேசிய வார்த்தைகள், சாத்தானே பேசிய வார்த்தைகள் கூட வேதத்தில் இருக்கின்றன. எல்லாவற்றையும் மொத்தமாக தொகுத்து நமக்கு கொடுத்தது தேவன். பூமியையும் அதிலுள்ள

எல்லாவற்றையும் உருவாக்கிய தேவனுக்கு; பூமியின் கடைசிகாலகட்டம் வரைக்கும் பூமியின் மீது என்னென்ன நடக்கும் என்பது தெரியாமலா இருக்கும்? தீர்க்கதரிசிகள் மூலமாக நடக்கப்போகும் காரியங்களைப் பற்றி தேவன் முன்னறிவித்திருப்பது எனக்கொன்றும் அதிசயமாகத் தெரியவில்லை. தேவன் சர்வவல்லமை பொருந்தியவர், முக்காலமும் அறிந்தவர் என்று தான் எனக்குத் தெரியுமே!

*"... தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார். 1 யோவா. 3:20 நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள் 1 யோவா. 2:20."* பூமியின் சகல நிகழ்வுகளையும் வேதம் முன்னறிவித்திருக்கிறது என்று சொல்லி தம்பட்டம் அடித்து பெருமையடித்துக் கொள்வது எங்கள் நோக்கமல்ல. அப்படி எழுதுவதால் யாரையும் கிறிஸ்துவுக்குள் நடத்த முடியாது. வேதத்தில் **T.V.** யைப் பற்றி எழுதியிருக்கிறது என்று விளக்கிக் காண்பிப்பதனால் யாரும் இரட்சிக்கப்படுவதில்லை. இயேசுவை அறிவிப்பதன் மூலம் தான் ஒரு மனிதனை இரட்சிப்பிற்குள் நடத்த முடியும்.

கிறிஸ்தவர்களின் விஞ்ஞான ரீதியிலான புத்தகங்களின் மூலமாகவும் இயேசு வெளிப்படுகிறார் என்பது மறுக்க முடியாத உண்மை. எப்படியென்றால் இந்தக் காரியங்களை பிரசங்கிப்பவர்களும் வசனங்களின் அடிப்படையில்தான் பிரசங்கிக்கிறார்கள். அந்த வசனங்கள் கிரியை செய்ய ஆரம்பிக்கின்றன, முடிவில் வசனத்திலிருந்து இயேசு வெளிப்பட்டுவிடுகிறார், வசனமே தேவனுடைய வார்த்தை, தேவனுடைய வார்த்தையே இயேசு! சிறியதாக என்னுடைய அனுபவ சாட்சி இங்கே: நான் தேவனை அறியாதிருந்த காலங்களில்... சகோ. ஜஸ்டின் பிரபாகரன் என்ற ஊழியக்காரரின் ஒலிநாடா ஒன்றைக் கேட்டுக் கொண்டிருந்தேன். நேபுகாத் நேச்சாரின் சொப்பனத்தில் வந்த சிலையைக் குறித்ததான சரித்திரபூர்வமான காரியங்கள் இந்த பூமியின் மீது எப்படி நிறைவேறினது என்பதையும், இனிமேல் எவ்விதம் நிறைவேறப் போகிறது என்பதையும் குறித்து பிரசங்கித்திருந்தார். தானியேல் 2–ம் அதிகாரத்தில் வருகிற இந்த சம்பவத்தில் ஒரு இடத்திலும் இயேசு என்ற வார்த்தை இல்லை, ஏன் பழைய ஏற்பாடு முழுவதிலுமே இயேசு என்ற பெயர் இல்லை. ஆனால் வார்த்தையுருவில் இருந்த இயேசு வசனத்தின் மூலமாக வெளிப்பட்டு என்னைத் தொட்டார். அன்று முதல் அவரை ஏற்றுக் கொண்டு; அவரில் வேர்பிடித்து வளர ஆரம்பித்தேன்! உலகத்தில் எத்தனையோ விதமான ஆயிரக்கணக்கான புத்தகங்கள், வேதங்கள் இருக்கின்றன. அவைகளை வாசிக்கும்போது பல உலக ரீதியிலான காரியங்களை அறிய முடிகிறது. சன்மார்க்க ஜீவியத்தைக் கற்றுக் கொள்ள முடிகிறது, வாழ்க்கைக்கான ஆலோசனைகள் கிடைக்கிறது. அறிவு வளர்கிறது, அனுபவம் கிடைக்கிறது, நேரப்போக்காகவும் இருக்கிறது. ஆனால், அவைகளிலிருந்து இயேசு வெளிப்படுவதில்லை... சிந்தியுங்கள்.

## புல்:

தேவன் முதல் மனிதர்களாகிய ஆதாமையும், ஏவாளையும் உருவாக்கி, அவர்களை ஏதேன் தோட்டத்திற்குள் வைத்தபோது; அவர்களுக்கு பழங்களையும், பூண்டு வகைகளையும் உணவாகக் கொடுத்தார். *"... பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் (every herb bearing seed and fruit of tree yielding seed) உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது; ஆதி. 1:29."* பூமி சாபத்திற்குள்ளானபிறகு தேவன் கொடுத்த இந்த நல்ல ஆகாரத்தை பூமியால் மனிதர்களுக்குத் தேவையான அளவிற்கு விளைவிக்க முடியாமல் போனது.

சாப நியமத்திற்குள்ளான நிலத்தால் முள்ளையும் குருக்கையும்தான் பெருமளவில் முளைப்பிக்க முடிந்தது. அதற்காக தேவனுடைய நியமத்தின்படியான பழவர்க்கங்களையும், விதையுள்ள பூண்டு வகைகளையும் பூமி முளைப்பிக்காமல் இருக்கவில்லை, மிக குறைந்த சதவீதம் % தான் சாத்தியமாயிற்று. உதாரணமாக ஆதாமுக்கு மெகா சைஸ் ஆப்பிள்களை ஒரே நேரத்தில் 25–ஐ எடுத்து கடித்து ருசித்து சாப்பிடுவது சாத்தியமாயிருந்தது. ஏதேனுக்குள் ஆப்பிளுக்கு விலை **(cost, value)** இருந்ததில்லை, அங்கே பொருளாதாரம் **(economics)** இல்லை, வாழ்வதற்கு கிரையமும் **(cost of living)** இல்லை. ஆனால் இன்றோ ... ஆப்பிள் விளைகிறது தான்; காஷ்மீரில் மட்டும்! ஏதேனில் திரும்பிய இடமெல்லாம் பழுத்துக் குலுங்கிய ஆப்பிள் பழம்; இன்று ... காஷ்மீரிலிருந்து அல்லது வாஷிங்டன் ஆப்பிள் காடு மலை பள்ளத்தாக்குகளைக் கடந்து தூத்துக்குடிக்கு வந்து சேர்வதற்குள் 6 மாதங்களாகி விடுகின்றன. அவைகள் அழுகி கெட்டுப்

போகாத அளவுக்கு பதனிடப்பட்டு **(process)** 1 வருடம் வரையிலும் வியாபாரச் சந்தையைச் சுற்றி வருகின்றன! நினைத்த நிமிடத்தில், பறித்த நொடிப்பொழுதில் ஆதாமின் வாய்க்குள் போய்க் கொண்டிருந்த ஆப்பிள், இன்று... தூத்துக்குடியைச் சேர்ந்த ஒரு நடுத்தர பொருளாதாரத்தையுடைய ஒரு மனிதனின் வாயை சென்றடைய சுமார் 1 வருடங்கள் வரை நீண்ட பயணம் செய்கின்றன!

சரி, பரவாயில்லை அப்படியாவது வந்து சேர்ந்ததே! இதில் **Highlight** ஆன ஒரு விஷயத்தை கவனிப்போம். அதில் முழுவதுமாக ஒரு பழத்தை எடுத்து சாப்பிட முடிகிறதா என்றால் அதுவும் இல்லை! பளபளக்கும் ஒரு ஆப்பிள் ஒரு தட்டில் வைத்து மேஜையின் மேல் வைக்கப்படும். ஒரு விசேஷித்த கத்தியை கொண்டு வந்து அதை பத்து துண்டுகளாக வெட்டுவார்கள். (மேஜையின் மேல் அப்படி என்னதான் நடக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியாத 5 வயது குழந்தை, குதிங்காலை உந்தியபடி எட்டிப் பார்க்க முயன்று முடியாமல் போக, என்னம்மா, பெர்த்டே கேக் வெட்டுறீங்களா என்றது!!!)

இதைப் போலவே விதையுள்ள பூண்டு வகைகளையும் பூமியால் போதிய அளவிற்கு விளையச் செய்ய முடியாமல் போனது. அதனால் மனிதன் வெளியின் பயிர் வகைகளை **(herb of the field)** சாப்பிடுவதற்காக பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் வந்தது. *"... அவர் (தேவன்) ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியை புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதன் பலனை புசிப்பாய் அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும். வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். ஆதி. 3: 17, 18."*

அப்படி அவன் சாப்பிடுவதற்காக தெரிவு செய்த தாவரங்களில் முதன்மையானது புல் வகைகள் ஆகும்! மனிதர்கள் புல்லை ஒரு பொருட்டாக நினைப்பதில்லை, மதிப்பதுமில்லை. கால்களின் கீழாக மிதிபட்டும், விலங்குகளால் மேயப்பட்டும், வெயிலினால் தீய்ந்து அழிந்து போகிறதுமான ஒரு அற்ப ரக தாவரமாக மனிதனால் ஒதுக்கப்பட்டுள்ளது. என்றாலும் இன்றளவும் மனித குலத்தை அழியாதபடி பாதுகாத்து வருவது இந்த புல் இனம்தான் என்று சொன்னால் ஆச்சரியமாக இருக்கும்! மனிதன் மட்டுமல்லாமல் ஆடு, மாடு, கோழி, மேலும் பெரும்பான்மையான காட்டு விலங்குகளுக்கும் முக்கிய உணவாக பயன்படும் அத்தனை உணவுப் பயிர்களுமே புல் இனத்தைச் சேர்ந்தது தான். உலகளவில் சகல தேசங்களிலும் ரொட்டி தயாரிக்க பயன்படுத்தப்படுவது கோதுமை என்ற புல் இனத்தை சேர்ந்த பயிர் வகைதான்! இதன் தாவர பெயர் டிரிடிகம்வல்கர். தென்னிந்தியாவின் – தமிழ்நாட்டின் முக்கிய உணவுப் பயிரான "ஒரைசா சடைவா" என்ற தாவரப் பெயரைக் கொண்ட நெல் ஒரு புல் இனம் தான்! தாவரவியலின் 300 பிரிவுகளில் புல் மிக முக்கியமான ஒரு பிரிவாகும். மனுக்குலத்தின் முக்கிய உணவாகிப் போன இந்தப் புல் முதல் இடத்தைப் பிடித்துள்ளது!

தேவன் ஆரம்பத்தில் மனிதனுக்கு புல் இனங்களை சாப்பிடக் கொடுக்கவில்லை என்று பார்க்கிறோம். அவைகளை மிருகங்களுக்காக ஏற்படுத்தியிருந்தார். பழங்களுடன் தேவன் மனிதனுக்குக் கொடுத்த பூண்டு வகைகள் கூட இக்கால உணவு வழக்கத்தில் உள்ள புல் வகைகள் அல்ல. ஏதேனின் தேவன் மனிதனுக்குக் கொடுத்த விதைகளையுடைய பூண்டு வகைகளை தேவையான அளவுக்கு விளைவிக்க முடியாமல் போனது. ஏனென்றால் பூமி சாபத்திற்குள்ளாக கடந்து போனதால் பழங்களைப் போலவே இந்த பூண்டு வகைகளும் கிராக்கியாகிப் **(demand)** போனது. அதனால் ஏதேன் தோட்டத்திற்கு வெளியே ... சாபத்திற்குள்ளான பூமியில் முளைத்தெழும்பிய பயிர் வகைகளை சாப்பாட்டிற்காக தெரிந்தெடுத்தான். அவை தேவன் தந்த உணவைப் போல மகிமையானதாக **(best - highest quality)** இல்லை.

இன்றளவும் வேதத்தின் வார்த்தைகள் நிறைவேறும் விதமாக மனிதர்கள் வயல்வெளியில் விளையும் பயிர்வகைகளையே உணவிற்காக பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். மனிதன் சாப்பிடும் உணவு வகைகளான பழங்கள், காய்கறிகள், விதை தானியங்கள், புல் வகைகள் இன்னும் எதுவானாலும் சரி அவைகள் வயல்களிலேயே விளைவிக்கப்படுகின்றன. தானாக இயற்கையாக செலவின்றி, செழுமையாக, கொழுமையாக மனிதனுக்கு கிடைக்கும்படி தேவன் ஏற்பாடு செய்திருந்த உணவு வகைகள்; இன்று பலவிதமான செயற்கை முறையில் விளைவிக்கப்படுகின்றன. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, மிக கடினமாக மூளையையும், உடலையும் உபயோகித்து உழைக்க

வேண்டியதாயிருக்கிறது. அப்படி உழைத்தாலும் மனிதனின் தேவைக்கேற்ப புல் வகை தானியங்களை (கோதுமை – நெல்) உற்பத்தி செய்ய முடியாமல் தேசங்கள் அவதிப்படுவதைப் பார்க்கிறோம். மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப உணவு தானியங்களை (புல்லை) உற்பத்தி செய்ய பல புதிய அணுகுமுறைகளையும், நூதன யுக்திகளையும் கையாள வேண்டியதாயிருக்கிறது.

விவசாயம் மனிதனுக்கு ஏன் இந்த அளவுக்கு கடினமான ஒன்றாகிப் போனது? மனிதனின் பாவம் தான் காரணம். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் போனது கூட பிரச்சனையாகவில்லை; அதற்குப் பதிலாக சாத்தானுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தானே, அதுதான் பிரச்சனையாகிப் போனது. மீறுதல் என்ற பாவம் அடுத்தக் கட்ட பாவமான கொலைக்கு வழி வகுத்தது. ... அவர்கள் (காயீனும் ஆபேலும்) வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனை கொலை செய்தான். ... அவர் (தேவன்) என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கி கூப்பிடுகிறது (!). இப்போது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக்கொள்ள தன் வாயைத் திறந்த இந்த பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தை பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; ... ஆதி. 4. 8, 10, 11, 12.

நாம் பேசுவதுதான் – வார்த்தைகள்தான் – இந்த பூமியின் மீது நடக்கிறது என்பதை பார்த்து வருகிறோம். தேவனுடைய வார்த்தைகள் பூமியின் மீது விதையாக விழுந்து கொண்டிருந்தபோது; பூமி ஆசீர்வாத பூமியாக இருந்தது. மனிதனின் மீறுதலுக்கு பிற்பாடு சாத்தானுடைய வார்த்தை அவன் மூலமாக பூமியின் மீது விழுந்ததால் பூமி சாப பூமியானது, முள்ளையும் குருக்கையும் முளைக்கச் செய்தது. சாபத்தால் பாவம், பூமியில் பெருக பெருக ... விளைநிலங்களின் தரம் குறைவுபட்டுக்கொண்டே போனது. பல இடங்களில் விளைச்சல் 100% முடிவுக்கு வந்து பாலைவனங்கள் உருவானது. பல இடங்களில் 90 % விளைச்சல் முடிவுக்கு வந்து தரிசு நிலங்களையும், பொட்டல் வெளிகளையும், முட்காடுகளையும் உருவாக்கியது. 80% விளைச்சல் குறைந்த இடங்களில் உணவுக்கு பிரயோஜனப்படாத செடி கொடி மரங்களடர்ந்த காடுகள் உருவானது. 70% – 20% என்று தரம் குறைந்த விளை நிலங்களில் புல் வகைகள் பயிரிடப்படுகின்றன, நாம் சாப்பிடும் கோதுமை, நெல் உட்பட பல தானியங்களும் இதில் அடக்கம். 10% பகுதிகளில் பழவர்க்கங்கள், காய்கறிகள், கடலை வகைகள் பயிரிடப்படுகின்றன. அப்படியானால் தேவன் ஏதேனில் தந்த பழவகைகள், பூண்டுகள்? அவை இப்போது இல்லை 0% ஆகிப் போனது! ஆதாம் ஏதேனில் பறித்து சாப்பிட்டது ஆப்பிள் என்று நான் சொன்னது (பலரும் சொல்லிக்கொண்டிருப்பது) ஒரு உதாரணத்துக்காக ... உவமைக்காக! ஆதாம் சாப்பிட்ட பழம் ஆப்பிள் என்று வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை!

இன்னுமொரு வசனத்தைப் பார்ப்போம். *“அந்நேரமே இந்த வார்த்தை நேபுகாத்நேச்சாரிடத்தில் நிறைவேறிற்று; அவன் மனுஷரி–ருந்து தள்ளப்பட்டு, மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான், ... தானி 4:33 எந்த வார்த்தை நேபுகாத் நேச்சாரிடத்தில் நிறைவேறிற்று? அவன் புல்லை மேய வேண்டிய சூழ்நிலை எதினால் வந்தது? முந்தின வசனத்தைப் பாருங்கள்: மனுஷரிலிருந்து தள்ளப்படுவாய்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய்; மாடுகளைப் போல் புல்லை மேய்வாய்; ... தானி. 4:32”* இப்படிப்பட்ட சூழ்நிலைக்குள் அவன் தள்ளப்பட்டுப் போனதற்கான காரணம் என்ன? அவன் செய்த தவறு என்ன? தானியேல் 4–ஆம் அதிகாரம் முழுவதையுமே வாசித்து விடுவது நல்லது; எல்லோருக்குமே தெரிந்த இந்தச் சம்பவத்தை ஏதேனில் நடந்த சம்பவத்துடன் ஒப்பிட்டு பார்க்கலாம். நேபுகாத் நேச்சாருக்கு தேவன் அதிகமான கனத்தையும், மகிமையையும் கொடுத்து; பூமியில் முதன்மையான ராஜாவாக உயர்த்தி வைத்திருந்தார். தேவனுடைய ஞானம் அவனுக்குள் இருந்ததினால்; அந்த ஞானத்தை தன்னுடைய ஆளுகைக்குப் பயன்படுத்தினான்; தேசம் செழித்தோங்கியது. தான் தேவனுடைய கையில் வெறும் கருவிதான் என்பதையும்; பின்னணியத்திலிருந்து தேவன் தான் செயல்படுகிறார் என்பதையும் மறந்த நேபுகாத்நேச்சார் கர்வம் கொண்டான். அவனுடைய அகந்தையினால் அவன் செழிப்பான தேசத்திலிருந்து தள்ளப்பட்டு, மாடுகளோடு தங்க வேண்டிய சூழ்நிலை வந்தது. ஒரு மிருகத்தைப் போல வாழ வேண்டிய கட்டாயம் வந்தது, புல்லை சாப்பிட வேண்டியதாயிற்று! இதை வாசிக்கும் போதே ஏதேனில் நடந்த காரியங்கள் நிழலாட்டமாக மனத்திரையில் தெரிய ஆரம்பித்திருக்கும்.

மனிதனின் அகந்தை அவனைக் கீழே தள்ளுகிறது. ஆதாம் சாத்தானுடைய வார்த்தையை

கேட்டு அதன்படி செய்ததற்கு காரணம் என்ன? பெருமைதான்! தன்னை தேவன் பிரதானமான இடத்தில் வைத்திருப்பதற்கான காரணத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதினால் வந்த பெருமை! மனிதனை மிருகமாக்கும் பெருமை! பிரதான தேவதூதனாயிருந்த லூசிபர் பெருமையினால் விழுந்த விஷயம் நமக்குத் தெரியும்; அவனால் இந்த பூமி சந்தித்து வரும் பேரிடர்களும் தெரியும். பெருமையைத் தன் உள்ளத்தில் கொண்ட சாத்தான் நிச்சயமாக ஏவாளிடம் பேசியபோது அது வெளிப்பட்டிருக்கும். பெருமை கலந்த வார்த்தையை ஏவாளும், தொடர்ந்து ஆதாமும் ஏற்றுக் கொண்டதினால்தான் ஆளுகையை இழக்கும் சூழ்நிலை வந்தது. பெருமையுள்ள மனிதனால் நல்லது எதையும் செய்ய முடியாது; ஏதேனுக்குள் இருந்து கொண்டு, கெட்ட காரியங்களுக்கு வழி ஏற்படுத்தினால் பூமியே அழிந்து விடும் அபாயம் வரலாம். அதனால்தான் அவசர அவசரமாக ஆதாம் வெளியேற்றப்படுகிறான்.

*"ராஜா (நேபுகாத்நேச்சார்) ... அரமனைமேல் உலாவிக்கொண்டிருக்கும்போது: இது என் வல்லமையின் பராக்கிரமத்தினாலும், (the might of my power) என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, (the honour of my majesty) ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான். (தானி. 4: 29, 30)"* அகந்தையான ராஜாவால் நாட்டின் மக்களுக்கு கேடு விளையும் என்பதால்; மக்களின் நலன் கருதி, அன்பு தேவன் அவசர அவசரமாக ஆளுகையை அவனிடமிருந்து எடுத்து, அவனை வெளியேற்றிவிடுவதைப் பார்க்கிறோம். ஏதேனைவிட்டு வெளியேறிய ஆதாம் வெளியின் பயிரை (புல்லை) சாப்பிட்டது போலவே, நேபுகாத்நேச்சார் ராஜாவும் வெளியின் மாடுகளுடன் தங்கி, மிருகம் போலாகி, மிருகத்தின் இயல்புகளை தன்னுடைய இயல்புகளாக மாற்றிக் கொண்டு வாழ்வதைப் பார்க்கிறோம்.

ரஷ்யாவில் – தன் பெற்றோரால் புறக்கணிக்கப்பட்ட 5 வயதான பெண் நடாஷா மிகைலோவா என்ற 5 வயது சிறுமி; சைபீரியா – சிட்டா என்ற ஊரில் தன் தாத்தாவுடன் வசித்து வருகிறாள். அந்த வீட்டில் நாய்களும், பூனைகளும் அதிகம் வளர்க்கப்பட்டன. அவள் நாய்களால் வளர்க்கப்பட்டிருக்கிறாள், பேச்சு வரவில்லை. எதையாகிலும் பேச வேண்டுமென்றால் குரைக்கிறாள், கைகள், கால்களை ஊன்றி நடக்கிறாள், நாக்கால் நக்கி சாப்பிடுகிறாள்.

2 ஆண்டுகளாக இந்த விபரீதம் இந்த வீட்டிற்குள் நடந்து வந்தும், இது அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கு தெரியாமலா இருந்திருக்கும்? ஆச்சரியப்படத்தக்க விதமாக யாருக்கும் தெரியவில்லை. இந்தச் சிறுமி அந்த வீட்டில் இருப்பதே எங்களுக்குத் தெரியாது என்றனர்! அந்த வீட்டில் இருக்கும் 3 நாய்களை மாத்திரம்தான் மிகைலோவாவின் தாத்தா வாக்கிங் கூட்டிப் போவார், இந்தச் சிறுமியை நாங்கள் பார்த்தது கிடையாது என்றனர். போலீஸ் வீட்டிற்குள் நுழைந்து பார்த்தபோது; அங்கே மனித சஞ்சாரமே இல்லை, வீடு முழுவதும் துர்நாற்றம் அடித்தது, நாய்கள் அந்தச் சிறுமியைப் பாதுகாப்பதற்காக குரைத்தபடி ஓடி வந்தன. மனிதர்களைப் பார்த்ததும் அந்த சிறுமியும் அவர்களை நோக்கி குதித்தபடி குரைத்தாளாம்!

மனிதத்தொடர்பே இல்லாமல் போனதால் தான் அவள் அப்படி இருக்கிறாள்; மற்றபடி அவளுக்கு மனவளர்ச்சி எதுவும் இல்லாமல் இல்லை என்று இப்போது அவளைப் பராமரித்து வரும் மறுவாழ்வு இல்லத்தின் அதிகாரி தெரிவித்தார். நம்புவதற்கு கஷ்டமாக இருக்கும் இந்த சம்பவம் மனிதனை சூழ்நிலையால் மாற்ற முடியும் என்பதை தெரிவிக்கிறது. மனிதனும் சூழ்நிலைக்கேற்றபடி தன்னை மாற்றிக் கொள்கிறான் என்பதையும் அறிவிக்கிறது. தேவன் கொடுத்த முதல்தரமான, கொழுமையான, நல்ல, உச்சிதமான உணவு வகைகளிலிருந்து தன்னை மாற்றிக் கொள்வது மனிதனுக்கு கஷ்டமாக இருக்க வில்லை. தனக்குள் இருக்கும் தேவனுடைய ஞானத்தை உபயோகித்து தனக்கு கிடைத்த புல்லை அதிக அளவில் விளைய வைத்து, சாப்பிட்டு, தன்னுடைய பூமிக்குரிய கூடாரத்தை (சரீரத்தை) இந்த பூமியில் நிலை நிறுத்தி சாதனை படைத்து வருகிறான் தேவனைப் போல் படைக்கப்பட்டிருக்கும் மனிதன்! "வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்!

உலகத்தால் மிக அற்பமாக மதிக்கப்படுகிற ஒரு தாவரம்தான் புல். வேதத்தில் கூட அற்பமான காரியங்களுக்குத்தான் புல் உவமையாக வருகிறது. இழிவான மனிதர்களை புல்லர்கள் என்பார்கள். வெயிலில் சீக்கிரமாக கருகிப் போகக்கூடிய இந்தப் புல், மனிதர்களால் மிதிக்கப்பட்டும், விலங்கினங்களால் மேயப்பட்டும், அழிந்து போகிறது. என்றாலும் மனிதன் இந்த புல்லின் அற்பமான பெயரை மாற்றி, அதன் தரத்தை உயர்த்தி, இன்று உலகத்தையே வாழ வைத்துக் கொண்டிருக்கிறான். இன்று பூமியின் சகல உயிர்களின் வாழ்வாதாரமே புல் தான்!

பூமியின் கடைமட்ட மனிதர்கள் முதல் (தெருவோர பிச்சைக்காரன், கிராம விவசாயி, பட்டணத்து நடுத்தரவாசி, பணக்காரர்கள்) உயர்மட்ட மனிதர்கள் வரை (லட்சாதிபதிகள், கோடீஸ்வரர்கள், தேசத்தின் அதிகாரிகள், இராஜாக்கள், உலக ஐசுவரியவான்களின் பட்டியலில் இருப்பவர்கள்) எல்லோருக்கும் இன்றளவும் உயிர் காக்கும் உணவாக இருந்து வருவது புல் இன தாவரங்களில் இருந்து வரும் தானியங்கள் தான். ஏழை ஜனங்கள் சாப்பிடும் கூழ், கஞ்சி, களி முதற்கொண்டு, நடுத்தர வர்க்கத்தினரின் சாதம், சிற்றுண்டி வகைகள் வரையிலும் எல்லாமே புல் வகை உணவுகள் தான். நம் பாரத தேசத்தின் உயர்மட்ட மனிதர்களின் 5 நட்சத்திர, 7 நட்சத்திர **(5 star, 7 star)** உணவு வகைகள் எல்லாமே **(Bread, bread Sandwich, burger)** புல்தான்! அமெரிக்காவில்? அங்கேயும் இதே புல்தான்!

மனிதன் ஏதேனிலிருந்து தள்ளப்பட்டபிறகு அவனை வாழ வைத்துக் கொண்டிருப்பதே இந்த புல் இனம்தான். இல்லாவிட்டால் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் மனுக்குலமே அழிந்து போயிருக்கும். மட்டுமல்ல சகல ஜீவராசிகளும் இல்லாமல் போயிருக்கும்; அவைகளும் புல்லை நம்பித்தான் வாழ்கின்றன. *“மனுபுத்திரர் தாங்கள் மிருகங்களைப் போல் இருக்கிறார்களென்பதை அவர்கள் காணும்படிக்கு ... பிர 3:18.”* விஞ்ஞான உலகம் மனிதனையும் ஒரு மிருகம் என்று நினைக்கும் அளவில் தான் மனிதனின் வாழ்க்கை இருக்கிறது. பல விஷயங்களை இதற்கு உதாரணமாக காட்டலாம்; உணவு பழக்கங்களும் அதில் ஒன்று. *“தங்கள் மகிமையை புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக (resemblance) மாற்றினார்கள். சங். 106:20.”* தேவனைப் போன்ற மகிமையுடன் படைக்கப்பட்டிருந்த மனிதனின் கூடாரமாகிய சரீரமும் மகிமையுடையதாகவே இருந்தது. நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கீழே அவன் சாத்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது; சாத்தானின் வார்த்தைகள் அவன் இருதயத்தில் விழுந்து முளைத்தபோது ... இந்த அவலம், அலங்கோலம் நடந்தேறியது. *“திராட்சைசெடி வதங்கி, அத்திமரம் சாரமற்றுபோகிறது; மாதளை, பேரீச்சம், கிச்சிலி முதலிய வெளியின் செடிகள் எல்லாம் வாடிப்போயின; சந்தோஷம் மனுபுத்திரரைவிட்டு ஒழிந்துபோயிற்று. யோவே. 1:12.”* ஆசீர்வாத நியமம் மாற்றப்பட்டுப் போன பூமியால் ஏதேனின் பழவகைகளை மனிதனுக்குப் போதுமான அளவுக்கு விளைவிக்க முடியாமல் போனது. வேறு வழியில்லாமல் மனிதன் மிருகத்தின் உணவைக் கைப்பற்ற வேண்டிய கட்டாய சூழ்நிலை வந்தது. புல் வகைகள் அதில் பெரும்பகுதியை பிடித்தது என்பதைப் பார்த்தோம். இதனால் மிருகங்களுக்கு உணவு பற்றாக்குறை ஏற்பட்டது.

*“வெளியின் மிருகங்களும் உம்மை நோக்கிக் கதறுகிறது; நதிகளில் தண்ணீரெல்லாம் வற்றிப்போயிற்று; அக்கினி வானாந்தரத்தின் மேய்சல்களைப் பட்சித்துப்போட்டது. யோவே. 1:20”*

இந்த நிலை மாறுமா? நிச்சயமாக மாறும் என்று தீர்க்கதரிசன வார்த்தைகள் முன்னறிவிக்கின்றன.

*“கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவன் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதடையச்செய்து, அதன் வனாந்தரத்தை ஏதேனைப் போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும். ஏசா. 51:3.”*

*“வெளியின் மிருகங்களே, பயப்படாதேயுங்கள்; வானாந்தரத்திலே மேய்ச்சல் உண்டாகும்; விருட்சங்கள் காய்களைக் காய்க்கும்; அத்திமரமும் திராட்சச்செடியும் பலனைத்தரும். யோவே. 2:22.” “நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன்; பூமி தன் பலனையும், வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும். லேவி. 26:4”*

## விஞ்ஞானிகளுக்கெல்லாம் விஞ்ஞானி:

இப்படிப் புகழப்பட்டவர் சார்பியல் கோட்பாடை உலகத்திற்குத் தந்த ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்ற இளம் விஞ்ஞானி. எடை, வடிவம், நேரம் உட்பட இந்த பிரபஞ்சத்தின் எந்தக் காரியமும் நிலையானது அல்ல, நிலையான ஒன்று இருக்குமானால் அது ஒளி மட்டுமே என்றார் இவர். எல்லாம் மாயையானது என்ற அறிவியல் உண்மையை உலகத்திற்கு வெளிப்படுத்தியவர் இவர்.

மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான். பிர. 1:2.

தேவன் ஒளியாயிருக்கிறார், **(God is light)** அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. 1 யோ. 1:5

தேவனைப் பற்றின சரியான வெளிப்பாடு இல்லாதிருந்த ஐன்ஸ்டீனுடைய வார்த்தைகளைக் கவனியுங்கள். ஒளி மட்டும் நிரந்தரமானது என்பதைக் கண்டுபிடித்தார்; ஆனால் தேவன்தான் ஒளியாயிருக்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. விஞ்ஞானிகளின் மூளையறிவு பல கண்டுபிடிப்புகளுக்கு வித்திட்டன. ஆனால் ஏன்? எப்படி? எதனால்? என்ற கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் திணறியது. துவக்கமும் தெரியாமல் முடிவும் புரியாமல் ஆகாயத்தில் ஊஞ்சல் கட்டி ஆடும் விஞ்ஞானம்! கயிறு அறுந்து ஆகாயத்தில் தூக்கியெறியப்பட்ட விஞ்ஞானம்!

பிரபலமான சார்பியல் கோட்பாட்டை இவர் உருவாக்கியபோது இவரின் வயது 26தான். ஐன்ஸ்டீனின் **"$E=mc^2$"** என்பது விஞ்ஞானிகளின் புனித சின்னம் ஆகும். ஐன்ஸ்டீன் எதைச் சொன்னாலும் அது பத்திரிக்கைகளில் தலைப்புச் செய்தியாக வந்தது. ஒரு முறை இஸ்ரேல் நாட்டின் ஜனாதிபதி பதவி கூட இவரைத் தேடி வந்தது; அதை ஏற்க இவர் மறுத்து விட்டார். மிகப் பெரிய சக்தியை மிகச் சிறிய எடையுள்ள ஓர் அணுவிலிருந்து உண்டாக்க முடியும் என்ற சார்பியல் தத்துவத்தின் அடிப்படையில்தான் அணுகுண்டுகள் உண்டாக்கப்பட்டன.

புகழின் உச்சியில் இருக்கும்போது; இவரிடம் உங்களுக்கு எதைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் அதிகம்? என்று ஒருவர் கேட்டார். கடவுள் இந்த உலகத்தை எப்படிப் படைத்தார் என்பதை கண்டுபிடிக்க வேண்டும் என்று கூறினார்! ஆனால் தேவனோ அதைக் கண்டுபிடிக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்!

*"அவர் (தேவன்) சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; (set the world in their heart) ஆதனால் தேவன் ஆதிமுதல் அந்தம் மட்டம் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான். பிர. 3:11"*
அதாவது, தேவனை அறியாத, வெறும் மூளையறிவுடன் யோசிக்கிற, சிந்தனை செய்கிற மனிதர்களைப் பற்றிதான் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களால் எதையும் கண்டுபிடிக்க முடியாது என்பது முன்னதாகவே நாம் அறிந்திருக்கிறோம். தேவன் மூளையறிவுக்கு அப்பாற்பட்டவர். ஆனால் இந்த வசனம் நம்மைப் பற்றி அல்ல என்று அறிகிறோம். நாம்தான் தேவன் உலகத்தை எப்படிப் படைத்தார் என்பதைக் கண்டுபிடித்து விட்டோமே!

விஞ்ஞானிகளின் மூளையறிவை நம்முடைய வெளிப்பாட்டின் அறிவு தோற்கடித்தது! இப்படி விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்க முடியாத பல காரியங்களை நாம் கண்டுபிடித்த போதும், அவர்களின் கேள்விக்குறிகளுக்கு நாம் விடை சொன்ன போதும் ... அவர்களுடைய கண்டுபிடிப்புகளுக்கு கிடைத்திருக்கிற அங்கீகாரம் நம்முடைய கண்டுபிடிப்புகளுக்கு கிடைக்கவில்லையே, அது ஏன்?

பதில் தெரிந்திருக்கும்... நம்முடைய ஆராய்ச்சிகள் கண்காணாத அளவில் நடப்பதால் அதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை, நம்பவும் முடிவதில்லை. கண்காணாத உலகத்தில் பரிசுத்தாவியானவரின் உதவியுடன் ஆராய்ச்சி செய்து நாம் வெளியிடும் முடிவுகள் அவர்களுக்குப் பைத்தியக்காரத்தனமாக தோன்றுகிறது. ஏனென்றால் எந்தவொரு மனிதனும் தான் பிறந்தநாள் முதற்கொண்டு கண்களால் காணக்கூடிய உலக காரியங்களுடன்தான் தொடர்பு வைக்கிறான், பழகி வருகிறான். கண்காணாத காரியங்களைப் பற்றி அவனுக்குத் தெரிவதில்லை, சொல்லவும் ஆள் இல்லை.

ஜென்மசுபாவமான மனுஷனோ **(natural man** – உலக மனிதர்கள் – தேவனை அறியாதவர்கள் – இயேசுவை ஏற்றுக் கொள்ளாத பெயர்க்கிறிஸ்தவர்கள்) தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். 1 கொரி. 2:14

இயேசு, இரட்சிப்பு, சொந்த இரட்சகர், கிருபை, கர்த்தர், பரலோகம், நித்தியஜீவன், ஆத்துமா, இப்படிப்பட்ட வார்த்தைகளை சுவிசேஷகர்கள் சொல்லும்போது உலக ஜனங்களுக்கு அது புரிவதில்லை. அது அவர்களுக்கு பதிராக, வேடிக்கையாக, பைத்தியக்காரத்தனமாக, புலம்பலாக தோன்றுகிறது. திட்டியபடி, முணுமுணுத்தபடி, கிண்டலடித்தபடி போகிறார்கள். ஏன் இப்படி

நடக்கிறது? இயேசுவும் அவரைப் பற்றின காரியங்களும் ஆவிக்குரியவைகள். அவைகளை இந்த பூமிக்குரிய ரீதியில் பார்க்க முடியாது, மாம்சீக கண்களினால் அவற்றை காணவும் முடியாது.

என்றாலும் சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது மனிதர்கள் இரட்சிக்கப்படுகிறார்களே, அது எப்படி? உலகத்தையே பார்த்துப் பழகிய மனிதனை, இதுவரை அவன் காணாதிருந்த ஒரு ஆவிக்குரிய உலகத்திற்குள் இழுக்க வேண்டுமானால் அது கண்காணும் ரீதியில் இருக்கிற இந்த உலக காரியங்களினால் முடியாது. அதற்கு ஆவிக்குரிய உலகத்திலிருக்கும் (பரலோகத்தில்) ஒரு ஆவிக்குரிய சக்தியால் தான் (அதுதான் தேவன்) முடியும். அதுதான் இரட்சிப்பின் நேரத்தில் நடக்கிறது.

இரட்சிப்பின் செய்தி ஒரு நற்செய்தி அறிவிக்கும் சுவிசேஷகனிடமிருந்து கடந்து போகிறது. நற்செய்தி சொல்லும் சுவிசேஷகன் ஒரு ஆவிக்குரியவன். (மனிதன் ஒரு ஆவி – ஆவிக்குரியவன், நாம் பார்க்கிற சரீரம் மனிதனல்ல, அது அவன் தங்கியிருக்கும் கூடாரம்தான்). அவனிடமிருந்து வெளியேறும் இரட்சிப்பின் செய்தி – தேவனுடைய வார்த்தைகள், அதுவும் ஆவிக்குரியவைதான்! (வார்த்தைகளைக் காதுகளால் கேட்க முடிவதாலும், கண்களினால் பார்த்து, வாசிக்க முடிவதினாலும் அதை பூமிக்குரியவை என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆவிக்குரிய ரீதியிலான வார்த்தைகளை இந்தப் பூமிக்குரிய ரீதியில் நம்முடைய ஐம்புலன்கள் **download** (மாற்றம்) செய்கின்றன, அவ்வளவுதான். உண்மையில் வார்த்தைகள் கண்காணக்கூடிய சரீரத்திற்குள் மறைந்திருக்கும் கண்களால் காணமுடியாத ஆவி மனிதனிடமிருந்துதான் வெளியேறுகிறது. அதாவது பேசுவது சரீரமல்ல, ஆவிதான். அதை பதிவிறக்கம் செய்து உலகத்துக்குள் கொண்டு வருவது கண், காது, கைகள் போன்ற உடல் உறுப்புகள்.

இரட்சிப்பு என்ற இந்த ஆவிக்குரிய மகத்தான காரியம் இந்த பூமிக்குரிய மனிதனிடம் நிறைவேறுவதற்காக ஆவியாகிய தேவனின் செயல்பாடுகளைக் கவனியுங்கள். கடவுள் இந்த உலகத்தை எப்படிப் படைத்தார் என்ற கேள்விக்குப் பதிலை ஐன்ஸ்டீனால் தன்னுடைய விஞ்ஞான அறிவின் அடிப்படையில் ஏன் அறிந்து கொள்ள முடியாமல் போனது என்பது இப்போது புரிந்திருக்கும். கண்காணாத தேவனுடைய மகத்துவங்களை ஆராய பூமிக்குரிய அம்சங்கள், உபகரணங்கள், தகவல்கள் (**datas**) உதவாது. கண்காணாத உலகத்தை, தேவனை, ஆவிக்குரியவைகளை ஆராய தேவையான **data** ஆவிக்குரியவையாகத்தான் இருந்தாக வேண்டும். தேவன் ஒருவர் உண்டென்று ஐன்ஸ்டீன் நம்பினார். என்றாலும் அதனடிப்படையான காரியங்களை ஆராய அவர் தேவனைச் சாராமல், பரிசுத்தாவியானவரிடம் போகாமல்; தன் சுய அறிவை சார்ந்து, ஆராய்ச்சி கூடத்துக்குள் போய்விட்டார், அதனால் அவருடைய கேள்விக்கு பதில் கிடைக்காமல் போனது.

பூமியின் மீது காணப்படும் சகல காரியங்களையும் குறித்து பல்வேறு ரீதிகளில் ஆராய்ச்சிகளை செய்து வருகின்ற விஞ்ஞானிகளுக்கு சத்தியம் அறிவிக்கப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. உலகளாவிய விஞ்ஞானிகள் தேவனைச் சரியானபடி அறிந்து கொள்வார்களானால்; அறிந்து கொண்டு ஆய்வுகளை மேற்கொள்வார்களானால்; அவர்களின் ஆராய்ச்சிகளின் முடிவு பூமியை மீண்டுமாக ஏதேனாக்க (பரலோக மயமாக்க) போதுமானதாக இருக்கும் என்பது சர்வ நிச்சயம்.

கூவம் ஆறு ஓடிக்கொண்டிருக்கும் சென்னைப் பட்டணத்தை சிங்கார சென்னையாக்கும் ஒரு திட்டம் தமிழ் நாட்டில் (தென் இந்தியா) செயல்படப் போகின்றது. இதற்கான ஒப்பந்தம் சிங்கப்பூரின் கம்பெனி ஒன்றுடன் செய்யப்பட்டு மார்ச்சு 19, 2010 அன்று கையெழுத்திடப்பட்டுள்ளது. நல்லது, பலகோடி செலவில் இந்தத் திட்டத்தை அவர்கள் நிறைவேற்றி முடிக்கட்டும். ஆனால் பூமியையே பரலோக மயமாக்கும் மிகப் பெரிய சவால் திட்டத்திற்கான உபகரணங்கள் நம்மிடமுண்டு... அது இந்த பூமிக்குரியவை அல்ல, கண்களால் பார்க்க முடியாதவை.

அவை:

1. நாம் (நாம் ஒரு ஆவி – தேவனைப் போலிருக்கிறோம்)
2. நம்முடைய விசுவாசம்
3. விசுவாசித்து பேசும் வார்த்தைகள் – நம் விசுவாச அறிக்கை.